# ஆதாரக் கல்வி

3 5-6

செப்டம்பர் - அக்டோபர், 1950

TN3ளி11, N78
N50 . 3 . 5-6
208928

20



# ஆதாரக்கல்வி

மக்களிடம் இயற்கையாக அமைந்துள்ள சக்தியை எழுப்பி சமுதாயத்துக்குப் பயன்படச்செய்வதே ஆதாரக் கல்வியின் நோக்கமாகும்.

அறிவோடு செயலும் கலந்து, மனோவளர்ச்சியும் அடைந்து, பொறுப்பு உணர்ச்சியும் ஏற்பட்டு, சமூகத்துடன் தொடர்பு கொண்டு உன்னத லக்ஷியத்துக்கு உழைக்கக் குழந்தைகளைத் தயார் செய்யும் வழியில் ஆதாரக் கல்வி வகை செய்கிறது.

MADRAS

ஆதாரக் கல்வி காரியாலயம்,
நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,
ரு சந்தா ரூ. 3] சென்னை. [தனிப்பிரதி அணா 4

# பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | மன்னார்குடி மாநாடு —தலையங்கம் | ... | 1 |
| 2. | ஆதாரக் கல்வி நாகரீக வளர்ச்சியை ஒட்டியதே | ... | 3 |
| 3. | மூலாதாரக் கல்வியே முனிவாருளிய உபநிஷத உண்மைகள்—"ஆசி" | ... | 5 |
| 4. | போர்ட் செயின்ட் ஜியார்ஜ் கெஜட் சர்க்கார் உத்தரவுகள் | | 7 |
| 5. | உடனே உதவுக | ... | 8 |
| 6. | கணக்கு (5) | ... | 9 |
| 7. | ஒரு சொல் கேளீர்—சி. பாலசுப்பிரமணியம், காரியதரிசி | | 12 |
| 8. | நல்லவர் கெட்டவர்—சேக்கிழார் | ... | 14 |
| 9. | ஆசிரியர் உள்ளம்—"சிகி" | ... | 18 |
| 10. | எதிரொலி—"அரசியல்—V, ராதாகிருஷ்ணு, B. Com. | | 20 |
| 11. | பேச்சுப்போட்டி 1, 2, 3, 4 | ... | 22 & 28 |
| 12. | இலக்கியத்திலும் கலாசாரத்திலும் ஒற்றுமைகாண். | ... | 29 |
| 13. | முதியோர்க் கல்வியைப் பரப்ப | ... | 30 |
| 14. | சர்வகலாசாலைகளில் ஒழுக்க நெறியை ஆதாரமாகக்கொண்ட சமுதாயமே தேவை | ... | 31 |
| 15. | ஆசிரியர்கள் கோரிக்கை | ... | 32 |
| 16. | பெற்றோர்ச் சங்க விழா! | ... | 34 |


## நமது இன்ப வாழ்வு

ராம. பொன்னையா.

நமது இன்ப வாழ்வு
நமது இன்ப வாழ்வு
நமது இன்ப வாழ்வு !

அறிவு, ஆன்மா உடலும் நன்கு
அமைந்து வளரும் நிலையிலே
அருமைத் தொண்டு ஆற்றுகின்ற 1

நமது தேவை நாமே பார்த்து
நாட்டில் வாழ்வு வாழவே
நாளும் செய்கை மூலம் அறியும் 2

மக்கட் பணியே செய்து ஒன்று
வாழு கின்ற முறைமையும்
மனத்தில் கொண்டு ஓங்குகின்ற 3

இனிய சாந்தி, அன்பு, பொறுமை
எழிலும், விடா முயற்சியும்
இழையாய் நூலை நூற்று அடையும் 4

சமூக, இயற்கைச் சுற்றுச் சூழ்வும்
சார்ந்த தொழிலும் ஆதவா-
தாரக் கல்வி பயிலு கின்ற 5


வரும் உலகின் மன்னர் தம்மை
வளர்த்துக் கலையில் மிளிரவே
வைக்கும் தொழில் வேண்டுகின்ற 6

தப்பு ரவில் கவனம் செலுத்தித்
தூய பொன்னைக் காணுவோம்
துன்பம் இல்லை; தொல்லை இல்லை 7

('நமது ஜென்ம பூமி' என்ற சந்தம்)

சமூக அநீதியானது ஒரு குப்பையைப்போன்றது. குப்பை யிருந்தால் நிச்சயமாக ஈ மொய்க்கும். சமூக அநீதிகளை நீக்க எல்லோரும் கல்வி பெறுதலவசியம். அப்பொழுது முதியோர் கல்வியைப் பரப்புவதில் தயக்கம் ஏன்?

**காகாகலேல்கார்.**




கல்வி 3 | விக்ருதி, ஆவணி—செப்டம்பர் 1950 | கலை 5

# மன்னார்குடி மாநாடு

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியில் அடங்கி வாழ்ந்தோம். அடிமைச் சுழல்வளியில் அகப்பட்டு அல்லலுற்றோம். ஆசிரியச் சமூகம் அன்னிய ஆதிக்கத்தின் பயனாய் அடக்கி யாளப்பட்டது. கல்வி முறை அடிமை வாழ்க்கைக்கே அரண் வகுத்தது. அடக்குமுறை வன்மையினால் அகப்பட்டது போதும் என்ற உள்ளப் பாங்கைப் பெற்றிருந்தது ஆசிரியச் சமூகம். கல்வி ஓங்கவில்லை. நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் அறிவற்றவர்களாகவே இருந்தனர்.

இந்தியா சுதந்திரம் பெற்று மூன்று ஆண்டுகள் முடிந்தன என்றாலும் நம் நாட்டுக்குகந்த முறையில் கல்வி முறையில் இது வரை ஒரு முன்னேற்றமும் ஏற்படவில்லை அடிமை மனப்பான்மை ஒழிந்து சுதந்திர எண்ணமுள்ள இந்தியர்களை உருவாக்குவதற்கு சீக்கிரத்திலேனும் கல்வி முறையில் முன்னேற்றம் ஏற்படும் என்பதற்கும் அறிகுறிகளும் காணப்படவில்லை. இத்தகைய சீர்கேட்டிற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது ஆசிரியச் சமூகம். கல்வி நிலையை உயர்த்தவும் கல்விக்காகக் காலமுற்றும் தொண்டாற்றும் ஆசிரியச் சமூகத்தை வளப்படுத்தவும் ஆசிரிய மாநாடுகள் கூட்டப்படுகின்றன.

தற்போது கூடுகின்ற மாநாடுகள் மேடை மினுக்குகளாலும், அச்சு விளம்பரங்களாலும், மாலைகளைப் மலைகளென பெறுகின்ற போட்டியாலும், பதவி, புகழ், வேட்டையாலும் சூறையாடப்பட்டு, அவை எத்தகைய பணியாற்ற எழுந்ததோ அப்பணியையும் நோக்

கத்தையும் அறவே மறக்கச் செய்துவிடுகின்றன. மாநாடுகள் கூட்டப்படுகின்ற நோக்கம் மறக்கப்படும் வகையில் புற அழகுகளும், டாம்பீகமும் அதனைச் சூழ்ந்து கொள்ளுகின்றன. மாநாடுகள் கட்சிச் சண்டை பல போடுவதற்கும் பின் காக்காய்க் கூட்டம்போல் ஓடுவதற்குமே உபயோகிக்கப்படுகின்றன.

காலத்திற்கு ஏற்றவாறும், தேவைக்குப் பொருந்தியவாறும், ஆசிரியர்களின் தனிப்பட்ட கருத்துக்களை அனைவரும் ஒன்றுகூடி தெளிவுபட உரைத்து, அரசாங்கத்தின் போக்கிற்கும் திட்டத்திற்கும் உகந்ததாக இருக்கிறதா என்று சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து அவைகளைக் கண்டித்தோ ஆதரித்தோ, அரசாங்கத்திற்குத் தகுந்த யோசனைகளைக்கூறி, தேவைகளைப் பெறும் நிலைக்குச் சூழ்நிலையை உண்டாக்குவதே மாநாட்டின் நோக்கமாக இருக்கவேண்டும். மேலும் தேச ஐக்கியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் ஏற்ப கல்வித் திட்டத்தை அமைப்பதே மாநாட்டின் மாபெரும் நோக்கமாக இருத்தல்வேண்டும். இத்தகைய நோக்கங்களே மன்னார்குடி மாநாட்டின் நோக்கங்களாக இருக்குமென்று நம்புகிறோம். மேலும் கீழ்க்கண்ட திட்டங்களை மாநாடு வரவேற்று செயலாற்றும் என்று எண்ணுகிறோம்.

**1.** ஆசிரியச் சங்கங்கள், முனிசிபல், எய்டெட், கார்ப்பரேஷன், லோகல் போர்டு, மானேஜ்மெண்டு முதலிய சாதிப் பாகுபாடுகளற்ற கிராம, பிர்க்கா, தாலூக்கா, ஜில்லா, மாகாணச் சங்கங்களாக அமைக்கப்படவேண்டும் ஆசிரியர்கள் யாவரும் ஓர்குலம், ஓர்இனம் என்ற மனப்பான்மை வளரும் வகையில் ஆசிரியச் சமுதாயச் சங்கங்கள் ஒன்ருக அமைக்கப்படவேண்டும்.

**2.** ஆசிரியர்களின் தேவைக்கு வேண்டியவற்றையும், பொது ஜனங்களுக்குக் கல்வி புகட்ட அரசாங்கத்தோடு தொடர்பு பெற்றிருக்கவும், அவர்களுக்கென ஆசிரியர்கள் குழாங்களின் ஆதரவில் ஓர் பத்திரிகை நடத்தவேண்டும். அன்றி அவர்களுக்கென உழைத்து வரும் பத்திரிகைகளை ஆதரித்து அரசாங்கத்திற்கும் பொது ஜனங்கட்கும் தங்களாலியன்ற உதவியைச் செய்யவேண்டும்.

**3.** உறங்கும் ஆசிரியர்களைத் தட்டி எழுப்பி, உணர்ச்சியூட்டி, அவர்களின் பணியைச் செய்யச் செய்வதோடு, அரசாங்கத்தில் காணும் மாறுதல்களும், அதற்கு ஆசிரியச் சமூகத்தில் ஏற்படும் எதிரொலியும் ஆகிய இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து நடுநிலையை இருவருக்கும் எடுத்துரைக்கவும் முழுநேர நிரந்தரத் தொண்டர்களை நியமிக்கவேண்டும். மேலும், அரசாங்கமோ, கல்வி சீர்திருத்தக்காரர்களோ கல்வி முறையில் சீர்திருத்தங்காணில், அவைகளை ஆசிரியர் குழாங்களில் கூறி, அதன் முடிவைப் பொது ஜனங்கட்கும் அரசாங்கத்திற்கும் எடுத்துரைக்கும் வகையில் அவர்கள் பணியாற்றவேண்டும்.



**4.** மாநாடுகளோ அல்லது இச்சங்க ஆதரவில் நடத்தப்படும் எந்த நிகழ்ச்சிகளின் வாயிலாகவும் பெறக்கூடிய பணத்தை நிர்வகித்தலில் பொது ஜனங்களும் அரசாங்கமும் ஐயங்கொள்ளாத நிலையில் தக்கமுறையில் பொறுப்போடு போற்றிக்காக்க வழிவகைகள் செய்யவேண்டும். சங்கத்தின் பேரில் பெறுகின்ற தொகையைப் பேங்கில் போட்டு, கிராம பிர்க்கா, தாலூக்கா, ஜில்லா, மாகாணச் சங்கங்கள் குறிப்பிட்ட சதவிகிதத்தில் அவ்வப்பொழுது, பணி ஆற்றவல்லும் நிலைமைக்குப் பணம் எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

இந்நான்கு அம்சத் திட்டத்தினை வரவேற்று தீர்மானங்களாக்கி விடுவதோடு மாநாட்டின் நோக்கம் முடிவடைந்து விடவில்லை. அது ஆற்றவேண்டிய பணிகள் பல. தற்பொழுது காணப்படும் சூழ்நிலையில் ஆசிரியர்களின் உடனடியானத் தேவைகளைப் பூர்த்தி செய்து வைப்பது இம் மாநாட்டின் நோக்கமாக இருக்கவேண்டும்.

ஒரே கிரேடில் (grade) உள்ள ஆசிரியரின் சம்பள விகிதங்களும், விடுமுறை சலுகைகளும் வேறுபடுகின்றன. ஆசிரியர்களுக்கு வசிக்க இடவசதிகள் அளிக்கப்படவில்லை. ஆரம்பப் பள்ளிகளை ஏற்று நிர்வகிக்கும் நிர்வாகக் குழுவில் அரசாங்கமோ, எய்டடோ, லோகல் போர்டோ, தனிப்பட்ட கமிட்டிகளோ ஏற்று நடத்தும் எப்பள்ளிகளாயினும், அங்கே ஆரம்ப ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் பிரதிநிதித்துவம் அளித்தால்தான் ஆசிரியர்களின் தேவைகளைப் பொறுப்பாளர்களுக்கு உணர்த்தமுடியும். இவைகளையும் மன்னார்குடி மாநாடு நன்கு ஆலோசித்து செயல்முறையில் ஆற்ற வழிகோலும் என்று நம்புவதோடு ஆசிரியர்களின் அந்தஸ்து, கண்யம், பெருமை, உரிமை யாவற்றையும் உயர்த்தும் அளவிற்கு பாடுபட ஆண்டவன் அருள்புரிவாராக.

---

# ஆதாரக் கல்வி நாகரீக வளர்ச்சியை ஒட்டியதே

*மக்களினத்தின் சரித்திர ஆரம்ப காலத்தில் மனிதன் ஒன்றுமே தெரியாமல் இருந்தவன் எல்லாவற்றையும் எப்படிக் கற்றுக்கொண்டான்? மற்ற பிராணிகளிடமிருந்து அவனைத் தனியே இனம் பிரித்துக் காட்டுகிற விசேஷப் பண்புகளை அவன் எவ்வாறு பெற்றான்? இவற்றை ஆராயின் இருவழிகள் புலப்படும். ஒன்று தன் கவனத்தைச் செலுத்திக் கூர்ந்து அறிந்தது. மற்றது அவன் செய்துபார்த்துச் சோதித்துக் கற்றது. முதலாவதாக அவன் இயற்கையைக் கூர்ந்து கவனித்தான். பிறகு தானே அதைச் செய்தான்; பொருள்களைத் தானே அமைக்கத் தொடங்கினான். புலன்களைப் பயன்படுத்தினான்; வேலைகளை நுட்பமாய்ச் செய்ய கைகளை உபயோகித்தான்; பிறகு புதிய சாதனங்*

களைச் செய்தான். உள்ளுணர்வு—பகுத்தறிவு—கற்பனைத்திறன் முதலியவற்றால் எதிர்த்துவந்த இன்னல்களைச் சமாளித்தான். இயற்கையில் வழங்கும் அடிப்படையான பொது நியதிகளையும் தன் வேலைக்குரிய கிரமத்தையும் படிப்படியாக அறிந்து கொண்டான். சயன்ஸ் என்ற கலைக்கு இவையே அஸ்திவாரம். இயந்திரம்போல் உழைப்பவனாக இருந்ததுபோய் அறிவியல் ரீதியாக உழைப்பவனாகிறான். தன் கையின் துணையாலும் தான் செய்துகொண்ட முரட்டுக் கருவிகள், சாதனங்கள் இவற்றின் துணையாலும் உழைத்து வருகையில் உணர்ந்த பொது நியதிகளுக்கு மீண்டும் பொது உருவம் கொடுத்தபோது தத்துவ சாஸ்திரம் பிறந்தது. இயற்கையைத் தன்வசப்படுத்தி ஒழுங்குமுறையில் வைத்த பிறகு தன்னைப்பற்றிச் சிந்திக்கிறான். ஆக்கல், அழித்தல், சேதனம்—அசேதனம்— இவைகளை ஆராய்ந்து தன் சிந்தனையை உள்முகமாகத் திருப்பி உடலை இயக்குவிக்கும் பொழுது மற்று தத்துவம் பிறக்கிறது. ஆன்மக் கலை உதிக்கிறது.

இயற்கையில் மனிதன் தனியாக உழைப்பதில் வெற்றியில்லாமை கண்டு அதே துறையில் தன்னைப் போல் உழைப்பவர்களின் கூட்டுறவைப் பெறுகிறான். மெல்ல வமிசம், சாதி, வகுப்பு, சமுதாயம் என்றெல்லாம் ஏற்பட்டன. இதிலிருந்து சமூக வாழ்க்கையும், ஆட்சி முறையும் பிறந்தன. தன் உரிமையைக் காத்துக்கொண்டு பிறர் உரிமைகளில் குறுக்கீடாக இருக்காதிருக்க சமூக உரிமைகளையும், அரசியற் கடமைகளையும் மேற்கொண்டான். பிறகு வாழ்க்கையில் நீதி, சட்டம், அரசியல், கொள்கை, செயல் அளவுகளில் இடம் பெற்றன.

இங்ஙனமாகக் காட்டு மிராண்டியாக இருந்த மனிதன் படிப்படியாக நாகரீகம் அடைகிறான்.

குழந்தை தன் புலன்கள் தொழிற்படத் தொடங்கும் நிலையில் நாகரீகமற்ற பண்டைக் காட்டு மிராண்டியை ஒத்தவன் என்று கூறலாம். கல்வி மூலந்தான் அவன் வளர்ச்சி பெற்று நாகரீகம் அடையவேண்டியவன். ஆனால் இப்போதுள்ள கல்வி மனிதனை மிருகமென்றே கருதி மிருகமாகவே நடத்துகிறது. மாணவர்களைக் கிளிகள்போலத் திருப்பிச் சொல்லச் செய்கிறார்கள். நாய்க்குட்டிக்கும் குரங்குக்கும் கற்பித்திருப்பதைப்போல மாணவனுக்கும் சில வித்தைகள் கற்பிக்கிறார்கள். மாணவன் இவற்றின் முறையையோ இவற்றில் பொதிந்து கிடக்கும் பொருளையோ உணர்ந்துகொள்ளாமல் இயந்திரம்போல் இவ்வித்தைகளைச் செய்கிறான். இந்த முறைக்கு ‘கல்வி’ என்பது பொருத்தமல்ல.

தனி மனிதனும் மக்கள் இனமும் இயற்கையான எந்த முறையில் வளர்ச்சி பெற்றார்களோ, அந்த முறையிலேயே அவனுடைய கல்வியும் சென்றிருக்குமானால் அவன் இன்னும் மேலான கல்வியை சீக்கிரத்திலேயே பெற்றிருப்பான். அம்முறையில் அவனுடைய மூளை மட்டுமன்றி அவனுடைய திறன்கள் யாவும் பயிற்சி பெற்றிருக்கும். பயிற்சியின் பயனாய் வளர்ச்சியும், விரிவும், வலிமையும் பெற்றிருக்கும். அவனுடைய கற்பனைத்திறனும் ஆக்கத்திறனும் பயனுள்ள வேலையாக மலர்ச்சியடையும். அவன் சித்தசக்தி வளரும்: குணச் சிறப்புகள் யாவும் ஒருமித்து வளர்வதின் வழி ஒரு பெருமித நடையுள்ள மனிதனாகிறான். (பக்கம்-5)



# மூலாதாரக் கல்வியே முனிவரருளிய உபநிஷத உண்மைகள்.

## தைத்திரீய உபநிஷதம்

## “ஆசி”

### 1. சிக்ஷாவல்லி - பயிற்றுமுறை.

மறையோளிர்வு மகிழ்ச்சி:

“நான் (ஸம்ஸாரமெனும்) மரத்தின் ஏவலாளன்; (எனது) புகழ் மலையின் உச்சிபோன்றது (வானளாவியது); (நான்) உயரிய தூய்மையன்; சூரியனில் (பரமன்)போல் நல்லமுதனாக இருக்கின்றேன். (நான்) இறை யொளியுடன் கூடிய பொருளோன்; நல்லறிஞன், இறப்பிலான், குறைவிலான் (யான்)” என்பது திரிசங்குவின் மறைவழியுரையாகும்.

[மறையொழுக்க நெறிமுறைகளை ஒன்பதாவது அனுவாகத்தில் விளக்கி, இந்த பத்தாவது அனுவாகத்தில் அவ்வாறு ஏற்ற ஒழுக்கத்தின் பயனாக திரிசங்கு என்ற முனிவர் வினைகள் தகர்க்கப்பெற்று, தானடைந்த ஆன்ம வுணர்வெனும் பேரின்ப நிலையின் மகிழ்ச்சியை வெளியிடுகின்றார்.

ஆன்ம வுணர்வின்றி, எவ்வளவு நுண்ணறிவு பெற்றிருப்பினும், மனத்தெளிவும் அமைதியும் ஏற்படாது; கிளைக்குக் கிளை தாவித்திரியும் குரங்குபோல் உலக விநோதங்களில் ஈடுபட்டு, மனங்கலங்கித் துன்பத்

---

வளர்கிற குழந்தைக்கு இந்தக் கல்விப்பயிற்சி மனோதத்துவ ரீதியாகவும் அவசியமானது. குழந்தைகளின் தன்மைகள் வெளிப்பட்டு விளக்கம் பெறுவதற்கு உடலுழைப்பு வேண்டும். அப்பொழுதுதான் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்யும். உடலுழைப்பு பழையமுறைப் பள்ளிகளில் இல்லையாதலால்தான் பிள்ளைகளின் மெலிவு, அழித்தல் துறையில் திருப்பி விஷமம் காலித்தனம் முதலிய நடத்தையில் வெளியிடப்படுகிறது. புதுமுறையில் ஆக்கச்சக்தியைக் காண்கிறோம்.

புதுத் திட்டத்தின்படி கல்வி வளர்ச்சியின் வேகம் அதிகமாவதோடுகூட வளர்ச்சியின் ஒவ்வொரு படியும் குழந்தையின் சொந்த அனுபவத்தோடு இயைபு கொண்டதாயும் ஒன்றுவதாயுமிருக்கும். அவனே அனுபவத்தைப் பெறுகிறான். எத்துறையிலும் தன் அறிவைத் திருப்பி அறிந்துகொள்கிறான். ஆராய்ச்சிக்கும் சிந்தனைக்கும் விதிகளைத் தானாகவே கண்டு உணரும்படி அவனுக்குப் பயிற்சி வருகிறது. சிந்தனை மனிதனுக்குகிறது.

தொழில்மூலம் கற்கும்பொழுது தொழில் நுணுக்கங்களை அறிவதோடு, அதனோடு தொடர்புடைய, கணித, விஞ்ஞான, பூகோள அறிவையும் பெறுகிறான். சிந்தனையும் அனுபவமும், அறிவியல் ரீதியாகச் செய்தலும் அவன் தொழிலைத் திறம்படச் செய்கின்றன. நல்ல பண்பட்ட மனிதனாகிறான்.

தையே ஒருவன் அடைவான். ஆன்ம வுணர்வு பெற்றதும், பரம்பொருளில் தன்னை இணைப்புக் கொண்டுவிட்டதால் உலக விநோதங்களுக்குக் காரணமும் தானென்றே உணர்வான். அவ்வாறு தானடைந்த உணர்வையே திரிசங்கு முனிவரும் நான் (ஸம்ஸாரமெனும்) மரத்தின் ஏவலாளன் என்றதால் வெளியிடுகின்றார்.

ஸம்ஸாரத்தை ஸாகரத்துடன் (கடலுடன்) உவமைகொண்டு கூறுவது பொது மரபு. அப்போது அது ஸம்ஸாரத்தின் துன்ப நிலையை விளக்கும். இங்கு மரமென்று கூறியது, விதையெனும் நுண்ணிய காரணத்தைக் கொண்டு வேரும் கிளையும், இலையும் மலரும், காயும் கனியுமாகிச் சிந்திப்போர் மனதை வியப்புடன் திகைக்கச் செய்வதுபோல், இத்தகையனென உரைக்கவொண்ணாது ஊஹித்தறியவேண்டிய இறைவனைக் காரணமாகக் கொண்டு, எல்லோரையும் வியப்புடன் திகைக்கச் செய்யும் வகையில் படைப்பு விநோதங்கள் நிறைந்து ஸம்ஸாரம் இலங்குகிறதென்ற வியப்பையும் திகைப்பையும் நன்கு குறிக்கவேயாகும். அதாவது, இந்த ஸம்ஸாரம் துன்பத்தைத் தருவதென்ற சிந்தனையே இன்றி, விநோதங்களில் ஈடுபட்டு அதுவே இன்பமென்று கருதி உழலும் நிலையைக் குறிக்கிறது. இந்த ஸம்ஸாரமெனும் மரம் வேரை மேலும் கிளை இலை முதலியவற்றைக் கீழ் நோக்கியும் கொண்டுளதாக மறை நூல்கள் விளக்குகின்றன. வைராக்கியம் (எதிலும் பற்று கொள்ளாமை) எனும் வாளால் இப்பெருமரத்தின் கிளைகளை அறுத்து வீழ்த்தி அடிமரத்தினும் அப்பாலுள்ள ஆணிவேரெனும் பரம்பொருளை யடையவேண்டுமென்றும் கூறுகின்றன. அன்றி, பிரம்ம விருக்ஷமென்று இறைவனை உயர்ந்து ஓங்கி வளர்ந்த மரமாகவும் மறைகள் விவரிக்கின்றன. ஆல், அரசு முதலிய மரங்களின் பெயர்கள் இறைவனைக் குறிக்கும் சொற்களாக வழங்கப்பட்டிருப்பதும் காணப்படும்.

பற்றற்ற மனப்பான்மை பெற்று பரம்பொருளுணர்வு ஏற்பட்டதும் அவனது புகழ் வானளாவியதாகிறது; அதாவது, விண்ணவரும் வணங்கத் தக்க புகழடைகின்றான். பரம்பொருளுடன் இணைப்புறுவதினின்று தடை செய்ய எவராலும் இயலாத சுயேச்சை பெற்றவனாகின்றான். இந்நிலையின் உணர்வையே எனது புகழ் மலையுச்சிபோன்றது (பர்வதாவியது) என்று திரிசங்கு முனிவர் கூறுகின்றார். மறையொழுக்க நெறிகளைக் கடைப்பிடித்து நிற்போனே தூய்மையன் எனக் கருதப்படுவான். உயரிய தூய்மையன் என்றது பரம்பொருளுடன் இணையுறுவதற்குத் தகுதியுற்ற தூய நிலை யடைந்திருப்பதைக் குறிக்கிறது.

ஒளிகளிற் சிறந்து விளங்குவது சூரியனே; சூரியனை நடுவிடமாகக் கொண்டு நாம் வசிக்கும் புவியுள்பட உள்ள கிரகங்களெல்லாம் நிலை கொண்டுள்ளனவென்றும் சூரியனின்றி உயிர்த்திருப்பது இயலாதென்றும் இக்காலத்து வானநூல் வல்லுனரும் உரைக்கின்றனர். இப்பெருமை, சூரியனில் பரம்பொருட் சக்தியின் இருப்பு மிகவினாலேயேயாகும். ஆகலாற்றான், பரம்பொருளின் உயருபாஸனைக் கருவியாக உபநிஷதங்கள் சூரியனைக் குறிப்பிடுகின்றன. அன்றி, அமுது நிறைந்திருப்போனாகவே உபாஸனை முறைகள் விளக்குகின்றன. இக் கருத்தினையே, சூரியனில் (பரமன்) போல் நல்லமுதுறை இருக்கின்றேன் என்பது உணர்த்துகிறது.





1. அரசாங்கப் பரீட்சைகள்— எலிமெண்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட் பரீட்சை—மார்ச் ஏப்ரல் 1953 ஆரம்ப விஞ்ஞானத்தில் திருத்தப்பட்ட பாடத்திட்டம்.

2. திருத்தப்பட்ட பாடத்திட்டம் கட்டாயமாக 6, 7, 8 வகுப்புகளுக்கு முறையே 1950–51; 1951 52; 1952–53, வருடங்களில் வைக்கப்படும்.

3. திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை ஒட்டி, முதன் முதல் எலிமெண்டரி ஸ்கூல் லீவிங் சர்டிபிகேட் அரசாங்கப் பரீட்சை 1952—53ல் நடைபெறும்.

4. 1952—53ல் நடக்கும் அப் பரீட்சைக்கு தனி நபரொருவருக்குக் கட்டணம் ரூ. 2-லிருந்து 2-8-0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது

G. O. Ms. No. 1770 எடுகேஷன் 12-6-50.

விதி 1. "ஸ்கேல் ஆப் கிராண்ட்ஸ்" என்ற தலைப்பின் கீழ்க்காணும் 'பண்டிட்' என்று கூறியதனுடன் மேலும் கூறப்படும் குறிப்பு.

மதராஸ் எடுகேஷனல் ரூல்ஸ் 13-வது விதியில் கூறப்பட்ட தகுதியைப் பெறாத ஒரு 'பண்டிட்' சென்னை, ஆந்திரா, அண்ணாமலை சர்வகலாசாலைகளால் நடத்தப்படும் வித்வான் பரீட்சைக்கு முன்புள்ள பிரிலிமினரி பரீட்சையில் தேறியிருப்பின் அவரை 12-வது விலக்கு விதியின்படி வேலையிலமர்த்தப்பட்டால் கிராண்டிற்குச் செகண்டரி கிரேட் பயிற்சிபெறாத ஆசிரியராகவே அங்கீகரிக்கப்படுவர்.

## ஆசிரியர்கள் பிராவிடண்டு பண்டு விதியில் திருத்தம்.

G. O. Ms. No. 1031 எடுகேஷன் 29-3-1950.

12. லைப் இன்ஷூரன்ஸ் பாலிசிகளின் பிரீமியம் தொகைக்காக பண்டிலிருந்து வாங்குதல்:—(a) நபர் முன்னதாகவே எடுத்துள்ள இன்ஷூரன்ஸ் பிரீமியங்களுக்கு அவர் விரும்பினால் பண்டிலிருந்து எடுத்துக்கொள்ள அனுமதிக்கப்படலாம். மேற்படி வாங்குதல் நபர் கட்டியுள்ள தொகைக்கு மேற்படாமலும்; (மானேஜ்மென்டாரின் பங்கு தவிர) பிரீமியம் கட்டுதல் வருடாந்திரத்திற் கொருதரம் செலுத்துதலாயும் இருக்கவேண்டும்.

---

பரம்பொருளுணர்வும் அதனால் ஏற்படும் ஒளிரவும் சேர்ந்து விளங்குவதையே (நான்) ஒளியொளியுடன் கூடிய போதனோன் என்பது குறித்து நிற்கின்றது. இப்பொருளை யடைந்த காரணத்தினாலேயே நல்லறிஞனும் மறப்பிலானும் (பிறவிக்கடல் நீந்தியோனும்), ஒரு வகையிலும் குறைவிலானும் (பூரண நிலை பெற்றோனும்) ஆகின்றான். அவ்வாறு உணர்ந்த நிலையில் அதனை உலகிற்கு எடுத்துரைத்தார் திரிசங்கு முனிவர்.

இவ்வாறு திரிசங்கு முனிவரது மறைவழியுரை (வேதானு வசனம்), மறைநெறி யொழுக்கத்தால் பேரின்ப நிலை பெறுவது நிச்சயமென்பதை வலியுறுத்திக்கூறும் எடுத்துக்காட்டுபோன்று விளங்குகின்றது.

அன்றி, சென்ற அனுவாகத்தில் உபதேசித்த முறைப்படி மறைகள் முழுவதையும் ஒவ்வொருநாளும் ஓதியும் ஓதுவித்தும் வருவது பெரும்பாலோரால் இயலாத காரியம்; ஆகலின் மறையொழுக்கத்தின் பயனாகிய பரம்பொருளுணர்வு நிலையை விளக்கும் இப் பகுதியையேனும் அனுதினமும் ஓதிவருவதனால் அந்நிலையைப் பெறக்கூடுமென்ற நோக்கத்துடன் எல்லோரும் ஈடேறக் கூறப்பெற்ற உபாஸனை மந்திரம் போன்றும் விளங்குகிறது.]

# உடனே உதவுக.

1902-ல் கீழ்வங்கத்திற்கு விஜயம் செய்த இரு ஜப்பானிய பூதத்வ நிபுணர்கள் மைமென்சிங் என்ற இடத்திற்கு அருகாமையிலுள்ள நிலப் பகுதியை ஆராய்ந்ததில் அஸ்ஸாம் சுர்மா பள்ளத்தாக்குக்கும், பஞ்சாபில் ஹிமயமலை அடிவாரத்தையொட்டிய காங்கிரா பள்ளத்தாக்குக்கும் இடையே எரிமலை உருவாகி வருவதாகக் கூறினர். அஸ்ஸாம் பூகம்பம் நேர்ந்துள்ளதிலிருந்து ஜப்பானிய பூதத்வ நிபுணர்களின் ஜோஸியம் பலித்து வருவதாகவே பலர் எண்ணுகின்றனர். அது அந்த ஜில்லா மக்கள் மனதிலும் கிலியூட்டிவருகிறதாம்.

பூகம்பத்தாலும், வெள்ளத்தாலும், அஸ்ஸாமின் நிலப் பகுதியின் உருவு பல இடங்களில் மாறியுள்ளது. பல கிராமங்கள் அழிந்தன. மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர்.

அஸ்ஸாம் படும் அவதியை நாட்டவர் அனைவரும் பகிர்ந்து கொள்ளவேண்டும். இயற்கையின் சோதனைகளை அஸ்ஸாமியர் தைரியமுடன் எதிர்நோக்குவது கண்டு அனைவரும் திருப்தி தெரிவிக்கவேண்டும். சங்கடங்களையும் சேதங்களையும் கண்டு அஞ்சாமல் ஒன்றுபட்டு நின்று நாட்டை அமைக்கவேண்டும்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோரின் உதவிக்கு வெளியார் விரைவது வரவேற்கத்தக்கது தான். எனினும் எத்தனை தான் அயலார் உதவி செய்தாலும் இறுதியில் உத்தாரணம் பெறுவது அஸ்ஸாமியரின் சுயமுயற்சியைப் பொறுத்தே உள்ளது. இயற்கை வளம் மிகுந்த அஸ்ஸாம் திட்டமிட்டு முனைந்தால் அக்ரஸ்தானம் பெறுவது அசாத்தியமல்ல. இது விஷயத்தில் காந்திஜியின் போதனையைப் பின்பற்ற மக்கள் பிரயாசைப்படவேண்டும். அஸ்ஸாமின் கேந்திர முக்யத்துவத்தை நம் நாட்டினர் நன்கு உணரவேண்டும். அது பலம் மிகுந்திருந்தால் தான் நாடு க்ஷேமமாக இருக்க முடியும்.

மக்களின் கஷ்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு கொழுக்க முயலுவோரை குறிப்பாகப் பதுக்கல், கள்ளமார்க்கட் நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை, சமீபத்தில் பிரகடனமான அவசரச் சட்டத்தின் மூலமாக, சர்க்கார் தண்டிக்கவேண்டும். சமாதானத்தைக் குலைத்து, மக்கள் அவதியை தம் நலனுக்கு உபயோகிக்க முயற்சிக்கும் சமூக விரோதிகளையும் சர்க்கார் சும்மாவிடலாகாது. எவ்வித பலாத்கார நடவடிக்கையையும் அடக்கி ஒடுக்கப் போதுமான சக்தி உண்டு. எனவே, அஸ்ஸாமின் புனர் உத்தாரணத்தில், மத்திய சர்க்கார் எஞ்சிய சர்க்கார், பொதுஜன ஊழியர் உள்பட தம்தம் கடமையை உணர்ந்து, பொறுப்பை ஏற்றுத் தக்கவாறு ஈடுபட ஈசன் அருள்புரிவாராக.



# கணக்கு (5)

## Addition Tables.

| | | |
|---|---|---|
| **2** | | |
| 2ம் | 2ம் | 4 |
| 3ம் | 2ம் | 5 |
| 4ம் | 2ம் | 6 |
| 5ம் | 2ம் | 7 |
| 6ம் | 2ம் | 8 |
| 7ம் | 2ம் | 9 |
| 8ம் | 2ம் | 10 |
| **3** | | |
| 3ம் | 3ம் | 6 |
| 4ம் | 3ம் | 7 |
| 5ம் | 3ம் | 8 |
| 6ம் | 3ம் | 9 |
| 7ம் | 3ம் | 10 |
| **4** | | |
| 4ம் | 4ம் | 8 |
| 5ம் | 4ம் | 9 |
| 6ம் | 4ம் | 10 |
| **5** | | |
| 5ம் | 5ம் | 10 |

இதனை **10**க்குள் கூட்டலுக்கு உபயோகிக்கும் வழி.

2ம் 4ம் 5ம் = ? இதில் எந்த எண் சிறியது? விடை 4

4ம் வாய்ப்பாடு சொல்லு. 4ம் 4ம் = 8
5ம் 4ம் = 9

5+4 9 = 4+5 = 9 என்பது.

ஏற்கனவே குழந்தைகளுக்குத் தெரிந்திருப்பதனால் 4ம் 5ம் = 9 என்பது காணலாம்.

குறிப்பு :—

இரண்டு எண்களின் கூட்டலில் (**10**க்குள்) சிறியதின் வாய்ப்பாட்டைச் சொல்ல தனக்கு வேண்டிய விடை கிடைக்கும்.

இவை 16ம் கணிதத்தின் அடிப்படை சூத்திரங்களாகும்.

குழந்தையின் வாழ்க்கை அனுபவ சம்பந்தமான சில அப்பியாசக் கணக்குகள் 100 ஆவது கொடுத்துப் பழக்கவேண்டும்.

### 10க்குமேல் 20 வரை உள்ள இரண்டு எண் கூட்டல் கணக்குகள்.

பத்து (10) என்ற எண் ஒரு முழுத்தொகை என்பது பிள்ளைகள் சொல்லாமலேயே அறிந்திருப்பர்.

முழு பத்துக் கட்டைகள் 10 எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றும் ஒரு பத்து என்று சொல்லச் செய்.

பிறகு 2, பத்து குறிக்கும் கட்டைகளைச் சேர்த்து 2 பத்துகள் என்று சொல்லச் செய். அல்வாறே 3 பத்துகள் 4 பத்துகள் பத்து பத்துகள் என்று சொல்லச்செய். பிறகு கட்டைகளைக் கொண்டே சேர்த்து கீழ் குறித்தபடி சொல்லச் செய்.

| | | | |
|---|---|---|---|
| 2 பத்துகள் | இருபது | 6 பத்துகள் | அறுபது |
| 3 பத்துகள் | முப்பது | 7 பத்துகள் | எழுபது |
| 4 பத்துகள் | நாற்பது | 8 பத்துகள் | எண்பது |
| 5 பத்துகள் | ஐம்பது | 9 பத்துகள் | தொண்ணூறு |

**10** பத்துகள் நூறு

மேற் குறித்தபடி உபாத்தியாயர் ஓர் படம் தயாரித்து கடைசி இரண்டுமாத்திரம் சிவப்புக் கலரில் எழுதிக் காட்டினால் அது, பையன் மனப்பாடம் கவனித்துச் செய்ய சுலபமாயிருக்கும்.

பிறகு ஒரு பத்துக்கட்டையுடன் சிறு கட்டைகளில் ஏதேனும் ஒன்றை (2-ம் 7) சேர்த்துவை. 1 பத்து ஏழு ஒன்றுகள் விடை பதினேழு என வருவி. அவ்வாறே 10 முதல் 20 வரை எண்களை போதனை செய். இவ்வாறே 99 வரை எண் வரிசையை எளிதில் போதிக்கலாம்.

### 10 மேல் கூட்டல் செய்யும் முறை.

7ம் 5ம்

கீழ்க் காணும் கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கேட்டு விடையை வருவிக்கவேண்டும்.

கேள்வி:—7 இது முழு (**10**) தொகைக்குச் சிறியதா? பெரியதா?

விடை :—சிறிது.

(2) எவ்வளவு சேர்ந்தால் முழுத்தொகையாகும்.

விடை:—3 சேர்க்க ஆகும்.

(3) ஆனால் உள்ளது எத்தனை? விடை 5.

(4) இது வேண்டியதற்கு அதிகமா? குறைவா? அதிகம்,

(5) எவ்வளவு அதிகம்? விடை 2.

(6) 7 உடன் 5 சேர்த்தால் முழுத்தொகைக்கு எவ்வளவு அதிகம் ஆகும். 10ம் 2ம் அதாவது **12.**

இப்படியே கூட்டுத் தொகைக்கு 20-க்கு மேற்படாமல் உள்ள இரண்டு எண் கூட்டல்கள். விரல்கள் விடாமலேயே வாய்ப்பாட்டுகள் உதவிகொண்டு செய்யலாம்.

### 20 மேல் நூறுக்குள் கூட்டல்.

முதல்படி:—

20+30

இரண்டு பத்துகளும் 3 பத்துகளும் சேர் 2+3=5 பத்துகள். ஐம்பது.



இவ்வாறே முழு பத்துகள் கூட்டல்கள் 100 வரை கொடு.

**2**-வது படி:—14ம் 10ம் ஒரு பத்து 4 ஒன்றுகள்

ஒரு பத்து

2 பத்து 4

இருபத்தி நான்கு

இப்படியே 27+30, 53+20 போன்ற கணக்குகளில் பயிற்சி தரவும்.

**3**-வதுபடி 43 இத்துடன் குறைந்தது என்ன சேர்க்க முழு பத்துகளாகும்?

44=4 பத்துகள் 3

இன்னும் 7 சேர்க்க முழு பத்துக்களாகும்.

அதாவது 4 பத்து (3+7)4 பத்தும் 1 பத்தும்=5 பத்துகள்

**4**-வதுபடி:—26ம் 32ம் என்ன?

26ம் 30ம் என்ன?

26ம் 30ம் கூட்டல் 2ம் என்ன?

அதாவது 56ம் 2ம்=58.

**5**-வதுபடி:—

25ம் 17ம்

25ம் 10ம் 35

35ம் 7ம்

35 உடன் என்ன சேர்க்க முழுப் பத்துகளாகும்?

விடை 5

உள்ளது என்ன? அதிகம்=விடை 2

ஆதலின் 25+17 (25ம் 10ம்=35+5+2

40+2=42

முறை:—46ம் 39ம்

(46ம் 30ம்)+9

=76ம் 4 (5) 80

=80ம் 5

=85

(கவனிக்க).

இவை, கரும் பலகையில் செய்வதற்கல்ல உபாத்தியாயர்களுக்கு, படிகளைக் காட்டவே யாகும்.

(தொடரும்.)

# ஒரு சொல் கேளீர்

சி. பாலசுப்பிரமணியம்-காரியதரிசி.
பென்னலூர், ஸ்ரீபெரும்பூதூர் அஞ்சல்.

பேரன்புடையீர்!

வணக்கம், நாளது அக்டோபர் 28, 29 தேதிகளில் மன்னார்குடியில் தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர்கள் இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நடக்கவிருக்கிறது. ஜி. ஓ. 416ன்படி நிறுவப்பட்ட யூனியன் ஒவ்வொன்றிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பிவைக்கும் இரண்டு பிரதிநிதிகளைக்கொண்டே பேரவை நடத்தவேண்டுமென்றும், ஒவ்வொரு யூனியனும் இணைப்புக் கட்டணமாக ரூ 2-ம், பிரதிநிதிகள் இருவருக்குமாக ரூ 2-ம் ஆக ரூ. 4-ம் அக்டோபர் 10உக்குள் தமிழ்நாட்டுக் காரியாலயம், விழுப்புரத்திற்கு அனுப்பிவைக்கும்படி த. நா. ச. கமிட்டி ஏற்பாடு செய்திருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு தாலூகாவிலுமுள்ள யூனியன்கள் த. நா. சம்மேளனத்தில் இணைப்புக் கட்டணத்தைக் கட்டி பதிவு செய்துகொள்ளவும், திரு. N. S. வெங்கடேசன் (செயலாளர், சோழபாண்டி போஸ்டு, மன்னார்குடி வழி) அவர்களிடம் தொடர்புகொள்ளவும் வேண்டப்படுகிறது.

ஒவ்வொரு ஜில்லா தாலூகாவிலுள்ள ஆசிரியைத் தொண்டர்கள் வீறுடன் வேலை செய்து உறங்குகின்ற யூனியன்களையும் தட்டி எழுப்ப முன் வருவார்களாக.

செங்கற்பட்டு ஜில்லா தோழர்களே!

இந்த ஜில்லாவில், தாலூகா, கழகப்பள்ளிகள், யூனியன்கள் 7-ம், முனிசிபல் யூனியன்கள் 2-ம், ஜில்லா லேபர் சங்கம் 1-ம், இருக்கின்றன. பஞ்சாயத்து ஆசிரியர்களுக்கென தனித்த சங்கம் கிடையாது. எயிடட் யூனியன் இல்லை என்றே சொல்லலாம். நமது ஜில்லாவிலுள்ள யூனியன்கள் ஒன்றுசேர்ந்து வேலை செய்ய ஒவ்வொரு தாலூ

(14-ம் பக்கம் பார்க்க)

**உமா வாசகம்**

ஆறும், ஏழாம் வகுப்புகளுக்கு செய்யுட்பகுதி—உரை விளக்கம்

ஆசிரியர்களுக்கும் மாணவ மாணவிகளுக்கும் பெரிதும் பயன்படும் முறையில் அநேக அன்பர்களின் விருப்பத்திற்கு இணங்க தனித்தனி பிரதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

பிரதி ஒன்றுக்கு விலை அணா 4.

**உமாதேவன் கம்பெனி.**
16, செப்புதாஸ் தெரு, சென்னை 1.



## பிரயாண திட்டம்.

| நெ. | தாலூகா. | தேதி | கிழமை | நேரம். | கூடுமிடம். |
|---|---|---|---|---|---|
| 1 | சைதாப்பேட்டை | 15- 9-50 | வெ | மாலை 2-மணி | ரிச்சர்ட்ஸ் பூங்கா, சைதாப்பேட்டை. |
| 2 | பொன்னேரி | 16- 9-50 | சனி | காலை 11-மணி | மீஞ்சூர் கழகப்பள்ளி. |
| 3 | ஸ்ரீபெரும்புதூர் | 17- 9-50 | ஞா | மாலை 2-மணி | பூவிருந்தவல்லி, பெண்பள்ளி. |
| 4 | திருவள்ளூர் | 30- 9-50 | சனி | காலை 11-மணி | முனிசிபல் பள்ளி, திருவள்ளூர். |
| 5 | செங்கற்பட்டு | 14-10-50 | சனி | காலை 11-மணி | ஷை செங்கற்பட்டு. |
| 6 | காஞ்சீபுரம் | 15-10-50 | ஞா | காலை 11-மணி | வன்னியசங்கம் பாடசாலை, பெரிய காஞ்சி. |
| 7 | மதுராந்தகம் | 30-10-50 | திங் | மாலை 2-மணி | ரெட்டியார் உயர்நிலைப் பள்ளி, மதுராந்தகம். |

N. B.—அந்தந்தத் தாலூகா தோழர்கள் அந்தந்த வட்ட செயலாளர் மற்றையோருடன் குறித்த தேதிகளில் சந்திப்புக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டப்படுகிறார்கள். தேதி மாறுதல் இல்லை.

**சி. பாலசுப்பிரமணியம்,**
செயலாளர்.

# நல்லவர் கெட்டவர்

## (சேக்கிழார்.)

கடவுள் படைப்பில் நல்லது கெட்டது என்ற இருவகைப் பகுதிகள் உண்டு. நல்லது கெட்டது என்ற பெயரும் என்றும் நிலைத்து நிற்கக் கூடியதன்று அப்போதைக்கப்போது அவைகள் மாறுவதை மிகவும் நுட்பமான புத்தியால் கண்டுபிடிக்க வேண்டும். இவைகளைக்கண்டுபிடிக்க சாத்திரப்பயிற்சி, பெரியோர்கள் பொன்மொழிகள், உலக அனுபவக் கல்வி முதலியன தேவை.

ஒருவர் செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கத்தான் பெரும் பணத்திற்குத் தக்கபடி மேற்கொண்டுள்ள பணியைப் புரிகிறார். இன்னொருவர் தன் எஜமானரிடத்தில் நன்மதிப்புப்பெற்று ஊதிய உயர்வு அடையவும், மேல் உத்தியோகத்திற்குப்போகவும் நன்கு அலுவல் ஆற்றுகிறார். மற்றொருவர் நாட்டுப்பற்றின் காரணமாக கால மாறுதலைக்கருத்தில் கொண்டு மன மாற்றமடைந்து தங்கள் போக்கையும் மாற்றிக்கொண்டு, ஆற்றவேண்டிய கடமைகளையும் ஏற்க வேண்டிய பொறுப்புகளையும் உணர்ந்து ஒழுங்கு முறையுடன் மக்கள் தொண்டே தெய்வத்தொண்டாக மதித்து வேலை செய்கிறார். இந்த மூவகையாளரும்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

காவிலுமுள்ள யூனியன்கள் மறுமலர்ச்சி யடையவேண்டும். அதற்காக நமது ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு செண்டர் காரியதரிசிகளையும் ஒவ்வொரு செண்டரிலும் தேர்ந்தெடுத்த பிரதிநிதி வீதம் கொண்ட அங்கத்தினர்களைக்கொண்டும் ஒரு மாநாடு நடத்த எண்ணுகின்றேன். இதற்கிடையே ஒவ்வொரு தாலூகாவிலும் பின் குறிப்பிட்ட தேதிகளில் முகாம் செய்து சென்டர் செயலாளர்களிடமும், மற்றையோரிடமும் யூனியன்களைத் திருத்தி அமைத்தல், ஆசிரியர் நலனுக்கான பிரச்னைகள் முதலிய விஷயமாக கலந்து பேச விரும்புகின்றபடியால் செயலாளர்களும் மற்றுமுள்ளவர்களும் குறித்த காலத்தில் வரும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன். அஃதேயுமன்றி வர இருப்பவர்கள் தங்கள் ஆலோசனையுடன் எமது முகவரிக்கு தகவல் அனுப்புவதோடு ஆதாரக் கல்வியை படிக்கின்றவர்கள் எத்தனைபேர் என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

தவிர, ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா ஆசிரியர் யூனியன் 11-வது ஆண்டு நிறைவு விழாவை, திருமழிசை சென்டரில் ஷை சென்டர் ஆசிரியர்கள் வரும் டிசம்பர் இறுதியில் நடத்திக் கொடுக்க முன்வந்துள்ள செய்தியை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஷை சென்டர் ஆசிரியர்களுக்கு யூனியன் சார்பில் எமது நன்றி. வணக்கம்.



தொழில் ஆற்றுவதில் வித்தியாசம் காணமுடியாது. ஆனால் அது நடைபெற மேற்கொள்ளும் வழிவகைகளில்தான் வித்தியாசங்கள் காணப்படலாம். ஆகவே மூவரையும் ஒரு படித்தான சரிசமநோக்கு, அன்பு, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், முதலிய அடிப்படைதத்துவங்களை உடையவர்கள் என்றோ, தொண்டின்திறனை உணர்ந்து தொண்டாற்றுபவர்கள் என்றோ நினைத்து விடுவதற்கில்லை.

முதல் இருவகையாளர் எஜமான தாசர்களாயிருந்து அன்னவர் ஆதரவைமட்டும் அடைய கண்ணோட்டமுடையவர்கள். தங்கள் கீழ்உள்ளவர்களை அல்லும் பகலும் உழைக்கின்ற பாட்டாளி மக்களின் குருதியைக்குடிக்கும் முதலாளிகளைப்போல் வேலையை மட்டும் வாங்கிக்கொள்வதிலேயே எஞ்ஞான்றும் கவனம் செலுத்துகின்றவர்கள். உழைப்பாளர்களுடைய நலனைப்பற்றி சிறிதேனும் எண்ணார். ஈரமிலா நெஞ்சு படைத்தவர். கூடும் அன்பினின் மேலிடத்து திருப்தியையே வேண்டி நிற்பர். வித்தகம் பேசாது இட்ட பணியை இட்டமுடன் செய்யவே ஆணையிடுவர். அன்பு நெறிபெருக்கு இவர்கள் அகராதியில் இடம்பெறாது. தன் ஏவல்படி நிற்பவர்களுக்கும் தன்னைத்தொழுபவர்க்கும் "தொழுவார்க்கே அருளும் தொண்டர்பிரான்" போல் உற்ற துணையாய் இருப்பர். ஒற்றர்மூலம் துப்பறி ஸ்தாபனங்களையும் அமைக்க பின்வாங்கார், பழிவாங்கவும் அஞ்சார். கைப் பாவையாளர்கள் சமூகத்தை அரிக்கும் சிதலைகளாய்த் திரிவர். பைய்யப் பைய்ய இவர்களிடையேயும்உழைப்பாளிகளிடையேயும் குமுறல் நிலவி வரும்படியான சூழ்நிலையைத் தேடிக்கொள்ள நேரிடுமே என்றும், அதனால் பெருக்கெடுத்தோடும் அதிருப்தி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவோமே என்றும் சிந்தியார். இவர்களை சுயநலவாதிகள் என்பதா? ஏதோ காரணத்துடன் கடமையைச் செய்பவர் என்று நினைப்பதா? இவர்களுடைய சேவைசமூகத்திற்குப்பயன்பட்டதா? அல்லது எஜமானர்க்கா? எஜமானர்க்காயின் இத்தகைய பண்புடையாளர்களுக்கு அவர்கள் வேலையைவிட்டு விலகுவார்களாயின், பிரிவாற்றாமையைக் குறித்து வருந்த நேரிடின் ஆச்சரியப்படுவதற்கில்லை. அன்பு கலந்த அவர்கள் நன்றியைக்கூடச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். தங்கள் சௌகரியத்திற்கு உழைத்து வந்தபடியால்.

மூன்றாவது நபர் "வெகுஜன வாக்கே தெய்வ வாக்கு" என்பதில் நம்பிக்கை உடையவர். "அன்பர் பணிக்கு ஆளாக்கிவிட்டால் இன்பநிலை அடையலாமே" என்று இறைஞ்சுகின்ற பெருந்தகையாளராவர். தன்னிடமுள்ள உழைப்பாளிகளை நடமாடும் கோயில்களாகவும், அக் கோயில்களிலுள்ள உயிர்களை உத்தமராகவும் கண்டு ஏதாவது நன்மை இவர்களுக்கு நாம் செய்ய அவர்கள் கேட்பார்களா என்று எதிர்பார்த்தவண்ணமிருப்பர். இவர்களுடைய சீரிய ஒழுக்கத்தாலே புகழ் அவரைத் தேடிப் போகுமல்லவா? அன்பென்னும் வலையில் கட்டுண்டு ஊழியர் இருப்பதில் பெருமிதம் கொள்வதில் தவறு என்ன? இவர் மேலிடத்து நன் மதிப்பினும் தன் கீழுள்ளவர்களுடைய அன்பை ஈட்டுவதிலேயே கருத்தைச் செலுத்துவர், அவர் தம்கோரிக்கைகள் நிறைவேற ஊழியர்களிடம் நடந்துகொள்ளும் விதம், வேலை செய்ய விருப்பத்தைத் தூண்டும் முறை முதலியவைகள்

அவர் தம் வசீகரத் தன்மையை விருத்தி செய்வதாகாதோ? "ஆதாரக் கல்வியே சுயநோக்க முயற்சியாலே விருப்பத்துடன் உள்ளம் உயிர் உடல் மூன்றும் இயங்குகின்ற கல்விதானே? அனைவரும் ஒழுங்கு முறையுடன் நடந்துகொள்ளும் கடமை உணர்ச்சியில் பயிற்றுவிப்பதும் அதுவே." ஆகவே குணசீலர்களையே நல்லவர்கள் எனலாம் அல்லவா?ஏன் எனில் வேலை வாங்குபவருக்கும் அமைதியாக வேலை நடக்கிறது- வேலை செய்வோரும் எஜமானிடத்துக்கொண்ட அன்பின் காரணமாகவும், நாட்டுப்பற்றினாலும் ஊதியத்தைக் கவனியாது "என் கடன் பணி செய்தல்; என் கடன் அடியேனைந் தாங்குதல்" என்ற திட நம்பிக்கையுடன் இருபாலாரும் இருப்பதிலேயும்தான். இப்படிப்பட்டவர் பிரியுங்கால் சமூகமே வருந்தாதோ? பெரு நஷ்டமும் அடையாதோ?

ஒரு அலுவலர் நம்மைவிட்டுப் பிரிகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் பிரிவாற்றாமையைக் குறித்து நாம் அவருக்கு எவ்வளவு கடமைப்பட்டுள்ளோம் என்று எண்ணிப் பார்க்கவேண்டாமா? அவருக்கு பிரிவுபசாரம் அவசியமா? பிற ஆர்பாட்டங்கள் செய்யின் நகைப்புக்கு இடமிராமலிருக்குமா என்று நம்மை நாமே சில கேள்விகள் கேட்டுக்கொள்ளவேண்டியது மிக மிக அவசியமாகிறதல்லவா? தனித்த முறையின் மதிப்பீட்டை விட்டு கூட்டு முறையிலே பிரச்னையைத் துருவிப் பார்த்தல் நன்று. தனித்த முறையில் அசம்பாவிதங்கள் இருக்கலாம். அவற்றைக்கொண்டு கெட்டவர் எனத் தீர்ப்பளித்தல் முறையாகாது. கடமையினின்று வழுவிய குற்றத்திற்குத் தண்டனை வேண்டியதுதானே? அதற்காகக் கெட்டவர் என்று குறை கூறுதல் குற்றத்தின்பாற் படாதா? பொதுவாக அவரால் சமூகத்திற்கு ஏதாவது நன்மை விளைந்துள்ளதா? ஒரு தந்தை தனயனின் பிற்கால வாழ்விற்கு யாது செய்வான்? அஃதேபோல் உழைப்பவர்களுடைய எதிர்கால வாழ்விற்கு ஏதாவது உருப்படியானக் காரியத்தைச் செய்திருக்கிறாரா? ஆசிரியர் ஐக்கியத்தை வளர்த்தாரா? அழித்தாரா? தன்னம்பிக்கை, பயமின்மை பல காரியங்களைச் சாதிக்கும்படி அவற்றைவளரச்செய்தாரா? உறங்கவைத்தனரா? பிறர் கஷ்டத்தைச் சகிக்கக்கூடாத கருணை நிறைந்தவரா? அடக்கமுள்ள அறிவாளியா? யார் எதைச் சொன்னாலும் பொறுமையாகக் கேட்டு அறிவினால் ஆராய்ந்து முடிவு காண்பவரா? நடுநிலைமைத் தவறாதவரா? துவேஷம் அற்றவரா? உள்ளத் தூய்மை உடையவரா? தன்னலங்கொண்ட தாரணிக்குப் பாரமானவரா? பாபத்துக்கு நிலைகளாக உள்ள எண்ணத்தை சரியான வழியில் செலுத்துபவரா? தவறு செய்தவனிடம் அன்பாகப் பழகுபவரா? மன்னிக்கும் மாண்புடையவரா? பிறர் எண்ணங்களை ஏற்பவரா? என்றெல்லாம் திரையில் விழும் காட்சிபோல் தோன்றி தோன்றி மறையும் கேள்விகளுக்கு நியாயமான பதில்களும் சிந்தனைக்குரியதாகும்.

ஒருவரை நல்லவர் கெட்டவர் என்று முடிவு காணும் முன், சமூகத்திற்குப் புரிந்துள்ள செயல்களையும், நடந்துகொண்ட முறைகளையும் அலசிப் பார்க்கவேண்டும். ஐக்கியக் கழகங்கள், அறிஞர்கள் எண்ணித் தொகுத்துத் தந்த எண்ணங்களை ஆராய்ந்து, அவ்வெண்ணங்கள் பெருகி வளர எடுத்துக்கொண்ட



நடவடிக்கைகள் முதலியனவற்றை அறியவேண்டும். சமூகத்தைமதித்து, அதன் எண்ணப்போக்கை அனுசரித்து கூட்டியோ, குறைத்தோ, மாறுபடுத்தியோ கவனிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் துருவிப் பார்க்கவேண்டும். சமூக உரிமையைக் கொண்டாட முடியாமல் திமிரான பதிலும் செய்கையும் புரிந்திருந்தால் யார்தான் அன்னவரைப் பற்றி பெருமைகொள்ள முடியும்? சமூக முன்னேற்றப்பாதைக்கு வெடிவைத்த தூர்ச்சனர் என்றல்லவோ முடிவு கட்டவேண்டும். சமூகம் உறங்கிக்கொண்டிருப்பதாகக் கனவு கண்டு பழங்காலக் கொள்கையை திணித்திருந்தால் மண்டையில் தட்டி உணர்வு ஏற்படச் செய்வதன்றோ அறிஞர் கடமை.

அழகான - சாதுர்யமான பேச்சு- மாத துவக்கத்திலே சம்பளம்-ஆண்டு ஆரம்பத்திலே ஊழிய உயர்வு. இவை எல்லாம் அளித்திருந்தால் அவைகளால் தன்னாட்சி கால கடமைகளால் ஏற்படவேண்டிய சாதாரண நிலைதானே என்றல்லவோ தன்மானமுள்ளவர் கருதுவார். மாறாக நினைப்பதும் புகழ்வதும் மகிழ்வதும் அறிவின்மையின் உச்ச நிலையைக் காட்டாதோ? வாதங்கள் மூளையின் சிருஷ்டி. ஆனால் அபிப்பிராயங்கள் ஆன்மாவின் அமைப்பு. கண்மூடித்தனமாக அறியாமையாலே தகுதியை நோக்காது புகழ்ந்தால் "பொல்லாத ஒருவனை நான் நல்லான் என்பேன்" "வழங்காத கையனை நான் வள்ளலென்பேன்" அவன் "இல்லாத சொன்னேனுக்கு இல்லை என்றான் யானும் என் குற்றத்தால் ஏகின்றேனே" என்று வருந்த நேரிட்ட இராமசந்திரக் கவிராயர் போல் அபகீர்த்திக்கு ஆளாவோம். நமது மடமையைக்காட்டிக்கொள்வதோடு புகழப்படுபவரின் அழிவுப் பாதைக்கு வழிகோலும் தூபமிடும் கும்பல் என்ற இழுக்கும் நம்மைச் சாரும். ஆகவே நல்லது கெட்டது தோற்றத்தால் முடிவு கட்டுவதல்ல. ஒருவருடையவரலாற்றைக்கொண்டு தான் அவரை நல்லவர் என்றோ—கெட்டவர் என்றோ மதிப்பிடவேண்டும். இம்முறையைத் தழுவித்தான் மேற்கு நாடுகளிலும் கூட ஆராயப்படுகின்றன. எனவே நல்ல காரியத்தைச் செய்ய தைரியமும், கெட்ட காரியத்தைச் செய்ய பயமும் ஏற்படவேண்டும். அனைவரும் நல்லவர் என்று பெயர் வாங்க வாழ்வாகிய வஸ்திரத்தில் காணும் தீமையாகிய நூலை அகற்ற நன்றுடையானும் தீயதிலானுமான வாலறிவன் நற்றாள் வணங்குவோமாக

---

(19-ம் பக்கத் தொடர்ச்சி.)

நல்ல பிரசாரமும் வேண்டும். அது இருந்தால்தான் நல்லது.

இன்னொன்று ஆரம்ப ஆசிரியர்களுக்கு உழைக்கும் பத்திரிகைகளும் கொஞ்சம் எழுந்து நிற்கவேண்டும்! ஆசிரியர்களுக்கு உழைப்பதே தம் கடமையாகக் கொள்ளவேண்டும்.

முறையுடன் மகாநாடு நடந்தேறினால்தான் ஆசிரியர் பயனடைவர். ஆரம்ப ஆசிரியர் மகாநாடுதான் ஆசிரியர்களின் ஒற்றுமையைக் காட்டும் அளவுகோல்!



பலே, பலே, மன்னார்குடியில் அந்த அளவுகோலைப் பார்க்கப் போகிறோம்! வாருங்கள் போகலாம்!

புறப்படத் தயாராயிருக்கிறீர்களே! மகாநாட்டைப்பற்றி விவரம் வரவில்லை. கொஞ்சம் பொறுங்கள். நாம் மாத்திரம் சென்றால் போதுமா? நம் சகோதரர்களையும் அழைத்துப் போக வேண்டும். அங்கு ஒரே ஆசிரியமாக இருக்கவேண்டும்.

# ஆசிரியர் உள்ளம்

"ஸ்ரீநி"

வணக்கம் வாருங்கள்! உங்களைத்தான் நினைத்தேன்! எதிரில் தோன்றிவிட்டீர்கள்! நூறு வயது! பத்திரிகையைப் பார்த்தீர்களா? "டீச்சர்ஸ் கில்டு" தூது போயிருக்கிறதே!

எதற்கு தூது சென்றிருக்கிறது?

ஆரம்ப ஆசிரியர்களுக்கும் சட்ட சபையில் ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களில் உரிமை வேண்டுமென்று கேட்கவா? ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றியும் தூது கோஷ்டியினர் பேசினதாகத் தெரிகிறது. டீச்சர்ஸ் கில்டு ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு அறிக்கையாவது விடுத்ததா? அதுவும் இல்லை. சென்னை மாகாணத்தில் சுமார் ஒன்றே முக்கால் லட்சம் ஆரம்ப ஆசிரியர்கள் இருக்கிறார்கள். டீச்சர்ஸ்கில்டுடன் எத்தனை ஆரம்ப ஆசிரியர்கள் தொடர்புவைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நீங்களே சொல்லுங்கள்!

சரியான கேள்வி இது. நான் எப்படி பதில் சொல்ல முடியும். டீச்சர்ஸ்கில்டு பதில் சொல்லட்டும்! சில ஆரம்ப ஆசிரியர்களை வைத்துக்கொண்டு அங்குள்ள பெருந் தலைகளுக்கு இஷ்டமான விஷயங்களைப்பற்றித் தூதுபோவதும் இத் தூதுகோஷ்டியை சந்திப்பதும், இதனால் எல்லா ஆரம்ப ஆசிரியர்களின் அபிப்பிராயத்தையும் டீச்சர்ஸ்கில்டு தான் சொல்லுகிறதென்ற எண்ணம் உண்டாகச் செய்வதைப் பார்த்தால் அழுவதா, சிரிப்பதா நீங்கள் சொல்லுங்கள்!

ஆரம்ப ஆசிரியர்கள் என்றைக்கு சிரித்தார்கள்! ஒரே அழுகைதான்! இவ்வளவுக்கும் காரணம் என்ன தெரியுமா?

நீங்கள் தான் சொல்லுங்கள்!

அப்படிக் கேளுங்கள்! ஒன்றே முக்கால் லட்சம் ஆரம்ப ஆசிரியர்களுக்கென ஒரு மாகாணச் சங்கம் இல்லை. சரியான பிரதிநிதித்வம் வாய்ந்த ஒரு முறையான மாகாணச் சங்கம் இருந்தால் எந்த சங்கமும் ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றியும் ஆரம்ப ஆசிரியர்களைக் கலக்காமல் ஒன்றும் செய்யாது, சொல்லவும் சொல்லாது. ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையாகிவிட்டது!

பலே பலே—சரியான போடு போட்டுவிட்டீர்களே, நீங்கள் உள்ளே இருக்கிறீர்கள்! இப்போதுதான் உங்கள் விஷயம் தெரிகிறது!

நீங்கள் தான் சொல்லுங்கள்! எப்போது பார்த்தாலும் இந்த தூதுகோஷ்டியினர் காசு வேண்டும், பணம் வேண்டுமென்று



சொல்லுகின்றனர், முக்கியமாக ஆரம்ப ஆசிரியர்களுக்கு வேண்டுவதென்ன? காசு பணத்தைவிட? சட்ட சபையில் உரிமையல்லவா? அதைப்பற்றி பேசாமல் பணம் வேண்டுமென்று இந்த ஒன்றேமுக்கால் லட்சம் ஆரம்ப ஆசியர்களுள் எத்தனை பேர்கள் சொன்னார்கள். அதை டீச்சர்ஸ்கில்டு தெரிவிக்கட்டுமே! சில ஆரம்ப ஆசிரியர்களை வைத்துக்கொண்டு பிரமாதமாகத் தூது போவது அழகல்ல. தூது போவதற்கு முன் தூதுகோஷ்டியினர் அரசாங்கத்தினிடம்சொல்லப்போகும் விஷயங்களை பத்திரிகை மூலம் ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். தூதுகோஷ்டியினர் அரசாங்கத்தினிடம் என்ன சொன்னார்களென்பது உங்களுக்குத் தெரியுமா? பல ஆரம்ப ஆசிரியர்களுக்கும் தெரியாது. பெருவாரியான ஆரம்ப ஆசிரியர்களுக்குத் தெரியாமல் இத் தூதுகோஷ்டியினர் ஆரம்ப ஆசிரியர்களுக்கு நன்மை செய்யப் புறப்பட்டார்களே! இதுதான் வேடிக்கை!

அதிருக்கட்டும், மன்னார்குடி கான்பரன்ஸ் செப்டம்பரில் நடக்கப்போகிறதே? அதற்குள் டீச்சர்ஸ்கில்டு தூது போய்விட்டதே, கொஞ்சம் பொறுத்துப் பார்க்கக்கூடாதா?

தொண்டு செய்வதில் பொறுமை காட்டக்கூடாது! இந்த எண்ணம் திடீரென்று தோன்றியிருக்கும்!

கான்பரன்ஸில் ஆசிரியர் யூனியன்மூலம் பிரதிநிதிகள் வர வேண்டுமாம்!

சரி, பல ரேஞ்சுகளில் யூனியன்களே இல்லை. இருக்கிற யூனியன்களில் அங்கத்தினர்களும் சொற்பம்! அங்கத்தினர்கள் கொஞ்சமிருக்கும் யூனியன்கள் உழைப்பதும், பிரசாரம் செய்வதும அபூர்வம் இத்யாதி யூனியன்கள் மூலம் பிரதிநிதிகள் வருவதைவிட மகாநாட்டில் சரியான பிரதிநிதித்வம் வேண்டுமென்றால் ரேஞ்சுவாரியாக மாதா மாதம் கூட்டப்பட்டு வருகிறதே, அந்த ஆசிரியர் சங்க மூலம்தான் பிரதிநிதிகள் வர வேண்டும். ஏனென்றால் இந்த ஆசிரியச் சங்கமில்லாத ரேஞ்சே இல்லை, மகாநாடொன்று கூட்டி ஒரு ரேஞ்சே ஆசிரியர் கூட்டம் மாதிரி வைத்துக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றிவிட்டால் கூட மகாநாடு வெற்றிகரம்தான்! ஆனால் பலன் தரத்தக்க வண்ணம் நடைபெற்றதாகாது. இம்மாதிரி மகாநாடுகளினால் ஆரம்பக் கல்விக்கோ, ஆரம்ப ஆசிரியர்களுக்கோ நன்மையில்லை. மகாநாடு ஒத்திப்போனாலும் கவலையில்லை. நடக்கும் மகாநாடு நல்ல பிரதிநிதித்துவம் பொருந்தியதாக இருக்கவேண்டும். அதுவும் ஒரு முறைப்படி தெரிகிறதா. நான் சொல்லுவது சரிதானா?

நீங்கள் சொல்லுவது சரியாகத்தான் இருக்கிறது. அத்துடன் ஆரம்ப ஆசிரியர்களிடை

(17-ல் பார்க்க.)

# எதிரொலி—"அரசியல்"

## V. ராதாகிருஷ்ணா, B. Com.

"படைகுடி கூழமைச்சு நட்பரணாறு முடையா னரசரு ளேறு" என்றபடி படையும், குடியும், கூழும் அமைச்சும், நட்பும் அரணும் ஆகிய இந்த ஆறு அங்கங்களையும் கொண்டது சிறந்த அரசு என வள்ளுவர் கூறியுள்ளார். நம் மூதாதைகள் இப்படிப்பட்ட ஆட்சிதான் நடத்தினார்கள். வைரமுடைய நெஞ்சு கொண்டிருந்தார்கள் மக்கள் அவ்வாக்ஷியில் ஆனால் இன்றைய நிலை என்ன? அரசிலும் மாற்றம், மக்கள் மனத்திண்மையிலும் மாற்றம். காரணம் என்ன? முகலாயப் படை எடுப்புக்களுக்குப் பின் தோன்றிய மேற்கத்திய குடியேற்றம் நம் நாட்டு முடியேற்றமாகிவிட்டது. முடியரசு பொலிவுற்று விளங்கியது. ஏகாதிபத்தியச் சூறாவளியில் சிக்கிய மக்கள் மனமிழந்தனர். அதன் காரணமாகக் கடமையை மறந்தனர். ஆக்ஷியை வகுக்கவேண்டிய முறையில் அவர்கள் கல்விமுறையும், பொருளாதாரத் திட்டங்களும், சமூக வியலும் மிகவும் கைதேர்ந்த முறையில் அமைக்கப்பட்டன. உண்மையைக் கூறுபவனை உதாசீனம் செய்யும் பண்பு தலைவிரித்தாடியும் "உத்யோகம் புருஷ லக்ஷண"மென்ற கோட்பாடு மக்கள் மனதில் படியும் வண்ணம் ஆதிக்கத்தார் விளம்பரம் செய்து, மக்கள்மனதைச் சூறையாடினர். கடமை மறந்த மக்களை அடிமைகளாக்கினர். ஆதிக்க வெறி பிடித்த அவர்கள் மிக மிகத் திட்டங்களை சட்டங்களாக்கி மக்களை கட்டியாண்டனர்.

இந்த நிலையில் நாம் அசோகனைப் பற்றி சிந்தித்தோமா? அக்பரின் ஒருமைப்பட்ட இருமதப் பண்பாட்டை எண்ணிப் பார்த்தோமா? தாஜ்மஹால், பிரஹதீஸ்வராலயம் போன்ற அன்றைய ஆக்ஷியின் அணிகலன்களை உண்டாக்கிய உத்தமர்களைப்பற்றி எண்ணினோமா? ஜான்ஸி ராணிபோன்ற வீர மாதுகளின் தீரச் செயல்களை நினைத்துப் பார்த்தோமா? இல்லை! காரணம்? சுய நினைவு மாய்ந்து அடிமைச் சுழலில் சுழன்றுகொண்டிருந்ததே காரணம். குருகுலவாசக் கல்வித் திட்டம் பயின்றோமா? வேதாகம சூத்திரங்களை உணர்ந்தோமா? நம் நாட்டு வைத்திய முறைகளை முக்கியமாக இயற்கையின் படைப்பானப் பச்சிலைகளினால் பல்லாயிரக் கணக்கான நோய்களை மாற்றும் உண்மையை அறிந்தோமா? உண்மை தேசச் சரித்திரத்தையும் நம் மூதாதைகள் செய்த தியாகங்களையும் அறிந்தோமா? இல்லை! காரணம்? நம் நாகரிகம் உண்மைக்கு மாறாக சென்றுகொண்டிருந்ததனால்தான். நம் நாட்டு மக்கள் அமைச்சர்களாக இருந்து நம் மக்கள் குறைகளைத் தவிர்க்கப்பாடுபட்டோமா? இறைவனால் அங்கக் குறைவுகளில்லாமல் படைக்கப்பட்டும் வேற்றார் போர்வீரனால் காப்பாற்றப்படுகின்ற நிலைக்கு நம் போர்த்திறமை மறந்தோமே என்பதை உணர்ந்தோமா? டக்கா, மஸ்லின் போன்ற உலக அரங்கிலும் கிடைக்காத நயமான ஆடைகளை அயல்நாட்டுக்கனுப்பிப் பெருமை கொண்ட நாம், நம் மானங்காக்கப் பிறநாட்டான் துணியை எதிர்பார்க்கின்றோமே என்பதை எண்ணினோமா? செய்தொழில் பலவும் அன்னியன் கையில் சிக்குண்டு கிடக்க நாம் தொழிலாளிகளாய் ரத்த வேர்வை நிலத்தில் சொட்ட உழைத்து நம் நாட்டுப் பொன்னை வெளிநாட்டுக்கேற்றி வெறும் வீணர்களாய், கயவர்களாய், என் சுத்த சோம்பேறிகளாகிவிட்டோம் என்பதைச் சிந்தித்தோமா? இல்லை! ஏன்? அவர்களின் திட்டங்கள் அவ்வளவு பொலிவாக இருந்ததுதான் காரணம்.

வீசி எறிந்தோம் கடமையை உணர்ந்ததும்! வெளியேறுங்கள் என்றோம் நம் நிலையை அறிந்ததும்! ஆக்ஷியை வகுத்தோம் அறிவைப் பெற்றதும்! உலக அரங்கில் உன்னத நிலையை அடைந்தோம். உழைப்பின் காரணமாகவும், உண்மையின் சகாயத்தாலும்.

இந்நிலை மாறிய கட்டத்தில் செய்வன திருந்தச்செய் என்பதை மறந்தோம்! காரணம் அரசு எவ்வழி குடிகள் அவ்வழி என்ற சொல்படி "கருவியும் காலமுஞ் செய்கையுஞ் செய்த மருவினையுமாண்ட தமைச்சு" என்ற வள்ளுவர் வாக்கின்படி யல்லாது, வரும் பொருளறியாது வளமுடன் திட்டம் வகுக்கும் கடமை வழியினின்று ஓரளவு அமைச்சர்கள் அப்பாற்பட்டு நிற்பதே இன்றை உடை உணவுப் பஞ்சங்களுக்குக் காரணம்.

அரசியலைப்பற்றி சில ஆங்கில அறிஞர்களின் கருத்துக்களைக் கவனித்து ஆவன செய்ய முனைவோம்!

"There is no gambling like Politics"—Disraeli.

"There is an infinity of political errors, which being once adopted, become principles"—Abbe Raynal.

"A Politician—one that circumment God"–Shakespeare.

"Poli'ics is the science of exigencies"—T. Parker.

"The Politics of courts are so mean that private people would be ashamed to act in the same way; all is trick and finesse to which the common cause is sacrificed"—Lord Nelson.

பல அறிஞர்கள் பலவாகக் கூறினால் இதன் சாரம் என்னவென்று துருவிப் பார்க்கும்போது சில முக்கியத்துவம் வாய்ந்தவர்களின் கொள்கைகள் சமய சந்தர்ப்பங்களின் சகாயத்தால் ஆக்ஷி பீடத்து ஆராய்ச்சி மணியாக ஒலிக்கின்றது. மக்களுக்கு ஆக்ஷி முறையில் பங்குண்டு என்பதைப் பள்ளி மாணவர் முதல் பாராளுமன்றத்து அங்கத்தினர்கள் வரை உணரவேண்டும். சட்டதிட்டங்கள் இயற்றப்படும்போதே மக்கள் கூடி தீர்மானங்கள் மூலமாக கருத்தைத் தெரிவித்து கடமை செய்யத் தவறினால் பிறகு சட்டமாக்கப்பட்ட திட்டங்கள் அமல் நடத்தப்படும்போது உள்நாட்டுக் குழப்பங்கள் மேலிடலாம். ஆகையால் நாம் நம் கடமையறிந்து காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்றபடி நம் பணியைச் செய்துவிடவேண்டும்.

அரசியல் சிறக்க சுதந்திர எண்ணமும், சொற் சுதந்திரப் பண்பாடும் செயல் சுதந்திர நாகரீகமும் நனி சிறந்து விளங்கவேண்டும். அப்படி இருந்தால்தான் உலக அரங்கிலே பலமதப்பட்ட மக்கள் சமூகத்திலே, சிறப்பெய்தக்கூடும். அரசியலில் மத சுதந்திரமும், மொழி சுதந்திரமும் பாதிக்கப்படலாகாது. என்றைக்கு இவ்விரண்டு [illegible] ஏற்படு [illegible] அன்று அரசியலின் கண் [illegible]ட்டுவிட்டன என்று திட்டமாகக் கூறலாம். "சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்" என்ற

# பேச்சுப் போட்டி 1

## (ஒற்றுமையை வளர்க்க)

மனிதன் தன் எண்ணங்களினாலேயே கட்டுண்டிருக்கிறான். உலகமுழுதும் அத்தகைய சக்தியால்தான் கட்டுண்டிருக்கிறது. மனத் திட்டம்தான் மனிதனிடமிருக்கும் அருஞ் சக்தியாகும். மனத்திட்டம் இருப்பவனிடம் ஓர் ஒளி உண்டாகிறது. அவன் மற்றவர்களைத் தன் வயப்படுத்தி தன்னைப்போலவே, அவர்களையும் நினைக்கச் செய்கிறான். இம்மாதிரி மகத்தான சக்தி வாய்ந்தவர்கள் உலகில் பல சந்தர்ப்பங்களில் தோன்றுகிறார்கள். சக்திநிறைந்த புருஷர்கள் தோன்றும்போது அவர்கள் தங்கள் எண்ணங்களை நம் மனத்தில் புகுத்துகிறார்கள். அதன் காரணமாக நாமும் அவ்வெண்ணங்களை நினைத்து சக்தியுடையவர்களாகிறோம். ஏன் ஸ்தாபனங்கள் அல்லது சங்கங்கள் தனி மனிதர்களைவிட அதிகம் சக்தி வாய்ந்தவைகளாக இருக்கின்றன? நாற்பதுகோடி மக்களாகிய நாம் ஒற்றுமையின்றிப் பல்வேறாக நினைக்கிறோம். அதன் காரணமாக நம் சக்தி குறைவுபடுகிறது. எதிர்கால இந்தியாவைச் சிறப்பானதாகச் செய்யவேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரு மனத்தினராகி ஒரு சங்கமாக ஆகவேண்டும், அதுதான் அளவற்ற சக்தி அளிக்கக்கூடிய ரகசியம். அதர்வணவேத சம்ஹிதையிலுள்ள ஒரு வெகு அழகான சுலோகம் ஈண்டு நினைவுகூர்தல் வேண்டும்.

"நீங்கள் எல்லோரும் ஒரு மனத்தினராக இருங்கள், நீங்கள் எல்லோரும் ஓர் எண்ணத்துடன் வாழுங்கள். ஒரு மனத்துடனிருந்த காரணத்தால் தான் தெய்வங்கள் தங்கள் தெய்வத் தன்மையைப் பெற்றன. ஒருமை மனதுடனிருந்தால் நீங்களும் தெய்வத்தன்மையை அடைவீர்கள்." ஒரு மனதினராக இருந்தால்தான் தனி மனிதர்களும் சமூகங்களும் வெற்றி பெறும் ரகசியம். ஆரியர்கள்,

---

தொன்மறைப்படி மொழியும் மதமும் அரசியலின் இரு கண்கள். மக்கள் ஒற்றுமை இருந்து கிளர்ச்சி வேகம்தணிந்துநாட்டு முன்னேற்றக் குறிக்கோள் நல்லெண்ணம், சகோதரத்துவம் என்ற தண்ணீர் ஊற்றி வளர்க்கப்பட்டால் நாட்டிற்கு, ஏன்? உலகிற்கு ஒரு மதமும், ஒரு மொழியும் உண்டாக்கப்படலாம். அந்நிலை ஏற்படாதவரையில் இவ்விரண்டும் எந்த இடத்திலும் எந்த அளவிலும் தாக்கப்படலாகாது.

உலக அரங்கில் (U.N.O.) நம்கடமை என்ன? அரசியல் கல்விதிட்டம் எப்படி இருக்கவேண்டும்? அரண் வகுக்கும் முறை நம் நாட்டிற்கு எப்படி அமையவேண்டும்? வணிகமும் வளமுற்ற கலாச்சாரப் பண்பாடுகளும்எப்படி அரசியலால் காப்பாற்றப்படவேண்டும் என்றவைகள் மறு இதழில் தொடரும்.



# பேச்சுப் போட்டி 2

## (தேசீய உணர்ச்சி)

இன்று தேச பக்தியைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். ஏதேனும் பெரிய காரியமொன்றைச் செய்து நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கு மூன்று விஷயங்கள் மிகவும் அவசியமானவை: முதல் முதல் இருதயபூர்வமான உணர்ச்சிவேண்டும். விவேகத்தினாலும் புத்திசாலித்தனத்தாலுமாவதென்ன அவை சிறிதுதூரம் சென்று அங்கே நின்றுவிடுகின்றன. அருள் சுரப்பது ஆர்வமுண்டாவது இருதயத்தின் மூலமாய்த்தான். முடித்தற்கரிய காரியங்களை முடிக்கவல்லது அன்புதான். பிரபஞ்சத்திலுள்ள ரகசியங்களெல்லாம் அறிவதற்கு வாயிலாயிருப்பதும் இவ்வன்புதான். ஆகையால் சீர்திருத்தம் வேண்டுகின்ற நண்பர்களே! இத்தகைய உணர்ச்சியை நீங்கள் முதலில் கொள்ளுங்கள். உங்களிடம் உண்மையில் இவ்வுணர்ச்சி இருக்கின்றதா? தேவர்களுடையவும், ரிஷிகளுடையவும் சந்ததியாரான கோடானு கோடி ஜனங்கள் இன்று மிருகங்களுக்குச் சமதையாக அவைகளின் சகோதரர்போன்ற நிலைக்கு வந்துவிட்டனரே என்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கின்றதா? லக்ஷக்கணக்கான ஜனங்கள் இன்றைய தினம் உணவின்றிப் பட்டினியாய்க் கிடக்கின்றார்களே! லக்ஷக்கணக்கான ஜனங்கள் பல நூற்றாண்டுகளாய் இப்பட்டினியால் மடிந்துவருகின்றார்களே என்ற உணர்ச்சி உங்களுக்கு இருக்கின்றதா?

அஞ்ஞானமானது இருண்ட மேகம்போல் சூழ்ந்து நாட்டைக்

---

திராவிடர்கள், பிராம்மணர்கள், பிராம்மணரல்லாதார்கள் என்று சண்டையிட்டுக் கொண்டிருக்கும்வரை எதிர்காலத்தில் ஒரு பெருமைவாய்ந்த இந்தியாவை உண்டாக்கக்கூடிய சக்தியை நீங்கள் பெறமாட்டீர்கள். எதிர்கால இந்தியா இவ்வொற்றுமையுணர்ச்சியையே முற்றிலும் சார்ந்ததாக இருக்கின்றதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஒருமை மனமும், ஒற்றுமை யுணர்ச்சியும் ஒன்றாகக் காரியங்களைச் செய்தலும்தான் வாழ்க்கையில் வெற்றிக்கு வழி. ஒற்றுமையாக இருக்கும் சிறு தேசங்கள் கட்டுப்பாடில்லாத பெரிய சமுதாயங்களை ஆண்டு வருவதைப் பல இடங்களில் காண்கிறோம். இதற்குக் காரணமிருக்கிறது. சிறு தேசங்கள் ஒன்றாக நினைத்து ஒன்றாகக் காரியங்களைச் செய்து அபிவிருத்தியடைகின்றன. எனவே சில்லரைச் சண்டைகளை நிறுத்துங்கள். மனித குலம் ஒன்றென மதித்துப் போற்றுங்கள். ஒற்றுமையை வளர்த்து எல்லோரும் ஓர் குலமாகுவோம், வம்மின். வம்மின்.

கவிந்து கொண்டு விட்டதே என்பதை நீங்கள் உணருகின்றீர்களா? அவ்வுணர்ச்சி உங்களை அமைதியற்றவர்களாக்கி விட்டதா? உங்களை உறக்கமில்லாதவர்களாய்ச் செய்கின்றதா? அது உங்கள் இரத்தத்திற்குள் பிரவேசித்து இரத்தக் குழாய்களின் வழியே சுற்றி உங்கள் இருதயத்தைப்போல் ஓயாது அடித்துக்கொண்டிருக்கின்றதா? நாட்டின் துக்கம், சீர்கேடு என்ற இவ்வொரே கவலை உங்களைப் பிடித்துக் கொண்டு விட்டதா? அதனால் உங்கள் பெயர் புகழ், பெண்டு, பிள்ளைகள், சொத்து, சுதந்திரங்கள் எல்லாவற்றையும் மறந்தீர்களா? உங்கள் தேகத்தையுங்கூட மறந்து விட்டீர்களா? இந்த நிலைக்கு வந்து விட்டீர்களானால் அதுவே தேசாபிமானியாவதற்கு முதற்படியாகும்.

இவ்வுணர்ச்சி இருந்தாலும் வெறும் வசை மொழிகளிலும், வீண் பேச்சுகளிலும், உங்கள் சக்தியையெல்லாம் செலவிடாது ஏதாவது காரியத்திற்கொணரும் வழியொன்றைக் கண்டுபிடித்தீர்களா? வீணான தூஷணைகளை விட்டு உபயோகமான காரியமேதேனும் செய்யவும், சில இனிய மொழிகளால் ஜனங்கள் படுந்துன்பங்களைச் சற்றே தணியும்படிச் செய்யவும், நடைபிணங்களாக்கிக் கிடக்கும் இக்கேவல நிலைகளினின்றும் அவர்களை விடுவிக்கவும் ஏதாவதொரு வழியைக்கண்டு பிடித்தீர்களா? இவைகளைச் செய்தால் மாத்திரம் போதாது.

உங்கள் காரியத்தில் இடையூறுகள் மலைபோல் திரண்டுவரினும் அவற்றைத் தயங்காது எதிர்த்துச் செல்லும் திடமான மனோசங்கற்பம் உங்களிடம் இருக்கின்றதா? முழு உலகமும் சேர்ந்து கையிற்கத்தி கொண்டு எதிர்த்து நின்றாலும் அப்பொழுதும் நீங்கள் சரியென்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின்வாங்காது செய்ய வல்ல தைரியம் உங்களிடம் இருக்கின்றதா? உங்கள் பெண்டு பிள்ளைகளே உங்களுக்கு விரோதமாய் நிற்பினும், உங்கள் பணமெல்லாம் இழக்க நேரிடினும், அதனால் உங்கள் பெயரே கெடுவதானாலும், மற்றெல்லாச் செல்வங்களும் போய்விடுவதாயிருந்தாலுங்கூட அப்போதும் எடுத்த காரியத்தை விடாமல் உறுதியாய் நிற்பீர்களா? உண்மை உணர்ச்சி—தக்க வழியொன்று காணல்—கண்ட அவ்வழியில் உறுதியுடன் உழைத்தல் ஆகிய இம்மூன்று குணங்களும் உங்களிடம் இருக்குமானால் உங்களுள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள். நீங்கள் பத்திரிகைகளில் எழுதவேண்டியதில்லை. பிரசுரங்கள் செய்து கொண்டு ஊர் ஊராய்ச் சுற்ற வேண்டியதில்லை. உங்கள் முகமே பிரகாசித்துக் கொண்டிருக்கும். அதுவே போதுமானது. நீங்கள் குகைக்குள் வசித்தாலுங்கூட உங்கள் எண்ணங்களானவை அக்கற்சுவர்கள் வழியாகவும் ஊடுருவிச் சென்று பல நூற்றாண்டுகள் வரை அதாவது தகுதியுள்ள சிலர் தோன்றி அவர் மனத்துட்புகுந்து அங்கே வேலை செய்யும் வரை உலக முழுதும் பாவிச் சூழ்ந்து கொண்டிருக்கும்.



# பேச்சுப் போட்டி 3

## மொழிப் பிரச்சினை

இந்தி பொதுமொழியாக வேண்டுமென்பதை ஆதரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில் பயனில்லை. தற்பொழுது மாகாணங்களுக்கிடையில் ஆங்கில மொழி மூலமே தொடர்பு இருந்து வருகிறது. மாகாண மொழிகளின் ஸ்தானத்தையோ அல்லது இந்தி மொழியின் ஸ்தானத்தையோ அபகரித்துக்கொள்ளும் நிலையில் ஆங்கில மொழிக்கு ஆதிக்கம் தரக்கூடாது. ஆங்கில மொழி பொது ஜனங்களுக்குரிய பொது ஜனங்கள் பேசி வருகிற பாஷைகளின் ஸ்தானத்தை அபகரித்துக் கொண்டிராவிட்டால், மாகாண மொழிகள் இன்று அதிசயிக்கத்தக்க முறையில் எவ்வளவோ வளம் பெற்றிருக்கும். இங்கிலாந்து, பிரஞ்சு மொழியை ஏற்றுக் கொண்டு அந்த மொழியைத் தனது தேசிய விவகாரங்களுக்கெல்லாம் பயன்படுத்தி வந்திருக்குமாயின் இன்று ஆங்கில மொழிக்குப் பெருமை தந்து கொண்டிருக்கும் இலக்கியச் செல்வங்கள் ஆங்கில மொழியில் தோன்றாமலே போயிருக்கும். நார்மன் படையெடுப்பிற்குப் பிறகு இங்கிலாந்தில் பிரஞ்சு மொழிதான் அரசியல் மொழியாக இருந்தது. பின்னர் தூய ஆங்கில மொழியே வேண்டுமென்ற உணர்ச்சி மேலோங்கி எழுவதாயிற்று. இன்று ஆங்கில மொழியில் காணும் சிறந்த இலக்கியங்களெல்லாம் இந்த உணர்ச்சியின் காரணமாக விளைந்த பயனேயாகும். இதை நாம் அறிவோம். ஆயினும் நாம் நம் தாய்மொழியைப்பற்றி படிக்காத நிலையிலேயே இருக்கின்றோம். நம் தாய் மொழிக்குக் காட்டவேண்டிய ஆதரவை ஆங்கிலமொழிக்கு அளித்தோம். இன்று வரை இயற்கைக்கு விரோதமான ஒரு ஸ்தானத்தை வகித்துக் கொண்டு ஆங்கில மொழி அதிகாரம் செலுத்தி வருகிறது. சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் வெகு தடபுடலாகப் பேசக்கூடுமாயினும் தங்களுடைய சிந்தனைகளைத் தங்கள் தங்கள் தாய் மொழியில் நன்கு வெளியிட அவர்களால் முடியவில்லை. சர். சி. வி. ராமன் செய்துள்ள ஆராய்ச்சிகள் யாவும் ஆங்கில மொழியிலேயே இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு அவற்றால் யாதொரு பயனுமில்லை. ரஷ்யாவின் நிலையைச் சிறிது கவனித்துப் பாருங்கள். புரட்சி ஏற்படுவதற்கு முன்னரே அங்கு சகலப் பாடப் புத்தகங்களையும்—சயன்ஸ் பாடப் புத்தகங்கள் உட்பட அனைத்தையும் ரஷிய மொழி மூலமே கற்பித்தார்கள். லெனின் செய்த புரட்சிக்கு வழிகோலி விட்டது உண்மையில் தாய் மொழி மூலம் கல்வி கற்பித்ததேயாகும். மாகாண ஸ்தாபனங்கள் தங்கள் தங்கள் மாகாண மொழியிலும், அகில-இந்திய விவகாரங்களை இந்தியிலும்

நடத்த முற்படவேண்டும். அப்படி இல்லாவிட்டால் பொது ஜனங்களுடன் உண்மையான தொடர்பு ஏற்பட முடியாது. ஏற்படுத்திக் கொண்டாலும் அந்தத் தொடர்பு ஸ்திரமானதாயிராது.

தாய்மொழியிருக்கப் பொது மொழியை, வற்புறுத்துவது ஏன் எனின் பொது மொழியானது தேசீய ஐக்கியத்தை வளர்ப்பதற்கு ஒரு சிறந்த வலிமையுள்ள கருவியாக நின்று உதவுகிறது. பொதுமொழி எவ்வளவுக்கு எவ்வளவு நாட்டில் உரம் பெற்றிருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நமது ஐக்கியமும் ஸ்திரமும் பெற்றிருக்கும்.

இந்த லட்சியம் கைகூடி வர ஒரு பொதுவான லிபியும் மிக மிக அவசியமாகிறது. நமது ஜனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறுக்கு மேற்பட்டவர்கள் கல்வி வாசனை அற்றவர்களாய் இருக்கிறார்கள். எந்த லிபியையுமே அவர்கள் அறியார். எனவே பொது லிபியைக் கொண்டே அவர்களுக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினாலென்ன? ஐரோப்பாவில் பொது லிபியைக் கையாண்டு பார்த்து அதில் சிறந்த முறையில் வெற்றியும் அடைந்திருக்கிறார்கள். அங்கே கையாளப்படும் ரோமன் லிபியை நாமும் கையாளவேண்டும் என்று சொல்கிற அளவுக்குச் சிலர் வந்து விட்டார்கள். தேவநாகரிக்கு இருப்பதைப்போல பூரணத்துவமும், உச்சரிப்பு ஆக்கமும் வேறு எந்த லிபிக்கும் இல்லை யென்றும், தேவநாகரி லிபியைத் தவிர வேறு எதுவுமே பொது லிபியாக வர முடியாதென்றும் அறிஞர்கள் அறுதியிட்டுக்கூறிய முடிவு யாவரும் அறிந்ததே. தேச ஐக்கியம் ஏற்படவேணுமென்று ஆவலோடு துடிதுடித்துக் கொண்டிருக்கும் இந்நேரத்தில் தேவநாகரி பொது லிபியைக் கொள்ளின், அது மாகாணப்பற்றையும் குறுகிய மனப்பான்மையும் போக்கச் செய்யும் சிறந்த சாதனமாகிறது. எனவே பொது லிபியின் மூலம் பொது மொழியைக் கற்று தேச ஐக்கியத்தை வளமுறச் செய்து வாழ்வோமாக.

---

ஒருவனுடைய சொந்தப் பாஷையில் கல்விப் போதனையைப் பெறுவது தேக ஆரோக்கியத்தின் பொருட்டு உணவுப் பண்டங்களைச் சொந்தப் பற்களினால் கடித்து மென்று விழுங்கு அவரவர் ஜீரணக் கருவிகளால் உடம்புடன் இரத்தத்தில் சேரவைத்துக் கொள்வதற்குச் சமானமாகும்.

உலககவி ரவீந்தரநாததாஹூர்.



# பேச்சுப் போட்டி 4

## (உடல் உழைப்பு).

அரசாங்கத்தின் ஆதரவில் பிள்ளைகள் கல்வி பெறுகிறார்கள். இவ்விதம் பெற்றுக்கொள்வதில் ஒரு பகுதியையேனும் அவர்கள் அரசாங்கத்திற்குத் திருப்பித் தரவேண்டும். ஆகவே இப்படித் திருப்பித் தரும்படி செய்துவிட்டால் அதுவே கல்விமுறையானது தனக்கேற்படும் செலவைத் தானே வகித்துக்கொள்ளச் செய்வதாகும். ஆரம்பக் கல்வி இதற்கடுத்ததான கலாசாலைக் கல்வி என்ற இரு பிரிவுகளையும் ஒன்றாக்கிவிடலாம். உயர்தரப் பாடசாலை என்று சொல்லுகிற நமது கலாசாலைகளில் அரைகுறையான ஏதோ சிறிது ஆங்கில அறிவும் கணிதம், சரித்திரம், பூகோளம் ஆகிய பாடங்களில் மேற்போக்கான ஏதோ சொற்பக் கல்வியுமே பெறுகிறார்கள். இந்தக் கணிதம் முதலான பாடங்களில் சிறு பகுதி முன்னமேயே ஆரம்ப வகுப்புகளில் அவர்கள் தங்கள் தாய்மொழியில் பயின்றிருக்கிறார்கள். எனவே கற்பிக்கிற பாடங்களை அப்படியே வைத்துக்கொண்டு இப்பாடத் திட்டத்திலிருந்து ஆங்கிலத்தைமட்டும் அறவே அகற்றிவிட்டால் பிள்ளைகள் இன்று பதினாறு வருஷத்தில் கற்கிற பாடத்திட்டம் அவ்வளவையும், ஏழே வருஷத்தில் கற்கும்படி செய்ய முடியுமென்பது நிச்சயம். மேலும் உழைத்துத் தொழில் செய்யவும், பிள்ளைகளுக்குக் கற்பித்து அரசாங்க கல்விக்காகச் செய்யும் செலவை ஈடுபண்ணும் வகையில் சுமாரான அளவு வருவாய் தரவும் செய்யலாம். இக் கல்வி முறையில் நடுநாயகமாய் விளங்குவது உடலுழைப்பாகும். உள்ளத்தின் விரிவே தொழிற்பயிற்சி மூலமாய்த்தான் ஏற்படவேண்டும். தொழிற் பயிற்சி என்பது பிள்ளைகள் பாடசாலையின் பொருட் காட்சிச்சாலையில் வைக்கத்தக்க வஸ்துக்களை தயார்செய்வதோ அல்லது எவ்விதப் பயனுமற்ற விளையாட்டுப் பொம்மைகளைத் தயார்செய்வதோ அன்று. தொழிற் பயிற்சியின் பயனாக நன்றாய் விற்பனையாகத்தக்க உபயோகமுள்ள வஸ்துக்கள் உற்பத்தியாதல் வேண்டும். வஸ்துக்களைச் செய்வதே இன்பகரமாயிருந்தால் அவர்களுடைய புத்தியைத் தூண்டிவிட்டுக் கூர்மைப்படுத்தும்.

சிறுபிள்ளை, திறமைவாய்ந்த தொழிலாளியோடு போட்டி போடுகிற நிலைமை எழாது. சிறுபிள்ளைகள் தயாரிக்கும் சாமான்களை அரசாங்கம் தானே எடுத்துக்கொண்டு விற்பனைக்கு ஏற்பாடு செய்யும். தவிர எப்போது என்ன தேவையோ அதை அனுசரித்துச் சாமான் தயாரிக்கும்படி பிள்ளைகளை நாம் பழக்கவும் வேண்டும். உதாரணமாக வீட்டில் பாய் நெய்ய பிள்ளைகளுக்குத் தொந்தரவாயிருக்கிறது. ஆனால் இதையே பள்ளிக்கூடத்

தில் செய்யும்பொழுது புத்தி கூர்மையோடு ஆனந்தமாய்ச் செய்கிறார்கள். பிள்ளைகளுக்களிக்கும் கல்வி, தனக்காகும் செலவைத் தானே வகித்துக் கொள்வதாகவும், பிள்ளைகளுக்கு அறிவும் மகிழ்ச்சியும் ஊட்டுவதாகவும் என்றைக்காகிறதோ அன்றே நன்னாள்.

நூல் நூற்பது, பஞ்சடிப்பது முதலான தொழில்களின் மூலமாகவே அறிவிற்குப் பயிற்சி அளிக்கவேண்டும் என்ற கொள்கையைப் பலர் உணரவில்லை. அறிவைக்கொண்டு மட்டும் படிக்கிற பாடமுறைக்குத் துணையாகத்தான் பள்ளிக்கூடத்தில் தொழிற்பயிற்சி வைக்கப்பட்டிருக்கிறது. இவ்விரு முறைகளுக்குமுள்ள வேறுபாட்டினை நன்கு உணர்தல்வேண்டும். ஒரு தச்சர் எனக்குத் தச்சுத் தொழிலைக் கற்பிக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். அவர் சொல்லிக்கொடுத்த அளவுதான் நான் ஒரு யந்திரம்போலக் கற்றுக் கொள்ள முடியும். இப்படிக் கற்றதின் பயனாய்ப் பலவகையான கருவிகளையும் எப்படி உபயோகிப்பதென்று தெரிந்துகொள்வேன். ஆனால் இந்த அறிவு என் புத்தியைக் கூர்மையாக்காது. தச்சுத் தொழிலில் சாஸ்திர ரீதியாகப் பயின்றவரொருவர் தச்சுத் தொழிலை எனக்குக் கற்பிப்பாரானால் அவர் எனது புத்தியைத் தூண்டிவிடுவதனால் நான் தச்சுத்தொழில் நிபுணனாவதுமட்டுமன்றி, சிறந்த என்ஜினியராகவும் ஆவேன். தச்சுத்தொழிலை சாஸ்திர ரீதியாய்ப் பயின்ற அவர் எனக்குக் கணித சாஸ்திரம் கற்பித்திருப்பார். பல வகையான மரங்களின் தன்மைகளையும் அவற்றினிடையுள்ள வேறுபாடுகளையும், அவை உற்பத்தியாகுமிடத்தையும் பற்றிச் சொல்லியிருப்பார். இதனால் பயிர்த்தொழிலறிவும், பூகோள அறிவும் ஏற்படும். உபயோகிக்கும் கருவிகளின் உருவத்தை சித்திரமாக வரையவும் கற்பிப்பார். இதனால் சுமாரான க்ஷேத்திர கணித அறிவும், சாதாரணக் கணக்கு அறிவும் உண்டாகும்.

படித்தல் எழுதுதல் என்ற இரண்டின் மூலமாக புத்திக்குப் பயிற்சியளிக்கிறார்கள். மறுபுறம் தொழிற் பயிற்சியுமளிக்கிறார்கள். இது போதாது. தொழிற் பயிற்சியைக் கருவியாகக் கொண்டுதான் புத்தியைக் கூர்மைப் படுத்த முடியும் என்பதே மிக மிக முக்கியமானதும் வற்புறுத்தப்படுவதும் ஆகும்.

எனவே பிள்ளைகளின் உடலிலும், உள்ளத்திலும், உயிரிலும் உள்ள சிறந்த சக்தியை வெளிப்படுத்திப் பொலிவு பெறச் செய்வது எதுவோ அதுவே உண்மையான கல்வியாகும். இந்தக் கல்வியானது வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே இல்லை என்ற உறுதியை அளிப்பதாய் இருக்கவேண்டும்.



# இலக்கியத்திலும் கலாசாரத்திலும் ஒற்றுமை காண்!

இந்திய சமுதாயம் இன்னல்கள் பலவும் நீங்கி பெரும் புகழும் பெற்று சிறந்த நிலையில் வாழ்வதற்குக் கல்வி முறையில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டும். மக்களின் ஒற்றுமையை வளப்படுத்தும் கலாச்சாரம் கல்வி முறையில் சேர்க்கப்படவேண்டும்.

பல மொழிகள், பல சமயங்கள், பல வகுப்புகள் இவைகளின் அடிப்படையில் பல்வேறு சமூகத்தார் வாழுகின்ற இந்த நாட்டில் அனைவருடைய பண்பாடும் புரிந்து கொள்ளவேண்டுவது மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாத மாபெரும் உண்மை. இவைகளுக்கு அடிப்படையாயுள்ள கலாசாரத்தை நாம் இடைக்காலத்தில் மறந்ததுதான் இன்று மொழிகள் அல்லது வகுப்புகளின் பெயரால் நடக்கும் பூசல்களுக்கு முக்கிய காரணம். அந்நிய மொழிகள், இலக்கியங்கள் யாவையும் நம்மவர் கரைகாணுமட்டும் படிக்கின்றனர். புலமையும் பெறுகின்றனர். ஆனால் தங்களுக்கு அடுத்துள்ள மக்கள் பேசும் மொழியைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. அவர்களின் பண்பையறியவும் முயற்சி எடுக்கப்படவில்லை. மக்களை மதம் பிரித்தாலும் கலாசாரத்திலும் இலக்கியத்திலும் ஒற்றுமை கண்டால் மக்களின் ஒற்றுமையை வளப்படுத்தல் எளிதாகும்.

பொதுவாக சீர்திருத்தம் செய்யப்படும் கல்வி முறையில் தேசியக்கல்வி முறை போதிக்கப்படவேண்டும். நாட்டினர் அனைவரின் தேவைக்கும் ஏற்பவும், மக்களை பூரணத்துவ வாழ்க்கை நடாத்தவும் கல்வி முறை அமையவேண்டும். அதன் லட்சியம், முறை, தரம் ஆகிய அனைத்தும் வாழ்க்கையின் பொருளாதார, சமூக கலாசாரத் தேவைகளுடன் ஒருமித்து இருக்க வேண்டும், பிரஜைகள் சமுதாயம் இரண்டுக்கும் இருக்க வேண்டிய தொடர்புமுதலியவை பற்றி புதியதொரு கருத்து சீர்திருத்த கல்வி முறையின் அடிப்படையாக வேண்டும். புதிய அரசியலைத் திறம்பட நிறைவேற்றும நிர்வாகிகளை உருவாக்க வேண்டும். பள்ளிக்கூடம், கல்லூரி ஆகிய ஒவ்வொரு இடத்திலும் தேச ஒற்றுமை, சமாதானம் போன்றவற்றுக்கான அவசியத்தை மாணவர்களுக்கு உணர்த்துவதோடு, அவை நிறைவேற்றுவதற்கான வகைமுறைகளையும் அது விதிக்கவேண்டும். இச் சீர்திருத்தத்தை கல்வியாளர்களும், மேதாவிகளும் நன்கு ஆராய்ந்து புதுக் கல்விமுறையை விரைவில் வெளியிடுவார்கள் என்று டாக்டர் ஜெயகர் கூறும் கருத்தினை வரவேற்பார்கள் என்று நம்புகிறோம்.

# முதியோர்க் கல்வியைப் பரப்ப

வயதுவந்தோர் ஓட்டுரிமை அடிப்படையிலேயே இந்திய அரசியல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சென்னை இராஜ்ஜியத்தில் மாத்திரம் 260 லட்சம் ஓட்டர்கள் உள்ளனர். ஆனால் 8 சதவிகிதத்தினர்களே எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக விருக்கின்றனர். தங்கள் வோட்டுரிமையை நன்கு பயன்படுத்திக்கொள்ள இவர்கள் போதிக்கப்பட்டாலொழிய ஜனநாயகத்தினால் பிரயோசனம் ஏற்பட முடியாது. இதற்காக படித்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் நேரத்தில் சிறிது பாகத்தை செலவிட வேண்டும்.

வயதுவந்த மாணவரின் குணாதிசயங்களை அபிவிருத்தி செய்ய ஆசிரியர்கள் சகல வழி முறைகளையும் கையாளவேண்டும். எழுதப்படிக்கத் தெரியாத வயதுவந்தவர்களின் சுயமரியாதையையும் தட்டி எழுப்பவேண்டும். கல்வி கற்கும் ஆர்வத்தை அவர்களிடம் உண்டாக்கவேண்டும். அறியாமையிலிருந்து நம் மக்கள் விடுதலை பெறுவிடில் அட்லாண்டிக் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட நான்குவித சுதந்திரத்தைப்பெற முடியாது.

சென்னை இராஜியத்தில் முதியோர் கல்வியை பிரசாரஞ்செய்ய உத்தியோக சார்பற்ற முதியோர் கல்வி கௌன்சில் ஒன்று நிறுவப்படவேண்டும். முதியோர்க் கல்வி, வேலைக்காக மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க, சர்வகலாசாலைகள் முதியோர்க்கல்வி இலாக்காக்களை ஏற்படுத்தவேண்டும். பிரதேச வாரி முதியோர்க் கல்வி அரங்குகள் அமைக்கப்படவேண்டும். தொழிற்சாலை முதலிய இடங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்குக் கல்வி அளிப்பதற்காக ஒருமணி நேரம் ஒதுக்கவும், இதற்கான செலவுகளை முதலாளிகள் ஏற்கவும் சர்க்கார் சட்டம் இயற்றவேண்டும். முதியோர்க் கல்வியைப் பரப்ப ஈடுபடுவோம் என்ற பிரதிக்ஞையை தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்குமாறு நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் எல்லாக் கட்சியாரையும் கேட்டுக் கொள்ளப்படவேண்டும். இத்தகைய திட்டமே முதியோர்க்கல்வியைப் பரப்பும்

## பேச்சுப் போட்டி

வீர உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பி அறத்தாற்றில் நிற்கச் செய்யும். இச் சொற் போட்டிகளை ஆங்காங்கு நடத்துவித்துப் பயன் பெறுவீராக.



# சர்வகலாசாலைகளில் ஒழுக்க நெறியை ஆதாரமாகக்கொண்ட சமுதாயமே தேவை.

சமூக வாழ்வில் பெரும் மனக்குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பழக்கத்தைப்பற்றியும், ஒவ்வொரு சம்பிரதாயத்தைப்பற்றியும் ஆட்சேபங்கள் எழுகின்றன. ஆயினும் ஒழுக்கநெறி பற்றிய ஒரு உறுதி மக்களிடை பரவுமானால் எல்லா ஆட்சேபங்களையும் சமாளிக்கக்கூடிய புது வாழ்வு உருவாவது அசாத்தியமல்ல. ஒழுக்க நெறியில் உறுதியிருந்தால் உலகம் நாகரிகத்தின் சிகரத்தை எட்டிப்பிடிக்க முன்னேற முடியும். மகான்கள், தமது சத்திய நெறியாலும், ஒழுக்க உறுதியாலும் மகத்தான மாறுதல்களை சாத்தியமாக்கியிருக்கின்றனர்,

உலகில் ஜனநாயகம் ஏற்படுவதற்குப் பல் நூற்றாண்டுகள் முன்னரேயே சமத்வ உரிமை உணரப்பட்டது. கொள்கையளவில் ஜனநாயகத்தில் எல்லா பிரஜைகளும் சமமானவர்கள் என்றாலும், உண்மையில் பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கலாம். ஆகவே, பொருளாதார சமத்துவம், கல்வியில் சம சந்தர்ப்பம், தொழிலில் உரிமை போன்றவற்றை அடைய முயற்சிக்கவேண்டும்.

இப்பொழுது, நம் சம்பிரதாயங்களில் நல்லவை, கெட்டவை இரண்டிற்கும் பலவித அதிர்ச்சிகள் ஏற்பட்டு வருகின்றன. அவற்றுள் நல்லவற்றைப் பாதுகாக்கவும், கெட்டவற்றை அழிக்கவும் நாம் தூய மனதுடன் உறுதிக்கொள்ள வேண்டும். கெட்டவற்றை அழிப்பதற்கு மட்டுமல்லாமல் அவற்றுக்குப் பதில் நல்லவற்றை சிருஷ்டிப்பதற்கும் நாம் உறுதி கொள்ளவேண்டும்.

இப்புனிதமான தொண்டாற்றப் பூரணமான யோக்கியதாம்சம் பெற்றவர்கள் பட்டம் பெற்ற இளைஞர்களே. பட்டம் பெறுவோரின் தொகை பெருகிவரும் இக்காலத்தில் பட்டங்களின் மதிப்புக் குறைந்திருக்கிறது. உண்மையிலேயே பட்டத்தைப்பற்றி பெருமையடையலாம். புதிய சமூகத்தை சிருஷ்டிப்பதில் தலைமைப் பதவி கல்வியறிவுடையோர் கையிலிருந்து பறி போய்விடுமானால் அது சமூகத்திற்கே பெரு நஷ்டமாகும். ஆகவே, சமூகத்தில் வகிக்கவேண்டிய பொறுப்பையும் உரிமையையும் பட்டதாரிகள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

## எல்லா சர்வகலாசாலைகளுக்கும் பொதுவான போதனாமொழி தேவை.

பல்கலைக் கமிஷன் போர்ட், எல்லாச் சர்வகலாசாலைகளில் ஒரே வகை போதனாமொழி இருப்பதற்கு ஆதரவு அளித்துள்ளது. வேற்றுமை மனோபாவங்களையும் தீவிர மாகாணப் பித்தையும் தவிர்க்கவும், மாணவர்களும் ஆசான்களும் ஒரு சர்வகலாசாலையிலிருந்து மற்றொன்றிற்கு மாறிச் செல்ல வசதிகரமாகயிருக்கவும் இது அவசியம். சர்வகலாசாலைக் கட்டத்தில் ராஜ்ய மொழியை போதனைச் சாதனமாக உபயோகிப்பது தக்கது.

## சர்வகலாசாலைகளில் யோக சாஸ்திர ஆராய்ச்சி.

இந்திய சர்வ கலாசாலைகளிலும், கல்வி ஸ்தாபனங்களிலும் யோக சாஸ்திர ஆராய்ச்சிகள் ஒரு பாடமாக போதிக்கவேண்டுமென்றும், நரம்புகளுக்கு தளர்ச்சி யுண்டுபண்ணக்கூடிய தற்கால வாழ்க்கை நிலை

## ஆசிரியர்கள் கோரிக்கை

ஆசிரியர்களுக்கு சர்க்கார் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதமே காலட்சேபத்துக்குப் போதியதன்று. ஆனால் அந்த விகிதம்கூட தனிப்பட்டவர் நடத்தும் பள்ளிகள் பலவற்றில் கொடுக்கப்படுவதில்லை. சம்பள வகையில்மட்டுமின்றி சாமான் கிராக்கிப்படி விஷயத்திலும் சர்க்கார் உத்திரவு ஏராளமான பள்ளிக்கூடங்களைப்பற்றிய வரை ஏட்டளவிலேயே இருந்துவருகிறது. முக்கிய காரணம் தனிப்பட்டோர்வசமுள்ள பள்ளிக்கூடங்களின் செல்வநிலை திருப்திகரமாயில்லாததுதான். எனவே அவைகளுக்கான கிராண்ட் தொகையை ஓரளவு உயர்த்தவேண்டுமென்று ஆசிரியர் கோரியிருப்பதின் நியாயத்தை யாரும் ஒப்புக்கொண்டேயாகவேண்டும்.

இதே சமயத்தில் பட்டணங்களில் தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி கொடுக்க வசதி செய்யவேண்டும். பொதுவாக ஆசிரியர்களின் சம்பள விகிதத்தை அவர்களது யோக்கியதைக்குத் தக்கவாறு உயர்த்தவேண்டும். ஆசிரியர்கள் என்றும் அநீதியான கோரிக்கையெதுவும் வெளியிட்டதில்லை. தங்கள் வேலைத்தரத்துக்கு ஒத்தபடி, கஷ்டமில்லாமல் தாங்கள் காலட்சேபம் நடத்தப் போதியவாறு தங்களுக்கு ஊதியம் அளிக்கவேண்டுமென்பதே அவர்கள் முக்கியமாக வேண்டுவதெல்லாம். அக்கோரிக்கையைச் சர்க்கார் மேன்மேலும் அலட்சியம் செய்துகொண்டிருப்பதற்கில்லை.

### ஆரம்ப ஆசிரியர்கள் மான்யத்தில் உயர்வு.

சர்க்கார் உதவிபெறும் ஆரம்பப் பாடசாலைகளில் சேவை செய்யும் உயர்தர ஆரம்ப ஆசிரியர்களுக்கான மான்யத்தை ஆசிரியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு இரண்டு ரூபாய் வீதம் உயர்த்த சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இதனால் வருஷத்துக்குப் பனிரெண்டுலட்ச ரூபாய் அதிகப்படி செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### ஆரம்பப் பள்ளிகளைப் பார்வையிடல்

ஜில்லா கலெக்டர்களும், பொது சுகாதார இலாகா டைரக்டரும் தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகள் சுற்றுப்பிரயாணம் செய்யும் காலத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை பார்வையிடவேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தவேண்டுமென்று சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

---

யில் யோகாசன ஸாதனம் அவசியமென்றும், அதனால் உடலும் மனதும் சமனமடையுமென்றும் தற்காலமுள்ள விஞ்ஞான உணர்ச்சியை தார்மீக மதிப்புகளுடன் சம்பந்தப்பட்டதாகச் செய்யவேண்டிய தவசியமென்றும் யோக மார்க்கத்தால் அமைதியும் சகோதரத்துவ உணர்ச்சியும் ஏற்படுமென்றும், ஏனெனில் அது மேற்குறித்த இரண்டையும் இணைக்கிறதென்றும், மைசூர் மகாராஜாகல்லூரியில் சென்னை பிரதம நீதிபதி ராஜமன்னார் வற்புறுத்திப் பேசினார்.



### மாணவர்களுக்கு போதனா முறைப்பயிற்சி

25 பள்ளிக்கூடங்களில் அமுல் 1950-51-ம் வருஷத்தில் சென்னை இராஜ்ஜியத்தில் 25 பள்ளிக்கூடங்களில் 5-வது பாரத்தில் போதனா முறைப் படிப்பை, ஒரு பாடமாகப் புகுத்த சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர். இத்திட்டம் தமிழ் நாட்டில் கீழ்க் குறிப்பிட்ட பள்ளிக்கூடங்களில் அமுல் நடத்தப்படும் (1) ஸயத் முர்துஸா ஹைஸ்கூல் (திருச்சி) (2) போர்டு ஹைஸ்கூல், (ஈரோடு) (3) போர்டு ஹைஸ்கூல், (மாஞ்சூர்) (4) வெஸ்லி ஹைஸ்கூல் (சென்னை) செயின்ட்மேரி ஹைஸ்கூல், (திண்டுக்கல்) (6) வி. எஸ். எம். ஹைஸ்கூல், (இடையங்குடி) (7) விடில் பிளவர் ஹைஸ்கூல், (சேலம்) (8) தீர்த்தபதி ஹைஸ்கூல், (அம்பா சமுத்திரம்) (9) எஸ். கே. பி. ஹைஸ்கூல், (அருப்புக்கோட்டை).

இந்தப் பாடத்தை எடுத்துக்கொள்ளும் மாணவர்களுக்கு முழு சம்பளம் வஜா செய்யப்படும். 5-வது பாரத்தில் 5 ரூபாயும், 6-வது பாரத்தில் 7 ரூபாயும், மாதந்தோறும் பண உதவியும் செய்யப்படும். ஒவ்வொரு வருஷத்திலும் 10 மாதங்களுக்கு இப்பண உதவி செய்யப்படும். சர்க்கார் நிர்வாகத்தில் இல்லாத பிரைவேட் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு இதனால் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கம் ஈடு செய்யும். இப்பாடத்தைப் பயிலும் மாணவர்கள் எஸ். எஸ். எல். ஸி வகுப்பு முடிந்தபின் ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்வதாக உறுதி மொழி அளித்தல் வேண்டும்.

### சென்னை சர்க்கார் பின்பற்றுமா?

மாணவர்களுக்குத் தேகப்பயிற்சியைக் கட்டாயப்படுத்தும் தேகவலிமை விளையாட்டு மசோதாவின் நகலை உ. பி. சர்க்கார் ஆராய்கின்றனர். இதுவரை இதுபோல இந்தியாவில் வேறெங்கும் மசோதா கொணரப்படவில்லை.

மொத்த தேகப்பயிற்சி வகுப்புகளில் மாணவர்கள் 60 சதவிகித வகுப்புகளுக்குப் போயாகவேண்டும். இல்லாவிட்டால் மேல் வகுப்பிற்கு அனுப்பப்படமாட்டார்கள்.

பாதிச் செலவு சர்க்காருடையதாகவும், இன்னொரு பாதிச் செலவு பள்ளிக்கூட அதிகாரிகள், பெற்றோர்களுடையதாகவும், பள்ளி மாணவருக்கு பிரதி தினம் தக்க போஷாக்கு உணவு அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

சர்க்கார் தேகாப்பியாச நிலையங்கள் நிறுவவும், யுவர்கொண்ட ஸ்தாபனங்கள், விளையாட்டு சங்கங்கள், நாட்டுத் தேகாப்பியாச முறைகள் அபிவிருத்தி ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மான்ய மளிக்கவும் மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

---

மாணவர்கள் பள்ளியிலிருந்து வெளியேறும்பொழுது நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும் என்ற உள்ளக்கிளர்ச்சியுடன் வெளியேறவேண்டும். சர்க்காரில் உத்யோகம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் யாரும் கல்வி பயிலக்கூடாது. பொறுப்புணர்ச்சியுடன் நாட்டிற்குச் சேவை செய்யவேண்டும் என்ற கருத்துடன் கல்விபயிலும் மாணவனையே நான் விரும்புகிறேன்.

**பண்டிட் நேருஜி.**



சென்னை-600 039

# பெற்றோர்ச் சங்க விழா


"வீடுதோறும் கலையின் விளக்கம், வீதிதோறும் இரண்டொரு பள்ளி" என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க மாணவர்களைக் கல்வியில் முன்னேற்றுவிக்கப் பெற்றோர்களிடம் தொடர்பு பெறவும், பள்ளியில் சேராத பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்கவும், வறுமையின் காரணமாகப் பள்ளியிலிருந்து இடையில் நின்றவர்களை மீண்டும் பள்ளியில் சேர்த்துப் பயன்பெறச் செய்யவும், ஏழை மாணவர்களுக்கு இடைவேளையில் உணவுகொடுத்து அவர்களை ஊக்குவிக்கவும், நடமாடும் தெய்வங்களான பிள்ளைகளுக்கு எவ்விதத்திலேனும் கல்வி யளிக்கவுமே பெற்றோர்ச் சங்கங்கள் நிறுவப்பட்டன. இத்தகைய பெரு நோக்கங்களோடு உழைத்துவரும் பெற்றோர்ச் சங்கங்களில் திருநின்றவூர்ப் பெற்றோர்ச் சங்கமும் ஒன்று. இதனை ஏற்று நடத்தியவர் திரு. நரசிம்மாச்சாரி அவர்களாவர். உழைப்பும் முயற்சியும் கொண்ட உள்ளத்தார். பெற்றோர்ச் சங்க நோக்கங்களை நிறைவேற்றி எடுத்துக்காட்டாக விளங்கச் செய்த பெருந்தகையாளர். இத்தகைய உழைப்பும் உயர்வும் கொண்ட பேரறிஞர்களால் நிறுவப்படும் பெற்றோர்ச் சங்கங்களை ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவை.

திரு. நரசிம்மாச்சாரி அவர்களுக்கு பிரிவுபசாரம் நடத்திய பொழுது அக்கிராசனம் வகித்த N. வாசுதேவன் B. A. L. T., அவர்கள் பெற்றோர்ச் சங்கங்கள் வலிமையோடு நன்கு பணியாற்ற ஆசிரியர்கள், மாணவர்களை முன்னேற்றுவிக்கப் பெற்றோர்களோடு தொடர்பு பெறவேண்டும் என்ற உறுதியைப் பெற்றிருக்கவேண்டுமென்றும், பெற்றோர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதோடமையாது நாட்டியம், இசை, நாடகம் முதலியன கற்பித்து, விளம்பரப்படுத்த வேண்டுமென்றும், பள்ளிகளில் பழைய மாணவர்ச் சங்கங்கள் அமைக்கப்படவேண்டும் என்றும் கூறினார்.

சொற்பொழிவாற்றிய A K.S சர்மா அவர்கள் தம் சொற்பொழிவில் திரு. நரசிம்மாச்சாரியாரவர்களின் தொண்டைப் பெரிதும் பாராட்டினார். மேலும் நரசிம்மாச்சாரியாரவர்கள் இரத்தக் கொதிப்பினால் உடல் நலம் பாதிக்கப்படுவதால் அப்பொறுப்பை இளைஞரான திரு. லக்ஷ்மி நரசிம்மன் அவர்களுக்குக் கொடுத்திருப்பது அவருடைய பெருந்தன்மையைக் காட்டுகின்றதென்றும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் ஒத்துழைத்தால் கிராமங்களில் கல்வி மிக விரைவாகப் பரவச்செய்வது எளிதென்றும் தம் சொற்பொழிவில் குறிப்பிட்டார்.

Edited and Published by Sri A. K. S. Sarma, 87, Acharappan St., Madras
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St. Madras—1





82
4-50

# ஆதாரக்கல்வி

OFFICE OF THE REGISTRAR ... MADRAS
OCT 1950





தாயே! நம் மக்கள் சுதந்திரம் அடைந்துவிட்டனர். வாக்குரிமையையும் பெற்றனர். இனி கல்வியின்மையைப் போக்கிக் காத்தருள்வாயாக.

ஆதாரக்கல்வி காரியாலயம்,
நெ. 87, ஆச்சாரப்பன் தெருவு,
ஆண்டு சந்தா ரூ. 3] சென்னை. [தனிப்பிரதி அணா 4

# பொருளடக்கம்


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | அஞ்சலி செய்வோம் —தலையங்கம் ... | 1 |
| 2. | திரண்டுவாரீர் தமிழ் நாடு மகாநாட்டிற்கு —எஸ். வில்லியம்ராஜ் ... | 3 |
| 3. | மன்னார்குடி மகாநாடு ... | 4 |
| 4. | மூலாதாரக் கல்வியே முனிவரருளிய உபநிஷத உண்மைகள்—'ஆசி' ... | 5 |
| 5. | வி. சி. காளியப்பன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு | 9 |
| 6. | கூட்டுறவு—சி. பாலசுப்பிரமணியம் ... | 10 |
| 7. | ஆசிரியர் உள்ளம் —"சிகி" ... | 12 |
| 8. | ஆசிரியர்கள் கவனிக்க ... | 15 |
| 9. | சென்னை சர்க்கார் அறிக்கை ... | 16 |
| 10. | வேதனையால் வெடிக்குது!—(சுராகசி) ... | 17 |
| 11. | கணக்கு —M. S. சீனுவாசன் ... | 18 |
| 12. | எட்டாவது வகுப்பும் ஆங்கிலப் பத்தகமும் —ஸர். எஸ் ராதாகிருஷ்ணன் ... | 19 |
| 13. | குழந்தைகளின் உணர்ச்சிகளைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை—S. N. டாம்ஹேறன் M. A. M. Ed., ... | 21 |
| 14. | மாணவரொழுக்கம்—P. இராமகிருஷ்ண விஜயரங்கம் | 24 |
| 15. | ஹிந்தியே தேசப் பொதுமொழி ... | 26 |
| 16. | ஆசிரியருக்கு வாழ்த்து ... | 28 |
| 17. | எதிரொலி (அரசியல்) V. ராதாகிருஷ்ண B. Com. | 29 |



## குழந்தை உள்ளம்

(சுராகசி)

பச்சிளங் குழந்தை தன்னைப்
பாங்குடன் பார்த்திட் டாலே
இச்சக நினைப்பு போகும்
இன்பமும் வந்து சேரும்
அச்சிறு உடலைத் தொட்டு
அன்புடன் நாமும் தானே
உச்சியே முகர்ந்து விட்டால்
உள்ளமும் துள்ளி டாதோ?
மழலைவாய் குழந்தை தானும்
மகிழ்வுடன் வாயைக் காட்டி
அழகிய வதனம் தோன்ற
அமுதமே தந்து நிற்கும்!
பழகிய குழந்தை உள்ளம்
பகர்ந்திடும் செய்கை எல்லாம்
குழந்தையே உலகம் என்று
குறைவற சொல்லி நிற்கும்!

சாதியின் பிணக்கு இல்லை
சழக்கரின் சார்பு இல்லை
நீதியின் கலையும் அங்கே
நிலைதடு மாறு தம்மா!
தீதிலா வழியில் செல்லும்
தவநிலை சேர்த்த உள்ளம்
ஆதியாய் இருத்த லாலே.
அகிலமும் வாழ்கு தென்போம்.
குழந்தையின் உள்ளம் தன்னை
குதர்க்கமாய் சென்றி டாது
பழகிய முத்துப் போல
புரட்சியின் தோன்றல் என்ன
அழகிய ஆசான் மாற்றும்
அமைவுறு சக்தி தன்னை
தொழுதுமே நாளும் நாமும்
துதிகளும் செய்து நிற்போம்!


SOCIAL PRINTERS,
PRINTERS & BINDERS,
396 MINT ST. G. T. MADRAS.



கல்வி 3 | விக்ருதி, புரட்டாசி—அக்டோபர் 1950 | கலை 6


# அஞ்சலி செய்வோம்

காந்தீஜியும் காங்கிரஸுமே நம் நாட்டின் இருகண்கள். ஒப்பற்றமாணிக்கங்கள். காந்தீஜியின்பெருமை சொல்லிலடங்குவதில்லை. கற்பனைக்கு எட்டுவதில்லை, கவிதை திகைக்கிறது, காவியம் திணறுகிறது, கலைகள் கரங்கூப்பித் தலைதாழ்த்தி வணங்குகின்றன. பாரதத்தாய் மக்களுக்கு ஈந்த மாணிக்கம் மகாத்மா. அடிமை வாழ்வறுக்க அஹிம்சை ஆயுதத்தால் ஒரு துளி குறுதியும் சொட்டா வண்ணம் சுதந்திரம் வாங்கியருளிய சுதந்திர வீரர் காந்தீஜி. களிப்பும் பூரிப்பும் கரைபுரண்டோடுகிறது காந்தீஜியைக் கருதும் பொழுது. உவகை பொங்குகிறது உலகம் போற்றும் உத்தமர் காந்தீஜி நம் நாட்டில் உதித்த பெருமான் என்று எண்ணும் பொழுது.

காந்தீஜியை நினைக்கும் பொழுது அவர் கொள்கைகளை மறந்து வரும் காங்கிரஸும் நம் நினைப்புக்கு வாராமற் போகாது. காங்கிரஸ் தேசிய ஸ்தாபனம்.

தூய சுதேச நேசர்களின் சங்கமாக—நம் தாயகத்திற்கு நாயகமாக—தீரர்கள் தூண்டிய தியாகக் கனலிலே புடம்வைத்த தங்கமாக—பாரத விடுதலைக்கு சிங்கம்போல் பாய்ந்தெழுந்து அடிமையகற்றி, அச்சம் போக்கி, கூற்றினை எதிர்த்து, கொடுமையினை நசுக்கி, மீறும் சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று துஞ்சு மட்டும் பாரத நாட்டிற்குத் தூய்மையாகத் துணிவோடு தொண்டிழைத்த பாலகங்காதர திலகரின் அருளைப் பெற்றிருந்த சங்கமாக—பெற்று வைத்த தாயார்களும், பற்றியுள்ள நண்பர்களும், சுற்றியுள்ள சுற்றமும், மற்றுமுள்ள மாந்தரையும் விட்டுவிட்டு, பெருந் தலைவர்களும், தியாகிகளும் சென்ம முற்றும் சிறையில் வைத்து சீரழித்தபோதி

லும், வன்மங்கொண்டு வழியடைத்து வதைசெய்த போதிலும் அப்பூட்டிய சிறைகளில் புண்பட்டுத் தவித்து, தேசத்தைக் காக்க தங்கள் கண்ணீரால் கழுவி வளர்த்த மாசற்ற ஸ்தாபனமாக—பாழ் சிறைபட்டினி பயங்கரச் சட்டங்கள் படுமோசக் குண்டுகள் எவற்றிற்கும் தளராது அறமும், அன்பும், அஹிம்சையும் ஆயுதங்களாகக் கொண்டு இரத்த முற்றி இன்னுயிர் ஈந்து வளர்த்த அருட்பெரும் தியாகிகளின் சங்கமாக—காந்தியண்ணலின் துணைபெற்று ஆக்கிரம வெறிபிடித்த ஆங்கில ஏகாதிபத்தியத்தை அஹிம்சையின் மூலம் விரட்டியடித்து மக்களுக்கு சுதந்திரம் பெற்றுத்தந்ததில் பெரிதும் உதவிய சங்கமாக—தேச பக்திக்கும் சேவைக்கும் கொள்கலமாக இருந்த காங்கிரஸ் அந்தோ! இன்று அதனை இருள் கவ்விக்கொண்டிருக்கிறது.

மங்கள மயமாய் எங்கணும் நிறைந்து மாநிலம் மகிழ, திங்களையொப்பத் தீங்கதிர் பரப்பிச் சுதந்திர ஒளிவீசும் ஸ்தாபனத்தில் திட்டுத் திட்டாக இருள் காணப்படுகிறது. தேசத் தொண்டிற்குப் பாடுபட்ட கட்சியில் தன்னலக்காரர் புகுந்து கொண்டனர். கள்ள மார்க்கட்காரர் நுழைந்து கொண்டனர். காந்தீஜியின் கொள்கைகள் பள்ளந்தோண்டிப் புதைக்கப்படுகின்றன. லஞ்சமும் வஞ்சமும் தலைவிரித்தாடுகின்றன. பதவிவேட்டையும், பசுந்தோல் போர்த்த புலிகளும் அக்கட்சியை ஆக்கிரமித்திருக்கின்றன. வகுப்பு வாதமும் கட்சிச் சண்டையும் அதனுள் புகுத்தப்படுகின்றன. காந்தீஜியின் புனிதக் கரத்தால் பாரத தேசப் பணிக்காக வளர்க்கப்பட்ட கட்சி—பாபுஜி பரந்த உலகை நீத்தபோது அவர் பேருரைகளைப் பின்பற்றுவதாக வாக்குறுதியிட்ட கட்சி அந்தோ! வழிதவறி, திசை மறந்து, தறிகெட்டுச் செல்கிறது.

நமக்குச் சுதந்திரம் வாங்கியளித்த காந்தீஜிக்கு கடமையாற்ற வேண்டுமானால் களங்கமற்ற கருத்தோடு காந்தீஜியின் கொள்கைகளை கடைபிடித்தொழுகிய காங்கிரஸ் ஸ்தாபனத்தை தூய்மையானதாக்க வேண்டும். மக்கட் கட்சியை மாசுறச் செய்தல் மகாத்மாவிற்கு செய்யும் துரோகமாகும். நாட்டின் சீர்கேட்டிற்கு உதவும் செய்கையாகும் காங்கிரஸில் ஊழல்கள் மிகுந்திருக்கின்றன. கண்ட்ரோல்கள் வைத்திருப்பதும் காரணமாகாமற் போகவில்லை. ஆயினும் தேசத் தேவைக்குப் பெரிதும் ஒத்துழைத்த ஸ்தாபனத்தைக் களங்கமாக்குவதற்கு எவரும் ஒப்பார். தலைவர்கள் இதனை உணரவேண்டும். இனம், நிறம், மொழி, பேதங்கள், வகுப்புவாதம் முதலியவற்றை ஒழிப்பதின் மூலமே காங்கிரஸை மீண்டும் கண்ணிய ஸ்தாபனமாகச் செய்யமுடியும். அண்ணலின் அருட்கொள்கைகளைக் கைக்கொள்வோம். தேச மக்களின் ஏகோபித்த குரலான காங்கிரஸை வலுப்படுத்துவதின் மூலம் தேசசேவை செய்வதோடு அண்ணலுக்கு அஞ்சலி செய்வோம்.

வாழ்க காந்தீஜி! வளர்க காந்தீயம்!!



# திரண்டு வாரீர்! தமிழ் நாடு மகா நாட்டிற்கு.

எஸ். வில்லியம்ராஜ், காரியதரிசி
தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியச் சம்மேளனம், பழனி.

ஆரம்ப ஆசிரியர்களுக்கு தமிழ் நாடு காரியதரிசி வேண்டுகோள்!

ஆரம்ப ஆசிரியர்களே எழுமின்! திட்டங்களைத் தீட்ட திரண்டு கூடுமின்!! – உரிமைகளைப் பெற ஒன்றுபடுமின்!!! உறங்கும் ஆசிரியச் சமூகமே விழித்தெழு! செயலாற்ற வீறுகொண்டெழு!! இன்று, நாட்டிலே எங்கும் எல்லாச் சமூகமும் தனது அந்தஸ்தை உயர்த்த, தனது உரிமைகளைப் பெற ஒன்றுபட்டு உழைப்பதைக் காணும் ஆசிரியச் சமூகம், தன் நிலை பற்றி சிந்திக்க வில்லையானால் நமது எதிர்காலம் எப்படி உருவாக்கப்படும் என்பதை விளக்க வேண்டுவதில்லை. ஆசிரியர்களின் அந்தஸ்து என்ன? ஜனநாயக நாட்டிலே ஆசிரியன் மனித வர்க்கமாக மதிக்கப்படவேண்டாமா? அடிமை இந்தியாவிலே ஆசிரியர்களுக்கு பேச்சுரிமை மறுக்கும் சட்டம் ஜி. ஓ. 1280 இருந்தது. இன்று அது எடுக்கப்பட்டு விட்டதா? பம்பாய் மாகாண ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்ந்து, அவர்கள் இன்று சுதந்திரத்துடன் வாழ்வதை பார்க்கவில்லையா? இந்நிலையை நாமும் பெற வழி காட்டவே கூடுகிறது, நமது இரண்டாவது தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியச் சம்மேளன மகாநாடு. "வெந்த புண்ணிலே வேல்கொண்டு பாய்வது" போல் ஆரம்ப ஆசிரியச் சரித்திரத்திலே மிக வெட்கக்கேடான நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது. சட்ட சபைகளுக்கு ஆசிரியப் பிரதிநிதிகளை பொறுக்கும் வாக்குரிமை ஆரம்ப ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது சுதந்திர நம் இந்திய உபகண்டத்திலே இம் மாகாணத்திலே வதியும் சுமார் ஒன்றரை லட்சம் ஆரம்ப ஆசிரியர்களுக்கு இது மிகவும் வருந்தத்தக்க செய்தி. ஆரம்ப ஆசிரியச் சமூகத்திற்கு இழைக்கப்பட்டுள்ள பெரும் அநீதி. ஆசிரியர்களுக்குள்ளே பேதா பேதம் காட்டப்படும் இந் நிகழ்ச்சியை மாற்றியமைக்க வேண்டுமானால் திரண்டு கூடுங்கள் மகா நாட்டிற்கு! திட்டங்கள் தீட்டுங்கள்!! ஒன்றுபட்ட குரலால் நமது கோரிக்கைகளை கூற ஒன்று கூடுங்கள்!!!

இம்மகாநாடு மிகவும் சிறப்பானது மட்டுமல்ல; முக்யத்வம் வாய்ந்தது. ஜனநாயக நாட்டிலே கூடும் முதல் மகாநாடு இது, அதுவும் நமது உரிமையை, அந்தஸ்தை பெறக்கூடுகிறோம். ஜனநாயக அடிப்படையிலே நமது திட்டங்கள் நிறைவேற; நமது ஜீவாதார உரிமைகளைப்பெற; நமது ஒன்று பட்ட சக்தி தேவை. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இது வாய் வேதாந்தம் அல்ல தமிழகத்திலே வதியும் (போர்டு, எய்டெட், முனிசிபல்

# மன்னார்குடி மகாநாடு

மன்னார்குடி மகாநாட்டிற்கு மகிழ்ச்சியோடு விஜயம் செய்யும் ஆசிரியர்களே! திட்டங்கள் தீட்டித் திறம்பட நடத்தத் திரண்டுவாருங்கள். சென்ற இதழில் மாநாட்டிற்குத் தேவையான 4 அம்சத் திட்டங்கள் கொடுக்கப்பட்டது ஞாபகமிருக்குமென்று நம்புகிறோம். மீண்டும் நினைவுறுத்துகிறோம். தீட்டிய திட்டங்களைத் திண்ணமாகத் திறமையோடு நடத்த, பதவிமோகம் போன்றவை பற்றிக் குறுக்கிடாது நலம் பல பெற்று ஆசிரியச் சமூகம் அமைதியாக வாழ்வதற்கு, கீழ்க்கண்ட புள்ளி விவரங்களை மாநாடு தயாரிக்கவேண்டும்.

1. ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு உயர்தரப் பள்ளியில் இலவசக் கல்வியளிப்பதை அரசாங்கம் மகத்தானபிரச்சனைஎன்றுஉணருகிறது. அப்பிரச்சனையை சுமுகமாகத் தீர்க்க அரசாங்கத்தாருக்கு எட்டாம் வகுப்புக்குமேல் உயர்தரப்பள்ளியில் படிக்கும் ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகள் ஆண் பெண் அடங்கலாக ஜில்லாவாரியாக எத்தனைபேர் என்ற புள்ளி விவரங்களை தெரிவிக்க வேண்டும். அப்பொழுதே இப்பிரச்சனை எளிதாகச் செய்ய இயலும்.

2. கிராமங்களில் கல்வியைப் பரப்பப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளிக்கும் நிபந்தனைகளில் ஆசிரியரொருவருக்கு 5½ செண்ட் வீதம் குடியிருக்க இடவசதியும், ஒவ்வொரு மாணவனுக்கும் 9½ சதுர அடி உட்காருமிடங்கொண்ட பள்ளியிடமும், கிராமங்களிலுள்ள கிராம நத்தம்,

பஞ்சாயத்து) ஆரம்ப ஆசிரியர்களே! ஆசிரியைகளே!! நமது எதிர்காலத்தின் உயர்வு, நம் கையிலேதான் இருக்கிறது. நம்மிடமுள்ள வேறுபாடுகளை ஒழித்து, ஒன்றுபட்டு ஆரம்ப ஆசிரியச் சமூகம் என்ற ஒரே அடிப்படையிலே ஐக்கியப்பட்டு நமது நிலையை உயர்த்த முன் வாருங்கள்! வருகிற ஆகஸ்ட்டு இறுதி வாரத்திலே நமது தமிழ் நாடு ஆரம்ப ஆசிரிய மகாநாடு, தஞ்சை மாவட்டத்திலே, மன்னார்குடியில் கூட விருக்கிறது. உங்கள் அனைவரையும் அறைகூவி அழைக்கிறது. திரண்டு வாருங்கள் திக்கெட்டும் நம் நிலை உயர்த்த.

நமது தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லா, தாலுக்கா யூனியன்களும் (போர்டு, முனிசிபல் எய்டெட் பஞ்சாயத்து) ஏராளமான பிரதிநிதிகளை அனுப்பி வையுங்கள். ஜில்லா சங்கங்கள் 5 பிரதிநிதிகளை தமிழ் நாடு நிர்வாகக்குழுவிற்கு தேர்ந்தெடுத்து அவர்களின் பெயர்களை நமது அலுவலகத்திற்கு அனுப்பி வையுங்கள். மகாநாடு பற்றிய முழு விவரங்களை மகாநாட்டு வரவேற்புக் குழுவினர் அறிவிப்பார்கள். மகாநாடு வெற்றிபெற உங்கள் அனைவரின் ஒன்றுபட்ட ஒத்துழைப்பைக் கொடுக்கும்படி தமிழகத்திலுள்ள எல்லா ஆரம்ப ஆசிரியர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மகாநாட்டு அறிக்கைகள் மூலம், மகாநாட்டு, தேதி இதர விஷயங்களை அறிந்து கொள்ளுங்கள்.



# மூலாதாரக் கல்வியே முனிவருளிய உபநிஷத உண்மைகள்.

## தைத்திரீய உபநிஷதம்.

### "ஆசி"

### 1. சிக்ஷாவல்லி - பயிற்றுமுறை.

மறைவாழ்க்கை நல்லுபதேசம்:

ஆசான் சீடனுக்கு கட்டளையிடல்:

*வேதத்தைப் பயிற்றுவித்து, ஆசான் அண்மைவாழ் சீடனை ஏவிக் கூறுகின்றார்:*

அடிப்படையொழுக்கம்:

*உண்மைபேசு; அறஞ்செய்; ஓதலினின்றும் வழுவாதே; (கல்வி பயின்று வெளியேறுகையில்) ஆசானுக்கு உகந்த பொருள் வழங்கி, (விடை பெற்றுச் சென்று), மகவு எனும் கயிற்றை அறவே அறுத்துவிடாதே (இல்லறம் புகாமலிராதே). (அப்போதும்) உண்மையினின்று வழுவாதே; அறத்தினின்று வழுவாதே; செல்வத்தினின்று நழுவாதே; ஓதுதல்-ஓதுவித்தலினின்றும் வழுவாதே.*

புறம்போக்கு நிலங்களில் ஏற்படுத்திக் கொள்ள நிபந்தனையை விதிக்க வேண்டும். இதற்கு ரெவினியு இலாகாவும் ஒத்துழைக்கவேண்டும். இதனை அரசாங்கத்தாருக்கு உணர்த்த கிராம கணக்குப்பிள்ளைகளின் மூலம், கிராமநத்தம், புறம்போக்கு நிலங்களின் ஸர்வே நம்பர் விஸ்தீரணம் முதலிய கணக்கு விவரங்களை அறியவேண்டும்.

3. ஜில்லா, தாலூக்காக்களில் உள்ள நாட்டாண்மைக்கழக அங்கத்தினர்களோ, அல்லது சட்டசபை அங்கத்தினர்களோ எவரெவர் என்றறிந்து, அவர்களை அவ்வவ் வட்டங்களிலுள்ள பள்ளிகளை உயர்த்தும் பணியில் செய்கையளவில் செய்ய ஊக்குவிக்கவேண்டும்.

4. ஆசிரியர்களிடமிருந்தோ தனிப்பட்டவர்களிடமிருந்தோ ஆசிரியர் மாநாட்டிற்கோ, அதனோடு தொடர்புடைய அலுவல்களுக்கோ அல்லது ஆசிரியரின் அபிவிருத்திக்கான வழிகளுக்கோ வருகின்ற தொகையின் வரவு செலவு கணக்குகளை ஒழுங்காக நியாயமாக சங்கத்தின்பேரால் பேங்கில் போட்டு, ஆண்டுக்கொருதரம் அக்கணக்குகளை "ஆடிட்" செய்து, தொகை அளித்தோர்களின் பெயர்களடங்கிய அறிக்கையை தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதோடு அமையாது ஆசிரியர்களின் நலனுக்காக அல்லும் பகலும் அனவரதமும் தொண்டாற்றும் பத்திரிகைகளின் வாயிலாகவும் பிரசுரிக்கவேண்டும்.

இந்நான்கு முறைகளுக்கு வேண்டிய புள்ளி விவரங்கள்போலவே மாநாட்டில் தீட்டப்படும் ஏனைய திட்டங்களுக்கும் புள்ளி விவரங்களை தயாரித்து அரசாங்கத்திற்கு உணர்த்தவேண்டும். அப்பொழுதுதான் ஆசிரியர்களின் வேண்டுகோள் அரசாங்கத்திற்குக் கேட்கும். ஆவன செய்ய முற்படுவார்கள். ஆசிரியர்களே திக்கு எட்டிலிருந்தும் திரண்டு வாருங்கள். வெற்றி நமதே.

## போற்றப்படவேண்டுவோரும், வேண்டுவனவும்:

*வானவர்-தென்புலத்தார் கருமங்களினின்றும் வழுவாதே; தாயை தெய்வமாகக்கொள்; தந்தையை தெய்வமாகக்கொள்; ஆசானை தெய்வமாகக் கொள்; விருந்தினனை (அதிதியை) தெய்வமாகக்கொள்; எவை இகழப்படாத கருமங்களோ அவை போற்றப்படல் வேண்டும்; மற்றவைகளல்ல. எவை எங்களது நல்லொழுக்கங்களோ அவை உன்னால் வழிபடல் வேண்டும்; மற்றவைகளல்ல.*

## அறிஞர்பால் ஒழுகுமுறையும் ஈகைமுறையும்:

*எவ்வெவர் நம்மினும் சீரிய மறை அறிஞரோ, அவர்கள் அவை வீற்றிருக்கையில் நீ மூச்சுவிடக்கூடாது (குறுக்கிட்டு உரையாடலாகாது) (அல்லது அவர்களுக்கு மணை முதலியன கொடுத்து உபசரித்தல் வேண்டுமெனவும் பொருள்படுகிறது). விருப்புடன் (கொடை) வழங்கல் வேண்டும்; விருப்பின்றி வழங்கக்கூடாது; திருவுடன் வழங்கல் வேண்டும்; நாணத்துடன் (அடக்கமுடன்) வழங்கல் வேண்டும்; அச்சமுடன் வழங்கல் வேண்டும்; நட்புடன் வழங்கல் வேண்டும்.*

## அறிஞர்வழிபேணி ஐயங்களைதல்:

*இனி உனக்குக் கருமஞ்செய்வதில் ஐயமோ, அல்லது ஒழுக்க முறையில் ஐயமோ ஏற்படின், ஆங்கு எந்த மறைஅறிஞர் (அந்தணர்)—ஆழ்ந்த கருத்தினர்,[அனுபவம்நிறைந்து] தகுதியுற்றோர், நேர்மையில் உறுதிகொண்டோர், கொடுமையில்லாதோர், அறவிருப்ப முடையோர்—உளரோ, அவர்கள் எவ்வாறு ஆங்கு ஒழுகுவரோ அவ்வாறு ஆங்கு ஒழுகுவாய் [நடந்துகொள்]. இனி குற்றஞ்சாற்றப் பெற்றவர்களிடத்தும் ஆங்கு எந்த மறை அறிஞர்—ஆழ்ந்த கருத்தினர், [அனுபவம் நிறைந்து] தகுதியுற்றோர், நேர்மையில் உறுதி கொண்டோர், கொடுமையில்லாதோர், அறவிருப்ப முடையோர்—உளரோ, அவர்கள் எவ்வாறு அவர்களிடம் நடந்துகொள்வரோ, அவ்வாறு அவர்களிடம் நடந்து கொள்வாயாக.*

## உபதேச முடிவுகூறல்:

*இது விதி முறை; இது உபதேசம்; இது வேத ரகசியம்; இது வேதக் கட்டளை. இவ்வாறு கடைப்பிடித் தொழுகல்வேண்டும்; இவ்வாறு இதுவே கடைப்பிடித் தொழுதற்கு உரியது.*

*[பத்தாவது அனுவாகத்தில் திரிசங்கு முனிவரது ஆன்ம வுணர்ச்சியின் மகிழ்ச்சி யுரை கூறப்பெற்றது. அது அனுதினமும் வேத முழுதும் ஓத இயலாதோருக்கு ஓர் உபாஸனை மந்திரமாக விளங்குகிறதெனவும் கூறினோம். ஓதுதலும் ஓதுவித்தலும், உபாஸனை முறைகளும் நல்லொழுக்கமின்றி கையாளப்படின் அவை வினைப்பயன்களை நீக்கமுறச் செய்யா; ஆன்ம வுணர்வு நிலை நோக்கி மேம்படவும் செய்யா. ஆகலின், இந்த பதினொன்றாவது அனுவாகத்தில், சிக்ஷாவல்லி யெனும் பயிற்றுமுறையின் ஈற்றுப் பகுதியில், மறை வாழ்க்கையில் சீடன் எவ்வகை யொழுக்கங்களை ஏற்கவேண்டுமென்பதை ஆசான் சுருங்கக் கூறுகின்றார்:*

**வேதங்களைப்** பயிற்றுவித்து என்பதால் மறைவழி வாழ்க்கைக்கு வேண்டியனவற்றை ஒருவாறு பயிற்றுவித்தாகிவிட்டது என்பதைக் குறிக்



கிறது. அத்தருணத்தில் தன்னருகேயே எப்போதும் வீற்றிருந்து கற்கும் சீடனை விளித்து, கல்லூரிகளில் இக்காலத்தில் மாணவர்களுக்கு இறுதிப் பொன்மொழி கூறுவகையில், வாழ்க்கையில் ஏற்றுக் கடைப்பிடித்து ஒழுக வேண்டிய வினைப்பயன்களைக் கூறுகின்றார். தம்மை யறியாமலே, பெரும்பாலோர் வினைப்பயன்களைப் பெருக்கிக்கொண்டு ஆன்ம வுணர்வு நிலையாம் குறிக்கோளை யணுகாதவ ராகிவிடுகின்றன ரென்பதைக்கொண்டு எச்சரிக்கை செய்து கூறுவதேபோன்று இவ்வுபதேசம் இலங்குகின்றது.

## அடிப்படை யொழுக்க விளக்கம்:

ஒழுக்கமின்றியோர் ஆன்ம வுணர்வு வழியில் சிறிதும் முன்னேற்றமடையார். நல்லொழுக்கத்தால் நற்பிறவியும், தீய ஒழுக்கத்தல் தீதுற்ற பிறவியும் அடைவரென்று சாந்தோக்கியம் [5—7] முதலிய உபநிஷதங்கள் கூறுகின்றன.

ஒழுக்கங்களுக்கு அடிப்படைபோன்று விளங்குவது உண்மையுரைத்தலே. அவ்வுண்மையை ஏற்று ஒழுகாவிடின் தன்னையே உண்மையல்லவென்று மறுப்பதாகிவிடும். இறைவனின் உண்மை நிலையின் பயனாகவே ஒவ்வொருவரும் முதலில் இயல்பிலே உண்மை யுரைக்கின்றனர். பின்பு பகுத்தறிவெனும் அரிய சக்தி நிறைந்த நிலையை யடையவே, எவ்வழி செல்வதென நன்கு உணராமல், முன்வினைப் பயனுக்கேற்ப பெரும்பாலோர் தவறான முடிவுக்குவந்து, உண்மையினின்றும் வழுவத் தொடங்குகின்றனர். அவ்வாறிருந்தால் கூடாதென்பதை யுணர்த்த உண்மை பேசு என்று முதலில் உத்தரவிட்டார்.

இரண்டாவதாக 'அறஞ்செய்' என்று ஆக்ஞாபித்தார். அறமென்றதற்கு முதல் நூலில் 'தர்மம்' என்ற சொல் உளது. இச்சொல் தாங்கி நிற்பது என்று பொருள்படும். அதாவது, அடைந்த நிலையினின்று வழுவாதபடி நிற்கச்செய்து, உயர்நிலையை யடைய உதவுவது; கடமையென்றும் பொருள் படுகிறது. அறவழி நடந்தால் உண்மை பேசாதிருத்தற்கும் அவகாசமேற்படாது; உண்மை பேசுவது உறுதியாகிவிடும். இங்கு, அறஞ்செய விரும்புவதுமட்டும் போதாது! செயலிலிருந்தாற்றான் பயனுண்டென்பதை வற்புறுத்தவே 'அறஞ்செய்' என்று ஆக்ஞை செய்தார். அறஞ்செய்தல் திடம் பெறுவது வேதமோதுவதால்தான் ஏற்படும். வேதமே, அறிவைப் பெருக்கி மனிதன் தனது முழுமுதற் குறிக்கோளாகிய ஆன்ம வுணர்வு நிலை பெறுவதற்கான வழிகள் பலவற்றை உணர்த்துகின்றது. ஆகவே, மூன்றாவதாக ஓதலினின்றும் வழுவாதே என்றார். இம்மூன்றுமே முன்னேற்றமடைய விரும்பும் ஒவ்வொரு மனிதனும் கைக்கொள்ளவேண்டிய முக்கியமான மும்மணிகளெனலாம். இளமையிற் கல்வி முதுமையில் அறிவு சுரக்கும். கல்வியின்றிய அன்பு மடமை சூழ்ந்து மடியும்; கல்வியின்றிய அறிவு தடுமாற்றத்தைத்தரும்; கல்வியின்றிய ஒழுக்கம் கலக்கத்தைக் கொடுக்கும்; இயல்பிலே அறிவு எல்லோருக்கு மிருப்பினும் அது மிளிர்வது கல்வியினாலேயே. ஆகலாற்றான் கல்வியறிவை மனக்கண் என்றனர் ஆன்றோர். மாசற்ற கல்வி மறைக்கல்வியே யாகலின் ஓதலெனும் கல்வியினின்று "வழுவாதே" என்றார். உண்மை பேசுதற்கும், அறஞ் செய்வதற்கும் இயல்பாகிய அறிவு ஓரளவு போதுமாயினும், இடம் பொருள் ஏவல்களுக்கேற்றவாறு பயன்படுத்தும் ஆற்றல் படைத்தல்ல. அது ஓதலெனும் கல்வியறிவால் மிளிரவேண்டும். அப்போதே அனைவருக்கும் அது பெரும் பயனளிக்குமென்பது கண்கூடு.

நான்காவது உபதேசம், ஆசானுக்கு உகந்த பொருள் வழங்கி, மகவு எனும் கயிற்றை அறவே அறுத்துவிடாதே என்பதாகும். இக்காலத்திற் போன்று ஆசான் அவ்வப்போது ஊதியம்பெற்று ஆசானுக்கும் சீடனுக்கும் தொடர்பின்றி இருப்பதுபோல் பண்டைக் கல்வி முறை இல்லை. ஆசானருகிலேயே எப்போதும் நிழல்போல இருந்து கல்விமுறைமட்டு மன்றி, ஒழுக்க முறையுங் கற்று உலகிற்கும் தனக்கும் பயன்படு மனிதனாக உருப்பட்டு, வாழ்க்கையில் பெரு நன்மை யடையத் தகுதியுற்றோனாவான். பண்டைக்காலத்திய இவ்வகைக் கானகக் கல்லூரிகளை ஒருவாறு பின்பற்றி யமைக்கப்பெற்றனவே நளந்தா, தக்ஷசீலம் முதலிய இடங்களில் இடைக் காலத்தில் விளங்கிய கல்வி நிலயங்கள். இப்போதும் அத்தைய நிலயங்களை நிறுவுவது பயனளிக்குமென்ற நோக்கங்கொண்டே கவி ரவீந்த்ரநாத் தாகூர் சாந்திநிகேதனமென்ற ஆச்ரமத்தை நிறுவினார். மகாத்மா காந்தியடிகளும் ஸேவாக்ராமத்தில் ஓர் ஆச்ரமத்தை அமைத்தார். ஈகைப் பொருள்களில் கல்வியும் ஒன்றென நம் நாட்டில் வழங்கிவந்தது. கற்றதன் நன்றி மறவாமை யறிகுறியாக, ஆசானுக்கு உகந்த பொருள் யாதென அறிந்து அதனை ஆசானுக்கு அடிபணிந்து வழங்கி அவாது பொன்மொழிகளையேற்று வாழ்வில் அவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவான். இந்த வழக்கத்தையே ஆசானுக்கு உகந்த பொருள் வழங்கி என்பது உணர்த்துகிறது. தான் தந்தைக்குத் தனயனாக உதித்ததன் காரணத்தாலேயே மறைவழிமுறை பயின்று மேம்படுவழி கண்டதுபோல் தானும் ஒரு தனயனைப் பெற்று அவனையும் மேம்படச்செய்து, வாழையடி வாழையாக மறைவழி முறை தொடர்ந்து நீடிக்க இல்லறத்தை மேற்கொள்ளவேண்டும். ஆனால் இல்லறத்தில் ஈடுபட்டு அதிலேயே உழன்றுவிடக்கூடாது என்பதையும் நினைவூட்டுவதே போன்று மகவெனும் கயிற்றை அறவே அறுத்துவிடாதே என்றார். அன்றி, மகவு [ப்ரஜா] என்றது புத்ரவம் சத்தையன்றி வித்யவம்ச மெனும் சீட வம்சத்தையும் குறிக்கும். இல்லறத்தை மேற்கொள்ளாமல் வாழ்நாள் முழுதும் நைஷ்டிக ப்ரம்மசாரியெனும் ஓர்வகைத்துறவு நிலையையும் ஒருசிலர் மேற்கொள்வதுண்டு. அப்போதும், அந்நிலைக்குரிய ஒழுக்கத்தைத்தான் பின்பற்றுவது மாத்திரமின்றி, சீட பரம்பரையிலே தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும் வகையில் மறைவழி முறையைப் போற்றிவர வேண்டுமென்றும் பொருள் கொள்ளத்தக்கது. உலக வாழ்வில், அதிலும், இல்லறத்தில் இன்னல்கள் பல; பொருந்தாச் சூழ்நிலைகள் வந்தடையலாம். அவற்றினின்று தவிர்த்துக் கொள்ள நேரற்ற வழியில் தன்னையறியாமலே நடந்துகொள்ள நேரிடும். அதனால் ஒழுக்கங்குன்றிவிடும்; பெரும்பாலோர் இத்தகைய நெருக்கடியில் அந்த ஒழுக்கத்தினின்று வழுவி, வாழ்க்கைக் குறிக்கோளை நோக்கி மேம்படாதவராகி விடுகின்றனர். அவ்வாறாகா திருக்க வேண்டுமென்பதைக் கருத்திலிருத்தவே, [அப்போதும்] உண்மையினின்றும் வழுவாதே; அறத்தினின்றும் வழுவாதே என்று மீண்டும் உபதேசித்தார். இல்லறம் நடாத்தி எல்லோரையும் நல்வழியில் இன்புறச் செய்ய, செல்வம் இன்றியமையாதது "பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை" என்றே கூறப்பெற்றுள்ளதால் செல்வத்தினின்றும் வழுவாதே என்று அதன் இன்றியாமை வற்புறுத்திக் கூறப்பெற்றது. ஓதுதல் ஓதுவித்தல் என்பனவே மறைவழியை நீடிக்கச் செய்யுமாகலின் மீண்டும் ஓதுதல் ஓதுவித்தலினின்றும் வழுவாதே என்று கூறப்பெற்றது.

[32-ம் பக்கம் பார்க்க]



# வி. சி. காளியப்பன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு



இவர் மதுரைஜில்லா, பெரியகுளம் தாலுகா. கம்பம் பள்ளத்தாக்கில் கோகிலாபுரம் என்னும் கிராமத்தில் 1-7-1913-ல் ஒரு பிரபலமான குடும்பத்தில் பிறந்தவர். பள்ளி வயது வந்ததும் கிறிஸ்தவப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். ஆரம்ப வகுப்புகளையும், (உயர்தரக் கல்வி தவிர) போதனாமுறை பயிற்சியையும் கிறிஸ்தவப் பாடசாலைகளிலே முடித்ததனால் இயற்கை உணர்ச்சியுடன், மேலும் சேவா உணர்ச்சி மிகவும் அதிகரித்தது.

குடும்ப காரணங்களை முன்னிட்டும், விவாகத்தை முன்னிட்டும், தஞ்சாவூர் ஜில்லா மாயவரத்திலும், தென்னாற்காடு ஜில்லா, திருக்கோயிலூர் தாலுகா, ஆதிச்சனூர் என்ற கிராமத்திலும் குடியேற நேர்ந்தது. இவருடைய இருபதாவது வயது நிரம்பியதும், ஆசிரியர் தொழில் தான் மேலானது எனக்கருதி, அத்தொழிலில் ஈடுபட இடந்தேடி, வடாற்காடுஜில்லா, திருவண்ணாமலை தாலுகா பாடசாலைகளின் இன்ஸ்பெக்டர் ஆபீசுக்குச் சென்றார். ஷை தாலுகாவில் கத்தாழம்பட்டு பஞ்சாயத்து போர்டு பாடசாலையில் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார். ஷை யூரில் பாடசாலைக் கட்டிடம், ரோடு, கிணறுகள், புத்தகாலயம், குளம் முதலிய பொது வேலைகளைச் செய்திருக்கிறார்.

1940ல் திருவண்ணாமலை தாலுகா பஞ்சாயத்து போர்டு யூனியனை ஏற்படுத்தி அங்கீகாரம்பெற்று, தலைவராக இருந்து 1950வரை நடத்தியும், ஜில்லா கில்டுடன் இணைத்தும், உதவி ஜில்லா காரியதரிசியாகவும் இருந்து நடத்தியிருக்கிறார். தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தில் அங்கத்தினராகவுமிருந்துகொண்டு ஆசிரியர்களுக்காகத் தொண்டாற்றிவருகிறார். அகில இந்தியா கல்வி மகாநாடுகளிலும் பிரதிநிதியாய்ச் சென்று குறைகளைத் தீர்மானங்கள் மூலம் தெரிவித்து வருகிறார். சந்தர்ப்பங்களில் கனம் மந்திரியவர்களையும் பேட்டி கண்டு குறைகளை எடுத்துரைக்கிறார்.

1947 முதல் ஆரம்ப ஆசிரியர்களின் தனிப்பட்ட குறைகளை எடுத்துரைக்க சம்மேளனங்கள் அமைக்கப்பட்டதால், ஜில்லா சம்மேளனத் தலைவராகவும், தமிழ்நாடு ஆசிரியர் சம்மேளன உபதலைவராகவுமிருந்து கொண்டு ஆரம்பாசிரியர்களுக்கென அல்லும் பகலும் உழைத்துவருகிறார்.

ஆசிரியர்களின் குறைகளை அடிக்கடி மாதாந்திரப் பத்திரிகைகளிலும், தினசரிப் பத்திரிகைகளிலும் எழுதிக் குறைகளைத் தெரிவித்து, ஆரம்பக் கல்வி முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டுவருகிறார். தற்சமயம் வடாற்காடு ஜில்லா, திருவண்ணாமலை தாலுகா, கீழ்ப் பென்னாத்தூர், உயர்தர ஆரம்பப் போர்டு பாடசாலையில் உதவியாசிரியராகவும் வேலை பார்த்துவருகிறார்.

# கூட்டுறவு

சி. பாலசுப்பிரமணியம், செயலாளர்.

ஒரு பொதுக் காரியத்தின் பொருட்டு பலர் சேர்ந்து பாடுபடுவதே கூட்டுறவு. குடும்ப வாழ்க்கையிலும் கூட்டுறவு உண்டு. இல்லாக்கால் வாழ்க்கை என்ற சோலை வளப்பமாய் வளராது. கிராம மக்களிடையேயும் கூட்டுறவு இருப்பதாலேயேதான் ஒருவர்க்கொருவர் உதவி புரிந்து வாழ முடிகிறது. இந்த ஒற்றுமை பல பொதுக் காரியங்களில் மிளிர்வதால் அவர்களுடைய பொதுப்பணிகள் முட்டின்றி முன்னேறுகின்றன. உலகம் முழுவதையும் கவனித்தால் ஒற்றுமையாயிருப்பதற்கான விஷயாதிகள் காணப்படாதிரா! கண்டும் முற்போக்குச் சக்தி பின்னுக்குப் போவானேன்? ஆமை வேகத்தில் கவனம் போலும்!

நமக்கும் பிராணிகளுக்கும் முக்கியமான வித்தியாசம் கூட்டுறவே யாகும். கூட்டுறவால் பலமுள்ள காட்டு மிருகங்களை கட்டுப்படுத்த மனிதருக்கு சக்தி உண்டு. பசி, தாகம், குளிர் இவற்றை வெல்லவும் கூடும். நாகரீக வளர்ச்சிக்கும் ஆதாரமானது. எனவே கூட்டுறவு முறையானது மனிதனுடைய துன்பங்களைத் துடைத்து, சுகத்தைத் தருவதோடு வாழ்க்கையில் ஒற்றுமையை உண்டாக்குகிறது. 'அது ஒருவனுடைய பொருளாதார நிலைமையையும், நடத்தையையும் திருத்துகிறது. எக்காரியத்திலும் நெறியுடன் வாழவும் அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், நற்போதனைகளை அனுசரித்து நடக்கவும் அவன் அபிவிருத்திக்காக கடமைகளை இடைவிடாது செய்வதுமான நற்குணப் பண்புகளை உருவாக்குகிறது. ஆகவே சுய உதவி, பரஸ்பர உபகாரம், உலக நீதி வழுவாமை முதலிய கோட்பாடுகளை அனுசரித்து வாழ்க்கை நிலைமையை அபிவிருத்தி செய்துகொள்வதோடு கூட்டுறவுச் சங்கம் இன்றியமையாததாய் உள்ளது. இங்ஙனம் அதன் அருமை பெருமைகளைப் புகழாதார் காண்டல் அரிது. பொருளாதார நிலையில் விருத்திக்கு ஏற்ற வழிகளும் வகுத்துளது. ஒரு சிலர் ஒவ்வொரு பள்ளியிலும் கூட்டுறவுச்சங்கம் நிறுவி அதனாலாம் பயனை மாணவர்கள் அடைய ஆசிரியர்கள் முயலவேண்டுமென அழகாக அறிவிக்கவும் படுகிறது. ஆனால் எந்தப் பள்ளியிலும் இஃது காணாதிருத்தலின் குறையை எளிதிலுணர்ந்து கொள்ளலாமன்றோ!

இந்த திருஷ்டி ஆசிரியர்பால் விழுமாயின் பொருளாதார குரூவளியில் தவிக்கின்றவர்களுக்கு கைலாகு கொடுப்பதுபோலாகாதோ? இவ்வுண்மையை உய்த்துணர்ந்து முற்போக்கான எண்ணம் மேற்கொள்ளுதலே சான்ற பெருமக்களின் கடனாம். இஃது என்று அமையுமோ? விரைவின்மைய ஆசிரியர்கள் துயிலெழுக கூர்ந்த மதியுடையோர் விநோதார்த்தமாகக் கொண்டு எம்மைக் கடைக்கணிப்பாராக.

தனிமையாக ஒவ்வொருவரும் பண்டங்கள் வாங்கினால் அதிக விலை கொடுக்கும்படி நேரிடும். கூட்டாகச் சேர்ந்து, தேவையான பொருட்களை சங்கத்தின் மூலமாய் வாங்கினால் லாபம் கிடைக்கும் என்றெல்லாம் பேசப்படுவதும், சொல்வதும்



வெறும் வெற்று வார்த்தைகளாகாமல் விசேட நன்மைகள் விளைய செயல் புரிவதே இழுக்கில்லாதிருக்கச் செய்யும். இதுவே பெருங்குடி மக்களுக்கு அழகு.

ஆசிரியர்கள் ஊர்தோறும் சிதறிக் கிடக்கின்றார்கள், இன்று பெரும்பாலோருடைய் நிலை பரிதபிக்கக் கூடியவாறு உளது. விலைவாசிகள் உயர்வாலும், பண்டங்களின் தட்டுப்பாட்டினாலும்சொல்லொணாத்துயரத்தில் வாழ்க்கையை இழுத்துப் பறித்துக்கொண்டு மேற்கொண்ட பணியைக் கடமைக்கும் கடனுக்குமே செய்கின்றனர். இவர்களுடைய காலக்கொடுமையின் தேவைகளுக்கு உதவக்கூடியவர்கள் எங்கும் ஒரு சிலரே இருக்கலாம். ஏனையோர் உதவாக்கூற்றை உய்த்துணர்க. தனித்திராது கூட்டாக இயங்கினால் மிக்க மேன்மையுடையவர்களாக மதிக்கப்பெறுவோம் அல்லவா? மருட்கை யுணர்ச்சி யுடையாரும். அதை விட்டொழிப்பரன்றோ!

ஆசிரியர் சுய மதிப்புடன் வாழ அவர்கள் சமூகத்தினிடையே ஐக்கியக் கழகங்களைப்போன்ற அவசரமும் அத்தியாவசியமானதுமான கூட்டுறவுச் சங்கமொன்று உடனடியாக ஏற்படுத்திக்கொடுக்க மானேஜ்மெண்டார் முன்வரவேண்டுமென்று தானே பலரும் எண்ணுவர். அது இயற்கையும்கூட. இது தீது என்று கடிதல் ஏற்புடைத்தாமோ?

சிதறுண்டு கிடக்கும் ஆசிரியர்களைக் கலக்கவொட்டாது தடுக்கக் கூறும் குறுகிய யோசனையை பெருநோக்குடன் விடுத்து, ஒன்றுபடுத்தவும், அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துக் கொடுப்பதிலும் மானேஜ்மெண்டார் கவனம் செலுத்துவதே நியாயம். இதைத்தான் ஸ்ரீ திருப்பெரும்பூதூர் வட்ட ஒற்றுமைக் கழகம் பல தடவைகளிலும் செங்கற்பட்டு மாவட்ட ஆறாவது மாட்டிலும், மாவட்ட தூதுகோஷ்டிலும் கழகத் தலைவர்களை வேண்டிக் கொண்டிருக்கின்றது. டிப்டி ரிஜிஸ்தார் அவர்களையும் வற்புறுத்தி வருகின்றது. அவர்கள் கோருகிறபடி செங்கற்பட்டு மாவட்டக்கழகத் தலைவாவர்கள் இசைந்து, அதற்கான ஏற்பாட்டையும், வசதியையும் செய்துதர வேண்டுகின்றார்கள். கழகத் தலைவரவர்கள் இந்த இன்றியமையாத வேண்டுகோளுக்கு உடன்பாடான இசைவு தருவார் என்று நம்புகின்றோம். ஆசிரியர்களும் காலம் போக்கற்க.

கூட்டுறவால் பொதுநல உணர்ச்சி வளரும் பின்னர் அவர்கள் வதியும் கிராமங்களிலுள்ள மக்களிடையேயும் அவ்வுணர்ச்சி பரவக்கூடும். இந்த உணர்ச்சி குடிமக்களாட்சி வெற்றிகரமாக வளர அரண் செய்யும். உண்மை ஆராய்ந்து நாட்டிற்கு நலம் செய்யவல்ல அத்தனையும் அல்லது யாதானுமொன்றையேனும் செய்வதே நாட்டுப் பற்றுடையோர் இயல்பு.

கூட்டுறவு இயக்கம் என்றதுமே கடன் கொடுத்து உதவும் சங்கமாக மட்டும் நினைத்துக்கொள்ளலாகாது. கூட்டுறவால் எவ்வளவோ நற்காரியங்கள் வளர்ச்சி யடையக்கூடும். ஒரு சிலர் வீணான அச்சங்கொள்வர். அவர்கள் கூறும் வாதம் அர்த்தமற்றது. பின்னால் தொல்லையை உண்டு பண்ணிவிடுமோ என்ற நிலையைக் குறித்து ஆரம்பத்திலேயே வேதனைப்படுவது பொருத்தமன்று கூட்டுறவு சங்கத்தில் சேரும் அத்தனைபேரும் குறைபாடுடையவர்களாகி விடுவார்கள் என்று நினைப்பது விவேகமாகாது.

# ஆசிரியர் உள்ளம்

“ஜிஜி”

வாருங்கள் வாருங்கள் நாசிக்கிலிருந்து நீங்களும் இப்போதுதான் வருகிறீர்களா! பத்திரிகையுடன் வருகிறீர்களே! விசேஷம் என்ன?

விசேஷமா? ராஷ்டிரபதி ஸ்ரீ பாபு புருஷோத்தமதாஸ் தாண்டன், பிரதமர் ஸ்ரீ நேரு இவர்களின் பிரசங்கத்தைக் கேட்டாலே போதுமே!

ஆமாம்! வகுப்புவாதத்தை வீழ்த்த நேருஜீ செய்த பிரசங்கம்! அடேயப்பா! என்ன உணர்ச்சி! என்ன ஆக்ரோஷம்? “நான்பிரதமராயிருக்க நீங்கள் விரும்பினால் வகுப்பு வாதத்தில் வழவழாக் கொள்கை கூடாது” என்ற சிம்ம கர்ஜனை ஒன்றே போதுமே! என்ன தைர்யம்! வீரபுருஷன் என்றால் அவர்தானய்யா! சபையில் நிசப்தம்! படே படே கைகள்கூட் மூச்சு விடவில்லை!

வகுப்பு வாதத்தில் தோய்ந்து ஊறிவருகிற மந்திரிகளுக்கு எப்படி இருந்திருக்கும்?

எப்படி இருந்திருக்கும்! தெரியாதா? கூட்டத்தோடு கூட்டமாக கைகட்டி உட்கார்ந்து இருந்து எல்லோரும் கைகொட்டும்போது இவர்களும் கைகொட்டிவிட்டு யதாஸ்தானத்துக்குப் போனவுடன் பழைய கருப்பனே கருப்பன்! நேருஜியை எதிர்க்க படே படே கைகளாலேயே முடியாது என்றால் சில்லரை ஆட்களால் முடியுமா? ராஷ்டிரபதி ஸ்ரீ தாண்டனும், கட்டுப்பாடு, ஒழுக்கம் இவைகளைப்பற்றி அடுக்கித் தள்ளிவிட்டார்! மக்கள் அனைவரும் அன்புடன் வித்தியாசமின்றி வாழவேண்டுமென்று கூறினார்.

என்னமோ வித்தியாசம் வேண்டாமென்று சொல்லிக்கொண்டே புதிய புதிய வித்தியாசங்கள் புகுத்தப்பட்டு வருகின்றனவே, இதைப் பார்த்தீர்களா பத்திரிகையில்!

பிரசவ லீவு சம்பந்தமாகத்தானே நீங்கள் சொல்லுகிறீர்கள்?

ஆமாம், பாருங்கள். லேபர் பாடசாலை ஆசிரியைகளுக்கு பிரசவ லீவு இரண்டுமாதம், அரசாங்க விகிதம் போல. எய்டெட் பள்ளி ஆசிரியைகளுக்கு ஒருமாத பிரசவ லீவு! பிரசவத்தில்கூட வித்தியாசம்! ஆசிரியை என்றால் ஒரேவித சலுகை இல்லையா? அங்கு ஒன்று, இங்கு ஒன்று, இந்த வித்தியாசத்தை நாமா சிருஷ்டிக்கிறோம்! இந்த சின்ன விஷயத்தில்கூட வித்தியாசமிருக்கிறதே!

---

நல்லதை நினைத்து நன்றாக இருக்க வழி கோலுவதே ஆட்சியாளரின் பொறுப்பு. இத்தகைய ஏற்பாட்டை உடனடியாகச் செய்துகொடுத்து, உருவான பலம் கிடைக்கும்படிச் செய்ய ஒவ்வொருவரும் கழகத் தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள், ரிஜிஸ்டிரார் முதலியவர்களை அணுகி நமது நோக்கம் வலியுறச் செய்வார்களாக. அதிகாரிகளும், மானேஜ்மெண்டாரும், மற்றையோரும் ஆசிரியர்களை சதுரங்கக் காய்களாக பாவியாது அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துவைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.



அட ராமசந்திரா! இந்த வித்தியாசங்கள் ஆரம்ப ஆசிரியர் சமூகத்தில் எத்தனை நாட்களுக்கு இருக்கப் போகின்றனவோ!

பிரசவ லீவிலிருக்கிற வித்தியாசத்தைப் பார்த்துவிட்டு என் பள்ளிக்கூடத்து ஆயாகூட சிரிக்கிறாளய்யா?

யார் சிரித்தாலென்ன? அழுதால் என்ன? மக்களுள் உயர்வு தாழ்வு இல்லை என்ற உபதேசம்! அனைவரும் ஒன்றென்ற வாக்கியம்! ஆசிரியர்கள் அனைவரும் வருங்கால சிற்பிகளென்று பேசி அவ்வாசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம், லீவு, சலுகை இவைகள், கார்ப்பரேஷனில் ஒருவிதம், எய்டெட் பள்ளியில் ஒருவிதம். இப்படி வித்தியாசப்பட்டுக் கொண்டிருந்தால் ஆயாளும் சிரிப்பாள் என் அருமை கன்றுக்குட்டியும் சிரிக்கும்! ஆரம்ப ஆசிரியர்களுக்கு சௌகரியம் செய்யாத வரையில் கல்வி அபிவிருத்தி என்பது ஏட்டளவில்தான்!

ஒரு விஷயம் பாருங்கள்! வெள்ளைக்காரன் போன சோடையிலேயேதான் நம் அரசாங்கத்தின் சக்கரங்களும் போகின்றன! புதிய முறையோ, திட்டமோ ஆரம்பக் கல்வி யபிவிருத்திற்கு ஒன்றும் காணோம். ஆதாரக் கல்வித்திட்டம் சில இடங்களில். அதுவும் ஆமை வேகத்தில்!

எப்படி ஐயா வருக்க முடியும்? ஆரம்பக் கல்வி புகட்டும் வேலையை அரசாங்கம் தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை. கார்ப்பரேஷன், ஜில்லா போர்டு, பஞ்சாயத்து போர்டு, முனிசிபாலிடி, லேபர் இலாகா, பிரைவேட் ஏஜன்ஸி இவைகளிடம் ஆரம்பக் கல்வி பரப்பும் வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பள்ளிகளைப் பரிசை செய்யும் வேலையைமாத்திரம்தான் வைத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கம். அனுபவ வாயிலாக பள்ளிகளை நடத்தினால்தானே கஷ்ட சுகங்கள் தெரியும்? அதிகாரம் செய்யத் தெரிந்தால் போதுமா தம்பி!

குறுக்கே பேசுகிறேனென்று கோபிக்காதீர்கள்! சில ஜில்லாக்களில் ஹைஸ்கூல்கள் புதிதாக வைக்கப்பட்டுள்ளன. போதுமான ஆசிரியர்களில்லை, சில மேல்வகுப்புகளில் மாணவர்கள் சொற்பம். ஆசிரியர்களும் மாணவர்களுமிருந்தால் வகுப்புவாதம் தலைவிரித்தாடுகிறது!

ஹைஸ்கூல்களைப் பற்றி நமக்கென்ன? அதன் ஆசிரியர்களுக்கு சட்ட சபையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் நல்லது. செகண்டரி கல்விக்கும் நன்மையுண்டாகும் கண்டிப்பாக. நம்மவர்களின் நிலை என்ன? ஆசிரியர் தொகுதியில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு உரிமையில்லை

சரிதான்! உங்களுக்கு சட்ட சபை மோஹம் பிடித்துவிட்டதா? அங்கு என்னவேலை நமக்கு? அங்குபோனால் ஆரம்பக்கல்வி அபிவிருத்தியடைந்து, நாட்டில் கல்வி யறியாமை வேருடன் அற்றுப் போய்விடுமா? கேள்விகள் கேட்கலாம்! கொஞ்சம் தமாஷாகவே இருக்கும்! விஷயங்களைத் தெரிந்துகொண்டும், நன்கு புரிந்துகொண்டும் கேள்வி கேட்டால் நல்லது

சட்டசபையில் கேள்விகளென்றவுடன் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. எய்டெட் பள்ளி ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்குத் தலா இரண்டு ரூபாய் வீதம் கொடுத்தால்

இவ்வளவு செலவாகிறது, அவ்விதம் கொடுக்கப்போவதாக பதில் சொல்லப்பட்டது சமீபத்தில். ''எப்பொழுது கொடுக்கப்படுமென்று'' எவராவது கேட்டார்களா? ஆசிரியர்கள் ''எப்ப வருவாரோ'' என்ற பாட்டைப் பாடிக்கொண்டிருக்க வேண்டியதுதான்! எல்லாம் அரைகுறையாக இருக்கிறது! ஆரம்ப ஆசிரியர்களின் உழைப்புக்குத் தகுந்த ஊதியமில்லை, சேவைக்குத் தகுந்த சௌகர்யமில்லை. இந்நிலையில் ஆரம்பக் கல்விக் கூடங்கள் கல்வியறியாமையைப்போக்க என்ன செய்யும்?

மன்னார்குடியில் தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர் மகாநாடு கூடப்போகிறதே, அதில் ஏதாவது சுமுகமான வழி ஏற்படாதா?

இப்பிரச்னைகளை மன்னார்குடி ஆலோசிக்கவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஆசிரியர்களும் வரவேண்டும். மகாநாட்டில் பூரண பிரதிநிதித்வமில்லாது போனால் அப்புறம் என்ன மகாநாடு! ஆரம்ப ஆசிரியர்களிடை எத்தனைப் பிரிவுகள்! ஒவ்வொரு பிரிவினரும் ஸ்தாபன ரீதியாக சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கின்றனர். எல்லாப் பிரிவினரும் ஒரே மனப்பான்மையுடன், ஒரு குலம், ஒரு இனமென்று எண்ணி கூடிச்செய்தால் தானே ஆசிரியர் சமுகத்திற்கே நன்மையுண்டு. ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு கூட்டம்போட்டு தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பினால் அரசாங்கம் எதைக் கவனிக்கும். எல்லா ஆரம்ப ஆசிரியர்களும் ஒருமித்து வாவில்லையே என்று எண்ணிக்கொண்டிருக்காதா! தூது போவதில் என்ன நன்மை உண்டாகும்? ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம், லீவு, சலுகை இவை எல்லாம் ஒரே விதமாக இருக்கக்கூடாதா? இதைத்தான் வற்புறுத்தவேண்டும் மன்னார்குடியில். சில இடங்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகையும்...

என்ன ஐயா வீட்டு வாடகை கொடுக்கப்பட்டு வருகிறது? கார்ப்பரேஷன் கொடுக்கும் வாடகையைக் கொண்டு ஒரு ஆசிரியக் குடும்பம் குடியிருக்க முடியுமா? சொல்லுங்கள். பெரிய பெரிய ஆபீசர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டி கொடுக்கப்படுகின்றன. சொற்ப சம்பளம் வாங்கும் ஆசிரியர் நிலை சொல்ல முடியாது. பள்ளிக்கூடம் கட்டும்போதே ஆசிரியர்களின் குடியிருப்புக்கும் வசதி செய்யவேண்டும். ஆபீசர்கள் நிறைய சம்பளம் வாங்குகிறவர்கள், கார் வைத்திருக்கிறார்கள். எங்கிருந்து வேண்டுமானாலும் வந்துவிடலாம். சொற்ப சம்பளம் வாங்கும் ஆரம்ப ஆசிரியர்கள் பள்ளியில் பக்கத்திலேயே இருந்தால் எவ்வளவு நன்மை? நாலைந்து மைல் சைக்கிலில் சவாரி செய்தோ, நடந்து வந்தோ பள்ளிக்கு வந்தால் உற்சாகத்துடன் உழைக்கமுடியுமா! பள்ளிக்கூடத்தின் நன்மைக்கும் நாட்டின் நன்மைக்கும்தான் சொல்லுகிறேன், பாடசாலை பக்கத்தில் குடியிருப்பு வசதி ஆசிரியர்களுக்கு இருந்தால் மிகமிக நல்லது. தெரிகிறதா?

ஒரு விஷயம் கேள்விப்பட்டீர்களா? குடியிருப்பு என்றவுடன் ஞாபகம் வந்துவிட்டது? அம்பத்தூரிலுள்ள இந்துசேவா சங்கப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களுக்கு அதன் காஸ்பாண்டென்டு, வீடுகள் கட்டிக்கொடுத்திருக்கிறார். நகரங்களில்தான் இடமில்லை. தொலையட்



# ஆசிரியர்கள் கவனிக்க

**பு**திய அரசியலமைப்பின் பிரகாரம் இனி அமைக்கப்படும் சென்னை லெஜிஸ்லேடிவ்கௌன்சில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்த் தொகுதிகளில் எந்த எந்த ஆசிரியர்கள் ஓட்டர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம் என்பது பற்றி 1950 வருஷம் ஜூன் மீ 6 தேதி வெளியிடப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் செகண்டரி பள்ளிக்கூடங்களில் ப்ரைமரி டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு ஓட்டராகப் பதிவுசெய்து கொள்ள உரிமை கிடையாது என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்விஷயம்பற்றி சர்க்கார் மேலும் பரிசீலனை செய்ததின் பேரில் மேற்படி ஆசிரியர்கள் மேற்படி தொகுதிகளில் ஓட்டர்களாகப் பதிவு செய்துகொள்ளப் படுவதினின்றும் தடை செய்யக் கூடாதென்று தெரிய வந்தது. 1950 வருஷம் ஏப்ரல் 1 தேதிக்கு முந்திய ஆறு வருஷங்களில் மொத்தம் மூன்று வருஷங்கள், செகண்டரிஸ்கூல் அந்தஸ்திற்குக் குறையாத எந்தக் கல்வி ஸ்தாபனத்திலாவது ஒருவர் ஆசிரியராக வேலை செய்திருந்தால்—அவர் ப்ரைமரி டிபார்ட்மெண்டிலோ, அல்லது எந்த டிபார்ட் மெண்டிலோ ஆனாலும் வேலை பார்த்திருந்தாலும் சரி—ஆசிரியர்கள் தொகுதியில் வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள அவருக்கு உரிமையுண்டு. அப்பேர்ப்பட்ட ஒவ்வொருவரும் வாக்காளர் ஜாபிதாவில் தன் பெயரையும் சேர்த்துக் கொள்ளும்படி மனுச் செய்து கொள்ளலாம்.

---

டும்! கிராமங்களிலாவது ஆசிரியர்களுக்கு இம்முறையைப் பின்பற்றினால் எவ்வளவு நன்மையுண்டு. ஆசிரியர்களின் சங்கடமும் சஞ்சலமும் எவ்வளவுக் கெவ்வளவு நீங்குகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு கல்வி அபிவிருத்தி அடையுமல்லவா?

சரி, நாழிகையாகிறது. நீண்ட நேரம் சம்பாஷித்து விட்டோம். உங்களைக் கண்டால் பேசாமலிருக்க முடியவில்லை. என் கிருகத்தில் சாஸ்வதி பூஜை, வருகிறேன் வணக்கம்! ஹே சாராதாம்பிகே! நின் கடாக்ஷமின்றி தேசம் தவிக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டுகள் நம் நாடு கல்வி அறியாமையில் மூழ்கிக்கிடக்கவேண்டும்? நம் குடியாசில் வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை வந்துவிட்டது. மகாத்மா மகத்தான தியாகஞ்செய்து சுதந்தரம் வாங்கிக்கொடுத்து மறைந்தார்! தாயே! கோபாலகிருஷ்ணகோகலே, இலவசக் கட்டாயக் கல்வித்திட்டம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். அத்திட்டம் பல இடங்களில் இல்லை! ஆசிரியர்களைக் கொஞ்சம் கடாக்ஷி! உழைப்புக்குத் தகுந்த ஊதியம், சேவைக்குத் தகுந்த சௌகரியமில்லாதவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள். அவ்வாசிரியர்கள் மன்னார்குடியில் கூடுகின்றார்கள். நின் விஜயமும் அங்கு வேண்டற்பாலது! மகாநாடு வெற்றிகாமாக நடக்கத் துணைபுரிவதுடன், ஆசிரியர்களுக்குப்பலன்தாத் தக்கவண்ணம் செய்ய நின் சகோதரி ஸ்ரீ லக்ஷ்மிதேவியின் கடைக்கண் பார்வையை அவ்வாசிரியர்கள்மேல் விழ செல்வாக்கை உபயோகியுங்கள்! சோதனை போதும்! துயாம் போதும்! தாயே! வணக்கம்.

# சென்னை சர்க்கார் அறிக்கை

சென்னை சர்க்கார் ஜூன் 6ம் தேதி அறிக்கையொன்று கூறுவதாவது:—

“இந்திய அரசியல் சட்டப்படி ஏற்படுத்தப்படும் புதிய சென்னை சட்டசபை கௌன்சிலுக்கு 72 ஸ்தானங்கள் இருக்கும். இவற்றில் 6 ஸ்தானங்கள் பட்டதாரிகள் தொகுதிகளிலிருந்து நிரப்பப்படும். இந்தத் தொகுதிகளுக்கு வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரிக்கும்படி தாலுகா, உபதாலுகா அதிகாரிகளுக்குசர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.”

ஆசிரியர் தொகுதிகளில் வோட்டர் ஆவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள யோக்கியதாம்சங்கள் வருமாறு:—

“1-4-50 தேதிக்கு முன் குறைந்தது 3 வருடங்களாவது செகண்டரி ஸ்கூல் அந்தஸ்துக்குக் கீழ் இல்லாத பள்ளிகளில் 1-வது பாரத்திற்குக் கீழ்ப்படாமலிருக்கும் வகுப்புகளின் ஆசிரியாக இருந்திருக்கவேண்டும். செகண்டரி பள்ளிகளில் பிரைமரி வகுப்பு ஆசிரியாக இருந்திருக்க வேண்டும். செகண்டரி பள்ளிகளில் பிரைமரி வகுப்பு ஆசிரியர்கள் வோட்டர்களாக உரிமை கிடையாது” பின்னர் செகண்டரி பள்ளிக்கூடங்களில் பிரைமரி டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கும் ஓட்டுரிமை உண்டென்று அறிக்கை விட்டனர். சென்னை சர்க்கார் ஆசிரியர்களுக்கு ஆறு ஸ்தானங்கள் அளிக்க முன் வந்தாலும் அதற்கென விதிக்கப்பட்டிருக்கும் விதிகள் விசித்திரமாகவும் விசனிக்கத்தக்கவும் உள்ளன என்பதை மறுக்க முடியாது.

வகுப்பு வாதத்தை அடியோடு ஆணிவேரோடு அலசி யெடுத்து தகர்த்து எறியவேண்டும் என்று கூக்குரலிடுகின்றது சர்க்கார். ஆனால் நடைமுறையில் தொழில் முறையிலும் வகுப்பு வாதத்தைக் காட்டுகின்றது. ஆசிரியர்கள் அனைவரையும் ஒன்று கூட்டி ஆசிரியப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதில் தவறு என்ன? ஆசிரியருலகில் ஆரம்ப ஆசிரியர்களென்றும், உயர்தர ஆசிரியர்களென்றும் பிளவினை ஏன் உண்டாக்க வேண்டும்? சட்டசபை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அங்கத்தினர்களாக நிற்கக் கூடாது என்று தடை செய்வதை ரத்து செய்ய ஆரம்ப ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்கையில், ஆசிரியத் தொகுதிக்கு வோட்டராயிருப்பதற்கே அருகதையற்றவர்கள் என்று அனாவசியமான அர்த்தமற்ற தடை விதித்தால் ஆரம்ப ஆசிரியர்கள் ஆவி ஏன் அல்லலுற்றுத் துடிதுடிக்காது? ஆரம்ப ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களும் இடும்பைகளுந்தான் எட்டிலடங்குமா? விலை வாசிகளை உற்றுப் பார்த்து ஊதியம் உறுதி செய்யும் காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஏற்படுத்திய சம்பளம் 30. இத்தொகையை உடனடியாக கொடுத்த பாடில்லை. வேறு எந்த இலாகாவிலும் இல்லாத கீழ்த்தரமான ஊதிய விகிதம் ஆசிரியச் சமூகத்தில் ஏற்படுத்தியிருப்பது அநீதி! அதர்மம்! அட்டூழியம்! சம்பளம்தான் கை நிறைய இல்லாவிட்டாலும் சமூகத்திலாவது அரசியலிலாவது அந்தஸ்து உண்டா. அதுதான் துளி கூட இல்லை.



# வேதனையால் வெடிக்குது!

(சுராகசி)

ஆசிரியத் தோழர்களே! உழைத்து உழைத்து உள்ளமும் உடலும் உருக்குலைந்து போய்க் கிடக்கும் உத்தமர்களே! மக்களின் அறிவு வளர்ச்சிக்காக மகத்தான தியாகம் செய்யும் மகோன்னதத் தலைவர்களே!

வீடெல்லாம் கல்வி பெருகப் பல பாடெல்லாம் பட்டு மிகக் கேடெல்லாம் உற்று நாடெல்லாம் நன்மை பெறச் செய்கிறோம்நாம். ஆனால் வாழ வழியற்று, வகையற்று வதங்கிக் கிடக்கிறோம். ஊரெல்லாம் உருப்பட உழைத்து உருவாக்குவது நாம்! ஆனால் இன்ப வாழ்வு நம்மை எட்டிப் பார்க்க மாட்டேனென்கிறது.

பேனா பிடிக்கும் பண்பாளர்களையும், அறிவாராய்ச்சி செய்யும் அறிஞர்களையும், வையத்து மாந்தர் வாழ்வுக்காக வாழும் வைத்தியர்களையும், சட்டம் பேசும் நிபுணர்களையும் நாட்டுக்களிப்பது நாமல்லவா?

பண்டைய நாட்களைப் படம் பிடித்துக்காட்டும் சரித்திரத்தையும், வியப்பான உண்மைகளை விளக்கமுடன் காட்டும் விஞ்ஞானத்தையும், அறிவை வளர்க்கும் பல அயல் மொழிகளையும், இன்பம் பயக்கும் இலக்கியத்தின் சிறப்பையும் நாட்டிற்குப் போதிப்பது நாமல்லவா?

பின், நம் நிலை என்னவாயிருத்தல் வேண்டும்? என்னவாயி

---

ஒருவன் எஸ். எஸ். எல். ஸி படித்து இரண்டு வருடங்கள் போதனா முறைப் பள்ளியிலும் பயின்று, செகண்டரி கிரேடு ஆசிரியனாக வெளிவந்து ஒரு செகண்டரி பள்ளியில் புகுந்தால் மாதம் ரூ. 45-ம், அதே ஆசிரியர் எலிமெண்டரி பள்ளியில் நுழைந்தால் ரூ. 35-ம், சம்பளம். வேற்றுமை ஏற்றுக்கு? கட்டிடங்கள் செய்த நல்வினை அல்லது தீவினைப் பயனா? ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர் உயர்நிலைப் பள்ளியில் முதலாவது வகுப்புக்குக் கற்றுக்கொடுத்தாலும் சட்டசபை ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஓட்டராக நிற்க யோக்கியதை உண்டு, அதே ஆசிரியர் ஒரு ஹையர் எலிமெண்டரி ஸ்கூலில் தலைமையாசிரியாய் இருந்தாலும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிற்கும் யோக்கியதை இல்லை ஏன்? ஆரம்ப ஆசிரியர்களுக்கு வோட்டுரிமை பறிக்கப்படுகிறது ஏன்? ஆரம்ப ஆசிரியர்கள் ஆசிரியர் குலத்தினின்றும் வேறுபட்டவரா? இத்தகைய ஊழலும் அநீதியும் உள்ள இத்தொழிலை சுயமதிப்புள்ள மனிதன் எங்ஙனம் அண்ட முடியும்? இந்நிலை நீடிக்கப்படுமாயின் ஆரம்பக் கல்வி பாதிக்கப்படும் என்பது தேற்றம். ஒரே கிரேடு ஆசிரியர்கள் எங்கிருப்பினும் ஒரே வித ஊதியமும், ஆசிரியருக்கும் அரசியல் அந்தஸ்தும் அளிக்கப்படாதவரை கல்விச் சீர்திருத்தங்கள் எவ்வித பயனையும் கொடுக்கா.

# கணக்கு

M. S. சீனுவாசன்.

## எண்களும் என் சேர்க்கைகளும்

1-10 வரை முன் சொல்லிய என் தொகுப்பு அட்டைகள் 5 ஆவது சேர்த்து வைத்துக் கொள்.

(அட்டைகள் 1"×1" இருத்தல் வேண்டும்.)

அதனுடன் 2"×1", 3"×1", 4"×1" ஆக ஒவ்வொரு அளவிலும் 45 துண்டு அட்டைகள் தேவை.

அவைகளை அங்குல சதுரங்களாகப் பிரி.

2"×1" அட்டைகளில் கீழ்க் காட்டியபடி எண்கள் எழுது.

அவைகளில் வரும் O சிவப்பு வர்ணத்தால் எழுதுதல் வேண்டும்.

2|0 3|0 4|0 5|0

6|0 7|0 8|0 9|0

இது 10 கள் சேர்க்கைத் தொகுப்பு அட்டையாகும். இதைப் போல் 5 தொகுப்புகளாவது தேவை.

இதுபோலவே 3"×1" அட்டைகளில் 100, 200, 300, 400, 500, 600, 700, 800, 900 போன்ற தொகுப்புகள் 5 தேவை.

(நூறுகள் சேர்க்கைத்தொகுப்பு)

மேல் குறித்த மாதிரியே 4"×1" அட்டைகளில் 1000, 2000, 3000, 4000 5000, 6000, 7000, 8000, 9000, ஆயிரம் சேர்க்கை அட்டைத் தொகுப்புகள் தயாரித்துக் கொள்.

### எண் தொகுப்பு அட்டைகள் உபயோகிக்கும் முறை.

குழந்தைகள், 69 இதை 6பத்து9 என்றே படித்தல் நலம். அறுபத்தொன்பது என்று சொல்வதால் 6 பத்து 9ம் அறுபத்தொன்பது என்பதும் வெவ்வேறு என்று கொள்ளுகிறார்கள். இவ்வாறே எண் சேர்க்கையிலுள்ள 1000கள் 100கள் 10கள் ஒன்றுகள் எல்லாவற்றையும் பிரித்துச் சொல்லிப் பழகல் ஆரம்ப காலத்தில் மிகவும் நலம் பயக்கும்.

10, 100, 1000, 1—10 வரை ஆன எண் அட்டைத் தொகுப்புகளை எடுத்து பிள்ளைகள் முன் வைத்து 10த்துத் தொகுப்பிலிருந்து 70 எடுக்கட்டும். அது என்ன என்று பிள்ளைகளைக் கேட்டு வரவழைக்க வேண்டும்.

பிறகு 1—10 தொகுப்பிலிருந்து 5 எடுத்து 70ல் O மறைத்து வைக்கட்டும்.

7|0 5 7|5 என்ன என்று படிக்கச் சொல்லவும்.

இது 7 பத்து 5 என்று சொல்லட்டும்

அதை மறுபடி பிரித்து 7 பத்து, 5 என்று தனித் தனியேயும் சேர்த்தும் சொல்லச் செய்.

இது போலவே 100க்குள் எண்கள் சேர்க்கைகள் பல சேர்த்தலில் பிள்ளைகள் பயிற்சி பெறவேண்டும்.

உபாத்தியாயர்களும் பலகையில் 100க்குள் எண்களை எழுதி அவைகளைத் தனித் தனியே என் அட்டைகளைக் கொண்டும், கட்டைகளைக் கொண்டும் வைக்கச் சொல்லவும் அதுபோலவே அட்டைகளாலும் கட்டைகளாலும் வைக்கப்பட்ட எண்களை எழுதலில் பழக்கம் தரவேண்டும். இப்படிச் செய்வதால் 100 வரை எண் மானமும் எண் குறிப்பும் நன்கு பிள்ளைகள் அறிந்திருப்பர்.

குறிப்பு:—என் அட்டைகளைப் போலவே 10—10 ஆக கோர்க்கப்பட்ட மணிக்கோப்புகளையும் தனி மணிகளையும் உபயோகிக்கலாம்.

---

ருக்கிறது? வேதனையால் நம் முள்ளம் வெடிக்குது! வெட்கமாயிருக்கிறது, வெளியாரிடம் உண்மையை வெளியிட!

நம் வீடு நலிவற்று இருப்பதில்லை; அகத்திலுள்ளோர் ஆனந்தமாக இருப்பதில்லை; மாதத்தில் பல நாட்கள் மனமாரப் பட்டினியாயிருக்கிறோம்; கடன் சுமை நம் கழுத்தை நெருக்குகிறது; குழந்தைகளின் கூக்குரல் நம்குரல் வளையைப் பிடிக்கிறது; இன்ப வாழ்வும் உல்லாசப் பொழுதுபோக்கும் நம்மை எட்டிப்பார்ப்பதில்லை. சிரிப்பு நம்மைச் சீண்டுவதில்லை; ஆனந்தம் நம்மை அண்டுவதில்லை.

நமக்கு என்றாவது ஒரு நாள் நல்லகாலம் நண்ணுமா? பேசக் கூட முடியவில்லை, வேதனையால் உள்ளம் வெடிக்குது!



# எட்டாவது வகுப்பும் ஆங்கிலப் புத்தகமும்

1951ம் வருடம் எட்டவாது வகுப்பு அரசாங்கப் பரீட்சைக்கு வைக்கப்பட்டிருக்கும் ஆங்கில பாட புத்தகத்தை நினைத்தால் அரசாங்கத்தாரின் அர்த்தமற்ற போக்கும், 'தனக்கும் தெரியாது பிறர் கூறினும் கேட்கக் கூடாது' என்ற நோக்கத்தை முழுக்க முழுக்க அனுஷ்டிக்கும் பாவனையும் நமக்கு நன்கு தெரியவரும். நெடுநாட்களாக ஆரம்பப் பள்ளிகளின் நிலை அல்லலுற்றுத் தவிக்கின்றதாகவே இருந்து வருகிறது. அரசாங்கத்தார் முதன் முதலாக 1942ம் வருடம் எட்டாம் வகுப்பு அரசாங்கப் பரீட்சை ஏற்படுத்தினார்கள். அப்பொழுது எட்டாவது வகுப்புவரை ஆங்கிலம் கிடையாது என்று கூறினார்கள். 1945ல் ஆங்கிலத்தை இஷ்ட பாடமாகக் கற்பிக்கலாம் என்று உத்திரவிட்டதோடு நான்காம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்பு வரையுள்ள ஆங்கில பாடதிட்டத்தையும் வெளியிட்டனர்.

1946ல் நான்கு ஐந்து வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்க வேண்டாம் என்ற உத்தரவிட்டனர். 1948ல்

ஆறாவது வகுப்பிலும் ஆங்கிலம் கற்பிக்கக்கூடாது, ஏழாம் வகுப்பில் தான் கற்பிக்கவேண்டும் என்று கூறி 1949ல் மீண்டும் ஆறாம் வகுப்பிலேயே ஆங்கிலம் கற்றுக்கொடுக்கலாம் என்று உத்தரவை மாற்றிக் கூறினார்கள். அவ்வுத்தரவுப்படி சென்ற வருடம் 1949-50 ஆறு ஏழு வகுப்புகளில் ஒன்றுபோல் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. தற்போது எட்டாம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள் ஒரு ஆண்டு மட்டுமே ஆங்கிலம் கற்றவர்கள். சென்ற வருடம் எட்டாம் வகுப்புப் படித்த மாணவர்கள் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் ஆங்கிலம் கற்றவர்கள். நிலைமையிப்படியிருக்க சென்ற வருடம் எட்டாம் வகுப்புக்கு ஆங்கில புத்தகமாக வைத்திருந்த Nelson's Third Reader இவ்வருடமும் வைத்துள்ளார்கள். ஒரு வருட ஆங்கில அறிவு பெற்ற மாணாக்கர்கள் இப்புத்தகத்தை எவ்வாறு கற்க இயலும்?

புத்தகம் நம் நாட்டுச் சூழ்நிலைக்கு ஏற்றதல்ல. சிறுகதைகள் இருக்குமிடம் தெரியவில்லை. ஆங்கில அரிச்சுவடியைப் படித்து முடித்த மாணவன் ஷேக்ஸ்பியர் எழுதிய Merchant of Venice என்ற கதையை 10 பக்கங்களிலும், விஞ்ஞானிகளும் அறிந்து கொள்ள முடியாத Bridges என்ற பாடத்தையும் யாருமே புரிந்துகொள்ள முடியாத Rock Temples என்ற பாடத்தையும் எவ்வாறு கற்று பரீட்சை எழுத முடியும்?

இவைகளை நோக்கும் பொழுது இப்புத்தகத்தை அங்கீகரித்த அரசாங்க அலுவலாளரின் திறமையை என்னென்றியம்பமுடியும்! இதனை அரசாங்கத்தார் தீர ஆலோசித்து எளிய முறையில் புத்தகத்தினை ஏற்படுத்தியிருக்கவேண்டும். இத்தகைய ஆங்கில அறிவைக் கொடுக்கும் புத்தகங்களினால் மாணவர்களிடம் இயற்கையாகப் பொதிந்துள்ள தெரிந்து கொள்ளும் சக்தி தடைப்பட்டு, அவர்களைப் பரீட்சையில் தேர்வு பெற அர்த்தமற்ற ஆங்கிலச் சொற்களை நெட்டுருச்செய்யும் இயந்திரங்களாக்கி விடுகின்றன. மூளையின் ஆக்கச் சக்தியும், பகுத்தறிகின்ற தன்மையும், நுண்ணறிவும் நசுக்கப்பட்டு சிந்தனையும் ஆழ்ந்த நோக்கமும் அற்ற மனித விலங்காக மாற்றுகின்றன. ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே வீண் குழப்பத்தையும், , பெற்றோர்களுக்கும் பள்ளிகளுக்கு மிடையே தொடர்பற்ற நிலையையும் உண்டு பண்ணுகின்றது.

இக்குறையை அரசாங்கத்தார் கவனித்து விரைவில் வேறு எளிதான பாடப் புத்தகத்தை நிர்ணயித்தலே அழகு.

---

யுத்தபீதி இல்லாமல் எல்லா நாடுகளும் முன்னேற்ற சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உலக அமைப்பு ஏற்படுத்துவதற்காக இடைவிடாது பாடுபடுவதே இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கை. இதே லட்சியத்திற்காக உழைக்கும் எல்லா நாடுகளுடனும் நாங்கள் ஒத்துழைப்போம். தர்மமே ஜெயிக்கிறது என்பது எங்கள் நம்பிக்கை.

ஸர். எஸ் ராதாகிருஷ்ணன்.



# குழந்தைகளின் உணர்ச்சிகளைப் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை

S. N. டாம்ஸேன் M.A., M.Ed.

## ஆராய்ச்சியின் நோக்கமும் வகையும்:

ஏழு வயது முதல் பத்து வயது வரையுள்ள குழந்தைகளின் பண்புகளை ஆராய்வது இதன் நோக்கம். வார்தாவில் 335 குழந்தைகளைப் பற்றிய ஆராய்ச்சியாகும் இது. அக் குழந்தைகளுள் 220 பேர் சிறுவராவர், மிகுந்தவர் சிறுமியராவர்.

கீழ்க்கண்ட வகைகளில் ஆராய்ச்சி நிகழ்ந்தது. (i) ஆசிரியருக்கு ஒரு கேள்வித்தாள் அனுப்பப்பட்டது. (ii) பெற்றோருக்கு ஒரு கேள்வித் தாள் அனுப்பப்பட்டது. (iii) ஆராய்ச்சியாளர் நேரில் கண்டு பேசினார். (iv) குழந்தைகளுக்குச் சோதனைத் தாள்கள் தரப்பட்டன. (v) முறைப்படி ஆராய்ச்சியாளர் உற்று நோக்கி விஷயங்களை அறிந்தார்.

### (i) புத்தியின் இயல்புகள்:

கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் ஆசிரியர் அவற்றை அளவிட்டனர். (i) முயற்சியும் தாளாண்மையும் (Industry) (ii) சுவைத்தறிதலும் செய்தலும் (Interest) (iii) கவனம், (Attention) (iv) ஞாபகசக்தி (Memory) (v) தெளிந்து உணர்தல் (Comprehension). வகுப்பில் மாணவர் அன்றாடம் செய்யும் வேலையை ஆசிரியர் ஆதாரமாகக் கொண்டனர். மேற்கண்ட ஒவ்வொரு தலைப்பிலும் ஐந்து பிரிவுகள் இருந்தன. கடைசி பிரிவிற்கு ஒரு மார்க்கும் அதற்கடுத்த மேல் பிரிவிற்கு இரண்டும், மூன்றும் அதற்கு மேலுள்ள இரண்டு பிரிவுகளுக்கும் முறையே நான்கும் ஐந்தும் மார்க்குகளாக வழங்கப்பட்டன. ஆகவே மேற்படி 5 தலைப்புகளுக்கும் உச்ச மார்க்கு 25 ஆகும். நீசமார்க்கு 5 ஆகும்.

### (2) உணர்ச்சியின் பண்புகள் (Emotional Traits)

இவை கீழ்க்கண்ட வகைகளில் அளவிடப்பட்டன. (i) செயலின் பண்பு (Action trait) இதைக் கீழ்க்கண்ட 9 உபதலைப்புக்களில் ஆசிரியர் மதிப்பிட்டனர்.

| நேர் (Positive) | எதிர் (Negative) |
|---|---|
| 1. (a) புத்திசாலித்தனமுள்ள (Considerate Prudent) | (b) மூர்க்கமான (Rash) |
| 2. (a) சுயேச்சையுள்ள (Independent) | (b) பிறரைச் சார்ந்தொழுகும் இயல்புடைய (Dependent) |
| 3. (a) தன்னம்பிக்கையுள்ள (Self Confident) | (b) தன்னம்பிக்கையில்லாத (Diffident) |
| 4. (a) தலைமை வகிக்கும் சக்தியுள்ள (Possessing Leadership) | (b) தலைமைவகிக்கும் சக்தியில்லாத (Lacking Leadership) |
| 5. (a) முன்னேறும் அவாவுள்ள (Ambitious) | (b) முன்னேறும் அவா இல்லாத (Unambi·ious) |

| | |
|---|---|
| 6. (a) தொடர்ந்த முயற்சிபெற்ற (Persistent) | (b) தொடர்ந்த முயற்சியில்லாத (Non-Persistent) |
| 7. (a) விரைவாகச் செய்யும் சக்தியுள்ள (Quick) | (b) மெதுவாகச் செய்யும் சக்தியுள்ள (Slow) |
| 8. (a) முந்தும் இயல்புடைய (Pushfull) | (b) தனித்துப் பிந்திநிற்கும் இயல்புடைய (Retiring) |
| 9. (a) காரியத்தை நிறைவேற்றக் கூடிய (Practical) | (b) காரியத்தை நிறைவேற்ற முடியாத (Impractical) |

### (ii) பழகும் இயல்பு: (Sociability Trait)

இதைக் கீழ்க்கண்ட ஆறுபண்புகளை ஆதாரமாகக் கொண்டு ஆசிரியர் மதிப்பிட்டனர்.

| நேர் (Positive) | எதிர் (Negative) |
|---|---|
| 1. (a) பிறருடன் அளவளாவிப் பழகும் இயல்புடைய (Sociable) | (b) பிரிந்து தனித்திருக்கும் இயல்புடைய (Lonesome) |
| 2. (a) வாயாடும் இயல்புடைய (Talkative) | (b) மௌனமாக இருக்கும் இயல்புடைய (Silent) |
| 3. (a) ஒளியாமல் பேசும் இயல்புடைய (Frank) | (b) கருத்தை நெஞ்சில் அழுத்திக் கொள்ளும் இயல்புடைய (Reserved) |
| 4. (a) பிறரால் நேசிக்கப்படும் தன்மை வாய்ந்த (Popular) | (b) பிறரால் நேசிக்கப்படாத (Unpopular) |
| 5. (a) உதாரகுணமுள்ள (Generous) | (b) தன்னலம் கருதும் இயல்புள்ள (Selfish) |
| 6. (a) விரும்பிப் பழகுவதற்கேற்ற (Amiable) | (b) சினந்தொழுகும் இயல்புள்ள (Peevish) |

### (iii) மனப்பான்மை: (Temperament Trait)

கீழ்க்கண்ட எட்டு உபதலைப்புகளில் ஆசிரியர் இதை மதிப்பிட்டனர்.

| நேர் (Positive) | எதிர் (Negative) |
|---|---|
| 1. (a) பொறுமையுள்ள (Patient) | [b] பொறுமையில்லாத [Impulsive] |
| 2. (a) குற்றச்சாட்டை எளிதில் பொறுத (Sensitive) | [b] குற்றச் சாட்டைப்பொருட் படுத்தாத [Indifferent] |
| 3. (a) வேடிக்கையாகப் பேசும் இயல்புடைய (Humorous) | [b] அழுதுவடியும் தன்மையுள்ள [Morose] |
| 4. (a) தைரியமான (Bold) | [b] பயங்கொள்ளித்தனமான [Timid] |
| 5. (a) உல்லாச மனமுடைய (Cheerfull) | [b] துக்ககரமான [Sad] |



| | |
|---|---|
| 6. (a) சகிப்புத் தன்மையுள்ள (Tolerant) | [b] எளிதில் கோபிக்கும் தன்மையுடைய [Irritable] |
| 7. (a) நியாயத்திற்குக் கட்டுப்பட்ட (Reasonable) | [b] நியாயத்திற்குக் கட்டுப்படாத [Obdurate] |
| 8. (a) அன்புடைய (Loving) | [b] அன்பில்லாத [Harsh] |

### (iv) ஒழுக்கம்: (Morality, Character Trait)

இதைப்பற்றி ஏழு உபதலைப்புகளில் ஆராய்ந்தனர். பிறரோடு பழகுவதில் மாணவர் எந்த அளவுக்கு நியாயமாகவும், நம்பிக்கைக்குப் பாத்திராகவும், ஒழுங்குக்குக் கட்டுப்பட்டும், அகத்தூய்மை புறத்தூய்மை பெற்று நடந்து கொள்ளுகின்றனர் என்பதை ஆசிரியர் கவனித்தார்.

| நேர் (Positive) | எதிர் (Negative) |
|---|---|
| 1. [a] விதேயமான [Obedient] | [b] அவிதேயமான [Rebellious] |
| 2. [a] யோக்கியமான [Honest] | [b] அயோக்கியமான [Dishonest] |
| 3. [a] நம்பிக்கைக்குப் பாத்திரமான [Trustworthy] | [b] நம்பிக்கைக்குப் பாத்திரமல்லாத [Untrustworthy] |
| 4. [a] வகுத்த முறைப்படி வேலை செய்யும் இயல்புடைய [Methodical] | [b] தோன்றியபடி வேலை செய்யும் இயல்புடைய [Shabby] |
| 5. [a] ஒழுங்கான [Regular] | [b] ஒழுங்கற்ற [Irregular] |
| 6. [a] பணிவான [Humble] | [b] அசட்டு கர்வமுள்ள [Arrogant] |
| 7. [a] புறத்தூய்மையுள்ள [Clean] | [b] அழுக்குப் படிந்துள்ள [Dirty] |

### (V) சிறப்பியல்புகளை மதிப்பிடுதலால் பெறப்படும் குணவிசேஷம்: (Personality Trait)

மேற்கண்ட நான்கு சோதனைகளின் மதிப்பின் மொத்தம் குழந்தையின் குணவிசேஷ மதிப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது. நேர் அம்சத்திலுள்ள ஒவ்வொரு பண்பிற்கு ஒரு மார்க்கும் அதின் பண்பிற்கு பூஜ்யமும் கொடுக்கப்பட்டன. கீழ்க்கண்ட அட்டவணை ஒவ்வொரு லட்சணத்தின் உயர்ந்த பட்சம் (Maximum) அதம பட்சம் (Minimum) மதிப்பை (Score) காட்டுகிறது. (தொடர்ச்சி 24-ம் பக்கம்)

---

சோஷலிசத்தைப் பற்றி மக்கள் சுலபமாக பேசிவிடுகின்றனர். சில சட்டங்களை இயற்றுவதின் மூலம் சோஷலிசத்தை அமுலுக்குக் கொண்டுவந்து விடலாமென்று இளைஞர்கள் நினைப்பதாகத் தெரிகிறது. இது தவறு. செல்வத்தைப் பெருக்குவதின் மூலம் தான் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் உண்மையான மாறுதல் ஏற்படும்.

**நேருஜி.**

# மாணவரொழுக்கம்

P. இராமகிருஷ்ண விஜயரங்கம்,

M.A.L.T., M. Ed., Dip. Pol & P. Admn, F.R.E.S. (Lond).

ஒழுக்கமே மனிதனை உயர்ந்தோனாக்கும் என்பது ஆன்றோர் அருளிய அருள் மொழியாகும். எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக விளங்க இளைஞர்களுக்கு ஒழுக்கத்தினைக் கற்பித்தலே முறையும் வகையுமாகும். நல்லொழுக்கமுள்ள மனித சமூகத்தில் தான் பசியும் பிணியும் அகன்று வசியும் வளனும் சிறந்து அன்பும் நல்லெண்ணமும் நின்று நிலவும். இதனையன்றோ

"ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்".

என்று நம் தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் கூறிப் போந்தார்.

ஆசிரியர்களின் பொறுப்பில் உள்ள இளைஞர்களை நல்ல பழக்கத்தில் கொண்டுவந்து ஒழுக்கத்தை உயர்த்தினால், அரசாங்கமும் தன்னால் வளமுடையதாகும். இயற்கையினாலும் சூழ்நிலையினாலும் மனிதனின் பண்பு உருவாகிறது. இவற்றுள் சூழ்நிலையே மிக மிக முக்கியமானது. இந்தத் துறையில்தான் ஆசிரியர்கள் அற்புதங்களை நிகழ்த்த முடியும். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பில்லாமலிருப்பது தற்காலக் கல்வி முறையின் பெரிய குறைபாடாகும். இக்கல்வி முறையிலிருந்து இருபாலாரையும் கைதூக்கி விட்டு இருவரையும் ஒன்றுபடுத்தி நற்பண்புகளை வளரச் செய்யும் நோக்கத்தோடு எழுந்ததே ஆதாரக் கல்வி.

இக் கல்வி முறை இளைஞர்களின் ஒழுக்கத்தில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் முக்கிய பங்கு கொள்ளும்படிச் செய்கிறது. வாய்ப் பேச்சினாலும் உபதேசங்களினாலும் அல்லாமல் விளையாட்டுகள், சமூக சேவை முதலியவைகளின் மூலமாகவும் ஒழுக்கத்தை மாணவர்களிடம் உயர்த்த வேண்டும்.

இப்பொழுது நமது நாடு ஜனநாயகக் குடியரசாக விளங்குகிறது. நம்மை நாமே ஆண்டு கொள்கிறோம். பிரஜைகள் நடத்தும் வாழ்க்கைத்தரம் எந்த நிலையில் இருக்கிறதோ அதே நிலையில்தான் அரசாங்கமும் இருக்கும். இவ்விரண்டும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டவை. நல்லொழுக்கமில்லாத பிரஜைகளை வைத்துக்கொண்டு நல்ல குடியரசு எப்படி இருக்க முடியும்? சிறியவராக யிருப்பவர்கள்தான் நாளைப் பெரியவர்களாகின்றனர். எனவே மாணவர்கள் ஒழுக்கத்தினைக் கைக்கொண்டு சத்திய நெறியில் செல்லவேண்டும். குழப்பம் ஏற்படுத்தும் சக்திகளுடன் கலந்து கொள்வதில்லை என்று மாணவர்கள் பிரதிக்கினை எடுத்துக் கொள்ளவேண்டும். வேலை நிறுத்தம் செய்தும், உண்ணாவிரதம் இருந்தும் அமைதியைக் கலைக்க விரும்பும் ஆட்களுடன் மாணவர்கள் கலந்து கொண்டு தங்கள் நேரத்தை வீணாக்கக் கூடாது.

நாட்டிற்கு இன்று திறமை வாய்ந்த திட்டமான கொள்கைகள் உள்ள தேசபக்தி நிறைந்த ஊழியர்கள் தேவை. அதற்கேற்ப மாணவர்கள் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டும். மாணவர்கள் ஒழுங்கு என்னும் பற்றுக்கோடோடு சென்றால், உண்மையான ஜனநாயக முறையிலும், பொறுப்பு வாய்ந்த பிரஜைகளுக்கு ஏற்ற முறையிலும் எதிர்கால நற்பிரஜைகளாக விளங்க முடியும். நம் முன்னோர்களைக் காட்டிலும் மேலாகச் சிறப்படைய முடியும். தாய்நாட்டைக் காப்பதற்குரிய மனோதிடமும் வீரமும் பெறமுடியும். தந்நலங் கருதாது பிறர்நலங் கருதும் பெருந்தன்மையோடு நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை அமைதியான முறையில் தீர்த்து நாட்டை நல்வழியில் ஈடுபடுத்த முடியும்.

## மதிப்பு

| | | உயர்ந்த பட்சம் | அதமபட்சம் |
|---|---|---|---|
| 1. | புத்தியின் இயல்பு | 25 | 5 |
| 2. | செயலின் இயல்பு | 9 | 0 |
| 3. | பழகும் இயல்பு | 6 | 0 |
| 4. | மனப்பான்மையின் இயல்பு | 8 | 0 |
| 5. | ஒழுக்கம் | 7 | 0 |
| 6. | குணவிசேஷம் | 30 | 0 |

ஒவ்வொரு தலைப்பிலும் வயதிற் கேற்றவாறு மதிப்பிட்டு மதிப்பளவுகளை அட்டவணைகளில் ஆராய்ச்சியாளர் தந்துள்ளனர். இதைப்பற்றிய விவரங்களை யறிய விரும்புவோர்.

(The Indian Journal of Educational Research Vol. 1 No. 1 June 1950) மலரைப் பார்க்கலாம்.

(பாலர் கல்வியிலிருந்து).

இன்று எல்லாத்துறைகளிலும் முதியோர், இளைஞர்கள் முதலிய அனைவருடைய சேவைகளும் நாட்டிற்குத் தேவை. ஆகையால் உண்மை தேச பக்தியுடன், நம் புராதன நாட்டின் அமைதி க்ஷேமம் ஆகியவற்றை வளர்க்க அவரவர்கள் சக்திக்கு ஏற்றபடி மாணவர்கள் தயாராகவேண்டும். தேசக் குரலுக்கு செவி சாயுங்கள்.

படேல்.

# ஹிந்தியே தேசப் பொதுமொழி

இந்திய மக்களுக்கு தேசீய உணர்வு என்றைக்கு ஏற்பட்டதோ அன்றைக்கே தேச பாஷை என்பது ஒன்று அவசியம் என்று சொல்லத் தேவையில்லை. ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள் நம் நாட்டில் இருக்கின்றனர். சுமார் ஒரு நூற்றாண்டாக மேல் படிப்பில் அதுதான் போதனைக்குரிய பாஷையாக இருந்து வந்திருக்கிறது. அத்துடன் கல்வி பயின்ற மக்களின் தேச பாஷையாகவும் அது இருந்து வந்திருக்கிறது. அப்படி இருந்தும் ஆங்கிலம் நம் தேச பாஷையாக இருக்கவேண்டும் என்ற கருத்தை தேசீய இந்தியா என்றைக்குமே ஏற்றுக்கொண்டதில்லை. எவ்வளவோ முயற்சிகள் செய்துங்கூட இன்றைக்கு நம்முடைய ஜனத்தொகையில் நூற்றுக்கு ஒருவருக்கு மேல் ஆங்கிலம் படித்தவர்கள் இல்லை. ஆங்கிலத்திற்கு ஒரு ஸ்தானம் உண்டு என்பதை மக்கள் அங்கீகரிக்கத்தான் செய்தார்கள். ஆயினும் கற்பனை, அமைப்பு, சொல் தொடர்பு முதலிய விஷயங்களில் இந்தியாவின் இதர பாஷைகளோடு ஒன்றியதாய் உள்ள ஒரு சுதேச பாஷைதான் சரியான தேச பாஷையாக இருக்க முடியும் என்பதை நம் நாட்டின் தலைவர்களும் அறிஞர்களும் உணர்ந்தார்கள். இதனைப் பரப்பும் பணியை காந்திஜியே முதன் முதலில் மேற்கொண்டார்.

சுலபமானதாகவும், இலகுவில் புரியக் கூடியதாகவும், பழக்கத்தில் வழங்கி வருவதாகவும், இந்தியாவின் ஒன்றுபட்ட கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளதொரு பொதுப் பாஷைதான் அரசியல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சர்வ கலாசாலைக் கல்வியில் எந்த பாஷை போதனைக்கு உபயோகிக்கப்படவேண்டும் என்னும் விஷயத்தை சர்வ கலாசாலைக் கமிஷனும் சர்வ கலாசாலை போர்டும் ஆராய்ந்துள்ளன. கூடிய சீக்கிரம் ஆங்கிலத்திற்குப் பதிலாக சமஸ்கிருதம் அல்லாத ஒரு இந்தியா பாஷை உபயோகத்திற்கு வரவேண்டும் என்று அறிக்கை கூறுகிறது. பட்டப்படிப்பு வரையில் கல்வியெல்லாம் பிரதேச பாஷைகளிலேயே இருக்கவேண்டும். ஆனால் சர்வ கலாசாலைப் படிப்பு முழுவதிலும் ஒரு பாஷை என்கிற முறையில் ஹிந்திப் படிப்பு கட்டாயமாயிருக்கவேண்டும். இதனால் பிரதேச பாஷைகளின் அபிவிருத்தி சாத்யமாவதுடன், இந்தியா முழுவதிலும் உயர்ந்த ரீதியில் ஒரு பொது போதனை மொழி வளர்வதும் சாத்தியமாகும்.

இந்தியாவில் பற்பல பாஷைகளும் இனங்களும் பலவிதமான பழக்க வழக்கங்களும் இருந்து வந்த போதிலும் அதன் கலாசாரம் மட்டும் காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரையில் ஒரு மாதிரியாகத்தான் இருந்துவருகிறது. கி பி. 7ம் நூற்றாண்டு முதல் இந்தியாவுக்கு வந்துள்ள அயல் நாட்டார் ஒவ்வொருவரும் இந்தியக் கலாசாரம் மொத்தத்தில் ஒரே தன்மையாய் இருப்பதை எடுத்துக் கூறியிருக்கிறார். வேறுபட்ட கலாசாரமும் வேறுபட்ட வாழ்க்கை முறைகளுமுடைய சில சிறுபான்மை கூட்டத்தார் இந்தியாவில் இருந்து வந்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் கலாசாரங்களில் சில இந்தியாவிலேயே உருவானால், இன்னும் சில வெளியிலிருந்து வந்து புகுந்தவை ஆனால் அவைகளை ஒடுக்கவோ, ஒழிக்கவோ, மாற்றவோ இந்தியா என்றும் முயன்றதில்லை. இந்தியக் கலாசாரம் என்றைக்குமே மற்ற கலாசாரங்களை சகித்து, ஜீரணித்து வந்துள்ளது. அதனால்தான் இந்தப் பரந்த நாட்டில் பல்வேறு வகையான கருத்துக்களும் மதங்களும் தாராளமாய் வளர்ந்து வந்திருக்கின்றன. வேதகால ரிஷிகளின் மந்திரங்கள் உபநிஷதங்களில் பொதிந்து கிடக்கும் உண்மைகள், கடல்போல் பரந்துகிடக்கும் ராமாயண பாரத இதிகாசங்கள், சூவிமதத்தினரின் கருத்துரைகள், சமயாச்சாரியார்களின் பக்திப் பாடல்கள், வீரர்களின் பிரதாபங்கள், அரசியல் நிர்வாகஸ்தர்களின் அறிவுரைகள், கலைஞரின் பொக்கிஷங்கள் இவை எல்லாவற்றினின்றும் ஹிந்தி பாஷை வளம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றில்தான் பிரதேச பாஷைகளும் வளர்ந்திருக்கின்றன. ஆகவே ஹிந்தியைப்போன்ற சுதேசபாஷையைத்தான் இந்தியர்கள் அனைவரும் புரிந்துகொள்வதும், கிரகித்துக்கொள்வதும், திறம்படக் கையாளுவதும் சாத்தியமாகும். அயல் நாட்டிலே தோன்றியதும், அமைப்பிலே வேறுபட்டதும், கற்ற கற்பனையில் அன்னியமானதும், கிரேக்கக் கதைகள், ரோம சரித்திரங்கள், கிறிஸ்துவ சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் ஊறி வளர்ந்ததுமான ஒரு வளமிகுந்த பிரதேச பாஷை இதைச் செய்யமுடியாது. இந்தியாவிற்கு ஆங்கிலமே தேச பாஷையாக இருக்கவேண்டும் என்று இன்னமும் வாதாடுபவர்கள் இந்தியா மொத்தத்துக்கும் ஒரு பொது மொழியாக உதவ வேண்டிய ஹிந்தியின் இந்த விசேஷத்தை மறந்து விடுகிறார்கள். ஹிந்தியிலே இந்தியக் கலாசாரத்தின் பொதுவான அம்சங்கள் அவ்வளவும் ஏற்கெனவே புகுந்து இலக்கியமாகிக் கிடக்கின்றன. ஹிந்தியில் உபயோகிக்கப்படும் உருவகங்களும் கற்பனைகளும் மற்ற இந்தியா பாஷைகள் அத்தனைக்கும் பொதுவானதுதான். ஆகவே கலாசார விஷயத்தில் அது வேறெந்த அந்நிய பாஷையையும் ஒன்ற முடியாத அளவிற்கு நமது பிரதேச பாஷைகளுடன் ஒன்றிக் கிடக்கிறது. இந்தியாவிலுள்ள பிரதேச பாஷைகள் அத்தனையும் அவை எவ்வளவு புராதனமாக இருந்தாலும் சரி, ஏதோ ஒரு அளவுக்கு ஒன்று சம்ஸ்கிருதத்திலிருந்து பிறந்தவையாகவோ, அல்லது சம்ஸ்கிருதத்திலிருந்து வளம்பெற்றவையாகவோதான் இருக்கின்றன. ஆகவே இந்த பாஷைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஆதாரமாக ஏதோ ஒரு அளவில் சம்ஸ்கிருதம் இருந்துவருகிறது. சம்ஸ்கிருதம் பிரமாதமான இலக்கிய வளம் உடையது என்பதைக் கூறவேண்டியதில்லை. அது எவ்வளவு வேண்டுமானாலும் நெகிழ்ந்து கொடுக்கக் கூடிய பாஷை. தெளிவைப் பொருத்த வரையில் அதன் சக்திக்கு ஒரு எல்லை கிடையாது. கடைசியாகப் பார்த்தால், ஹிந்தி சம்ஸ்கிருதத்திலிருந்து தோன்றி அதனால் வளம்பெற்ற பாஷை என்பது புலப் புலப்படும். ஆகவே இந்தியாவில் எந்த பிரதேச பாஷை பயின்றோருக்கும் ஹிந்தியைப் படித்து நிபுணராவது கஷ்டமாக இருக்கமுடியாது. எப்படி இருந்தபோதிலும் ஆங்கிலத்தைக் கற்பதைவிட ஹிந்தியைக் கற்பது சுலபம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகவே, எந்த முறையில் பார்த்தாலும் சரி. இந்தியாவிற்குப் பொதுப் பாஷையாக இருக்க ஹிந்திக்குள்ள அருகதை நியாயமானதா

கவும் மறுக்க முடியாததாகவும் தோன்றுகிறது.

இது சம்பந்தமாகப் பல போராட்டங்கள் நடந்து வருகின்றன. அவைகள் அர்த்தமற்றவைகளாகவே காணப்படுகின்றன.

பிரதேச பாஷைகள் ஹிந்தியைப் பற்றிப் பயப்படுவதற்குக் காரணமிருப்பதாகத்தோன்றவில்லை; ஹிந்தி ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு உதவுவதற்காகத்தான் இருக்கிறது. இந்தப் பிரதேச பாஷைகள் எத்தனையோ காலமாக இருந்துவந்திருக்கின்றன. அவற்றில் சில இருபது நூற்றாண்டுகளுக்கும் முந்தியவையாகும். இலக்கிய வளத்தில் நன்கு அபிவிருத்தி அடைந்துள்ள எந்தப் பாஷைக்கும் ஈடு கொடுக்கக்கூடிய சக்தி அவற்றிற்கு உண்டு. ஆகவே இது சம்பந்தமாய் ஏற்பட்டுள்ள அச்சம் அர்த்தமற்றதாகும். ஒவ்வொரு பிரதேச பாஷையின் அபிமானியும் ஹிந்தி தேச பாஷையாக இருப்பதன் அவசியத்தை உணர்ந்து இரண்டு பாஷைகளையும் அதனதன் துறையில் போற்றி வளர்ப்பதற்குப் பாடுபடவேண்டும். ஹிந்தி பாஷையை ஏதேனும் பிரதேச பாஷைக்கு எதிரியாக வைத்துப்பேசுவது உண்மை நிலையையும், நமது நாடு முழுவதும் ஒரே சமுதாயமாக விளங்கப்போகும் எதிர்கால நிலையையும் உணர மறுப்பதாகும். எனவே ஹிந்தியைப் பற்றிச் சந்தேகமோ, அச்சமோ, அசிரத்தையோ கொள்வோமாயின் பின்னல் பரிகாரம் தேடமுடியாதபடி நாம் சங்கடப்பட நேரும். அத்துடன் ஹிந்தியையும் பாதகமடையச் செய்தவர்களாவோம். ஏனெனில் நம்மால் கிடைக்கக்கூடிய வளம் அதற்கு இல்லாமாலேயே போய்விடுகிறது. அரசியல் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள வகையில் அதை வளர்ப்பதற்கு நம்மால் ஆனவரை பாடுபடுவோமானல் நாம் நம்முடைய பாஷையையும் பொதுப் பாஷையையும் வளப்படுத்தியது மட்டுமன்றி இந்தியாவில் பிறந்த ஆண் பெண் ஒவ்வொருவருடைய இதயத் துடிப்பையும் பிரதிபலிக்கக்கூடிய ஒரு சாதனத்தை உருவாக்குவதற்கு உதவி செய்தவர்களாவோம்.

ஹிந்திக்குச் செய்யும் சேவையின் மூலம் நாம் அனைவரும் தேசிய ஐக்கியம், தேசிய புனருத்தாரணம் என்னும் பொதுவான லட்சியத்துக்கு தன்னலமின்றித் தொண்டு புரிவோமாக!

---

## ஆசிரியருக்கு வாழ்த்து

குடியரசுப் பெருநாட்டின் மக்கட் கூட்டம்
குறைவறு நல்லறிபெறக் கல்வியூட்டும்
நெடியோரே ஆசிரியத் திருக்கூட்டத்தீர்
நெறியொன்று கடைப்பிடிமின் நாடுவாழப்
பொடியாகும் பிள்வுணர்ச்சி யகலவோட்டிப்
புதுநினைப்பும் பொதுநோக்கும் பொலியநேர்மை
ஒடியாம லுள்ளமுறை செயலிற்றூய்மை
உயர்ந்திலங்கத் தொண்டினிதே வுஞற்றுவீரே.

(இஃது திருப்பெரும்பூதூர் வட்டத் துணைக்கல்வி ஆய்வர் உயர்பெருந்திருவினர் ம. அரங்கநாதன் அவர்கள், எடையார் பாக்கம் மையம் திறந்தபோது வழங்கியது.)



# எதிரொலி ("அரசியல்")

V. ராதாகிருஷ்ணு, B. Com.,

அன்புச் சமூகத்தில் இன்ப வாழ்க்கைக் காண அவாவுறுகின்றனர் ஆசிய மக்கள். காரணம்! புராதன பரிசுத்தமான வாழ்க்கை வளம் மீண்டும் சுதந்திர ஆக்ஷியில் பொலிவுற்று விளங்கவேண்டுமென்றுதான். அன்னிய ஆதிக்கத்தால் அடக்கப்பட்டுக் கிடந்த மக்கள் விழித்தார்கள். உரிமைப் போராட்டம் திறம்பட நடத்தினூர்கள். சத்தியமே ஜயிக்கும் என்பதை நிலைநாட்டி கடமையைப் பின்பற்றினூர்கள். வாழ்க்கை லக்ஷியத்தை யடைந்தார்கள். உலக அரங்கில் உண்மை ஜோதிகளாய் திகழ்கின்றூர்கள்

காண்கின்றூர்கள் பல்வேறுபட்ட நாட்டினர்கள். பதுங்கிக் கிடந்த உணர்ச்சி ஊற்றெடுத்தோடுவதைக் கண்டு பொறுமைக் கொண்டிருக்கின்றூர்கள். ஆசியனுக்கு இவ்வளவு அறிவுப் பெருக்கேது என்று பேசிய அறிஞர்களெல்லாம் இன்று அடிபணிகின்றூர்கள்.

ஆசியாவின் ஒவ்வொரு மூலையிலும் சுதந்திரப்பண் ஒலிக்கின்றது சூழ்ச்சிச் சூறுவளி அடங்குகின்றது இனவேற்றுமை அழிகின்றது. மக்கள், மணிமகுடம் பூண்ட மன்னரின் ஆக்ஷியை நீக்கி மக்களாக்ஷி நிறுவுகின்றனர்.

இந்நிலையில் பாரத மக்களாகிய நாம் ஏனைய ஆசிய நாடுகளிடையே தலைசிறந்து விளங்குகின்றோம்! நம் நெறி பிசகா சாகசத்தால். அறிவுடைய தலைவர்களின் ஆதரவால் உலகத்திற்கே வழி காட்டிய காந்தி மகானின் உன்னத போதனைகளால்.

தற்பெருமைப் பேசிப் பயனில்லை என்று நம் பெருமையை நாம் மறந்துவிடக்கூடாது. ஒருவன் தன் வலிமையையும், மரியாதையையும் உணராதவரை மக்களில் உபயோகமற்ற நிலையிலேயே வாழ்க்கை நடத்த முடியும் உண்மையை உணரவேண்டும். கடமைப் பணியாற்ற முன் வரவேண்டும். இந்த சொந்தப் பொறுப்பு நிறைவேற்றப்படும்வரையில் எவரும் சிறக்கமுடியாது.

உலக அரங்கில் U. N. O. வில் பாரத நாடு அங்கம் வகிக்கிறது. ஏனைய வல்லரசுகளிடையே உலகம் பல்வேறுபட்ட சுதந்திரங்களுக்குப் போராடுகிறது. பிடாரித்தனமான காட்டுமிராண்டிச் செய்கையான விலங்கினங்களுக்கும் கீழ்பட்ட மனப்பான்மை யுடையதான சண்டைகள் ஒழியவேண்டுமென்று ஓங்காரமிட்டுக் கூறுகின்றது. இன்று செவிசாய்க்காத செவிட்டு நாடுகள் ஒரு நாள் பாரதப் பண் பாட்டிற்கு அடிபணிந்தே தீரும். அந்நாள் தூலதூரத்தில் இல்லை. மிகவும் சமீபத்தில் தான் இருக்கிறது பாரதம் உலக அரங்கில் தன் பணியைத் திறம்பட நடத்துகின்றது. கடந்த இரண்டு உலக மகா யுத்தங்களின் கோர விளைவுகளை மனதில் இருத்தி மன்றுடுகின்றது உலக சுபிக்ஷத்திற்காக. உன்னத விஞ்ஞான முன்னேற்றத்தைக் கூடியவரை அபிவிருத்திபட்டவர்களுக்கும் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். அழிவுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. என்றெல்லாம் பறைசாற்றி கூறுகின்றது. நாமெல்லாம் உலக குடும்பத்தின் ஒருமித்த மக்கள் ஆகையால் நமக்குள் வேற்றுமைகள் மறக்கவேண்டும். நம்முடைய விதவிதமான பல்வேறுபட்ட கலாசாரங்க போஷிக்கப்படவேண்டும். இதற்

பந்தோபஸ்து சபை ஆவன செய்ய வேண்டும் என்றெல்லாம் பாரதம் எடுத்தோதுகின்றது. இவ்வளவும் உண்மையில் போற்றத் தக்கது தான். ஆனால் இவ்வளவையும் செய்கின்றோமென்று நமக்கு நாமே சொல்லிக் கொள்வதால் பயன் இல்லை. பிறநாட்டார் பார்த்து வியப்படைந்து கூறவேண்டும். அப்போதுதான் உண்மையில் நம் பணியை நாம் சிறக்கச் செய்தவராவோம்.

இன்றைய நாகரிகம் மாலைகள் போட்டுக் கொண்டு ஒலிப்பெருக்கியிடம் நின்று பேசி விட்டு, டீ அருந்திப் போவதுடன் நிற்கின்றது. பேசிய உரைகளை பத்திரிக்கைகள் விருப்பமற்ற நிலையிலும் கடமைக்காக பிரசுரிப்பதுடன் முற்றுப்பெறுகின்றது. இந்நிலை ஒழிய வேண்டும். இவ்வளவிற்கும் காரணம் அடிப்படையான நம் கல்வித்திட்டம் சீர்குலைந்திருப்பதேயாகும். உண்மைக் கல்வியைக் கற்பிக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமேயொழிய இதுவரை அநுபவித்த அடிபணியும் அடிமைக் கல்வியும், நம் பண்பாடுகளுக்குப் புறம்பான வெளியான புகழுரைக் கூறும் கல்வியும் நமக்கு வேண்டியதில்லை. உதாரணமாக ஆங்கில ஆக்ஷியில் நம் நாட்டில் நம் நாட்டுச் சரிதம் எவ்வளவு தூரம் உண்மையாக போதிக்கப்பட்டது. சிறிது சிந்தித்தால் நன்கு விளங்கும். ஆக்ஷியாளருக் கனுகூலமான முறையில் சரித்திரம் எழுதப்பட்டது. கட்டாயமாகக் கல்விப் பயிற்றுவிக்கப்பட்டது. பரீக்ஷைத் தாள்களில்கூட அன்னியருடைய பெருமையை உணர்த்தும் வெற்றிகளையும், திட்டங்களையும் குறித்த வினாக்களும் அதிகம் இருக்குமே ஒழிய நம் நாட்டுப் புகழ்பற்றி அவ்வளவாக இருந்ததில்லை. யாராவது சுய அறிவுடையவன் ஏதாகிலும் கேழ்ப்பானோ என்ற காரணத்தால் அசோகன் செய்த நன்மை யென்ன? புத்தர், மகம்மதுவின் உபதேசங்களென்ன? பிரித்விராஜ் உடைய தோல்விக்குக் காரணமென்ன? என்ற தோல்விக் கேள்விகள்தான் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு முதல், கல்லூரியில் ஐந்தாம் வகுப்புவரைக் கேழ்க்கப்பட்டது. இந்த இருட்டடி ஒழியவேண்டும். நம் பண்டைய நாகரிகச் சிறப்புகளும், ஆக்ஷி அணிகளின் நுணுக்கங்களும் கயவாளித்தனமாக அயலானுக்குழைத்து அரைவயிற்றுக் கூழுக்கும் தாளம்போட்ட கதி மறக்கும் மூதாதையரின் வாழ்க்கை வளமும், அன்று உலக அரங்கில் ஜீவநாடியாக விளங்கியபாரதத்தின் பண்பாடுகளும் பயிற்றுவிக்கப்படவேண்டும். கல்வி என்றால் எட்டுக் கல்விமட்டுமல்ல. தொழிற்கல்வி போன்ற ஏனைய நுண்ணியக் கலைகளையும் பயில வேண்டும். வாழ்நாளை வீணாக்கும் திட்டமிட்டக் கல்வியைவிடப், படிக்கும் காலத்தைக் குறைத்து அதைச் செயலில் செய்து வளம் பெறும் காலம் ஓரளவுக்கு திட்டமிடப்பட்டு போதிக்கப்படவேண்டும். நாடு வளமடைய பொது மக்கள் அனைவருக்கும் கல்வி கற்றுக் கொடுக்கும் முதியோர்க்கல்விச்சாலைகளான சினிமா கொட்டகைகளில் நாட்டுச் சரித்திரம், விஞ்ஞான ஆராய்ச்சி, அரசாங்க முறைகள் முதலானவைகள் படங்கள் மூலம் போதிக்கப்படவேண்டும். கல்வி கற்றவர்களுக்குப் பத்திரிக்கைகள் வாயிலாகப் பொய் சமாச்சாரங்கள் அதிகம் தருவதை நிறுத்தி உண்மைக் கல்வி போதனையை ஒருதிட்டமாக வகுத்து வெளியிடவேண்டும். முக்கியமாக படத்துறையையும் பத்திரிக்கையையும் அரசாங்கம் தன் இஷ்டப்படி நடத்திக் கல்வி முறையை வளமுறச் செய்யவேண்டும். நாட்டை ஒரு உற்பத்தி ஸ்தலமாக்கவேண்டுமேயொ



ழிய எடுத்ததற்கெல்லாம் வெளிநாட்டை எதிர்பார்க்கும் ஏமாந்த சோணகிரிகளாக வாழ விழைதல் நம் பெருமைக்குப் பங்கம் விளைவிக்கும். கலாசாரத்தின் பல அங்கங்களும் சீர்பட போதிக்கப்படவேண்டிய நிலையில் நம் நாட்டுக் கல்வி அமைந்திருக்கவேண்டும்.

இந்தத் திட்டமான அறிவு வந்துவிட்டால் அணிவகுப்பு முறை மிகவும் சீர்பெற்று விளங்கும். ஆகாயம், பூமி தண்ணீர் படைகளால் நாட்டை அடக்கி ஆளும் காலம் அணுக்குண்டும், ஜலவாயு குண்டும் வந்ததனால் மலையேறிவிட்டது. இந்நிலையில் மக்களில் ஒழுங்குடைய வாழ்க்கைத் திட்டமும், சண்டையற்ற மனப்பான்மையும் ஓங்கி வளர வேண்டும். பந்தோபஸ்து கவுன்வில்போன்ற உலக சமாதான சபைகள் மூலம் நாட்டு அணிகள் உள்நாட்டுத் தேவைக்குப் போதுமானதாக திட்டமிடப்படவேண்டும். சமுதாய வாழ்க்கைத் திட்டங்கள் ஏறக்குறைய உலகம் பூராவிற்கும் ஒரே வகையாக இருக்கவேண்டும். சமாதான பிரசாரகர்கள் மூலம் நாட்டில் சுபிக்ஷம் வளர ஆவன செய்ய ஆக்ஷியாளர் முன்வர வேண்டும். இப்படியெல்லாம் செய்தால்தான் இந்த நவநாகரீக காலத்தில் சாந்தமான வாழ்க்கை நடத்த முடியும்.

வாணிபத்துறையில் ஏறக்குறைய வகுப்பின் முறை மிகவும் சிறந்ததாக இருக்கின்றது குடிசைத் தொழில்கள் முதல் தொழிற்சாலைகள் வரை அரசாங்கத்தின் ஆதரவால் வளர்க்கப்படுகின்றது. அரசாங்க பாங்க் பண உதவி செய்கின்றது. அந்த முறையில் நம் நாட்டிலும் அரசாங்கம் உற்பத்தி பெருக்குக்கு ஆவன செய்ய முன் வரவேண்டும். அதைத் தவிர்த்து கண்ட்ரோல்களை விதித்தோ, அரசாங்கமே வியாபாரத்தை மேற்கொண்டோ நடத்தினால் நாடு சீர்கேடடையும். வியாபாரிகள் அரசாங்கத் துரோகிகள் என்று எண்ணப்படும் காலம் மாய்ந்தொழிய வேண்டும். அவர்பால் சீற்றம் கொள்ளும் ஆக்ஷியாளர் அவர் தொழில் அபிவிருத்திக்குத் திட்டமிட்டு ஊக்கம் தர வேண்டும். இல்லையேல் வணிகம் கெட்டுவிடும். கட்டுப்பாடற்ற வியாபாரம் [Free Trade] நாட்டில் நிலவவேண்டும். இதற்கு ஆவன செய்ய நம் நாட்டு ஆக்ஷிக்குழு திட்டம் வகுக்கவேண்டும்.

ஓட்டுரிமை வயது வந்தோருக்கு வந்த இந்தக் காலத்தில், நம்பாரதத்தில் சமீபத்திலும் இம்முறை நடக்கவிருக்கிறது. இது பற்றி கிராமவாசிகளுக்கு இன்னும் ஒன்றும் சரியாக விளங்கவில்லை. இச்சமயத்திலாகிலும் அரசாங்கத்தார் கக்ஷி சார்பற்ற பிரசாரகர்களை கிராமங்கள் தோறும் அனுப்பி விஷயங்களை விளக்கவேண்டும். விளக்கம் கொடுக்காமல் செய்யும் எந்தக் காரியமும் இறுதியில் பிரமாதமாக முடியும் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். காலைக் கதிரவன் வைரஊசி கொண்டு கீழ்வானத்தைக் கீறி இருளை ஓட்ட முனைகின்றதைப் போல் நம் சுதந்திர இந்தியாவும் உலக இருளைப் போக்க அறிவு ஊசியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு இந்தியனும் தன்நிலையறிந்து தன் சக்திக்கேற்ப உலக சமாதானத்திற்குப் பாடுபட முன் வரவேண்டும்

அடுத்த இதழில் ''பொருளாதார இயல்பு'' பற்றி விளக்கப்படும். நம் நாட்டுப் பொருளாதாரம் அயல் நாட்டுப் பொருளாதாரம், எதிர் காலத்தில் நாம் வகுத்து நடத்த வேண்டிய திட்டங்கள் போன்றவை தொடரும்.

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

## போற்றப்பட வேண்டுவோரும் வேண்டுவனவும்:

இனி சில கடமைகளைக் கூறுகின்றார்:

வானவர் கருமங்களாவது, மறைகளிற் கூறப்பெற்ற வேள்விகளே யன்றி, சிவன், விஷ்ணு, அம்பிகை முதலிய தெய்வங்களை யனுதினமும் வழிபடல், விநாயகச் சதுர்த்தி முதலிய விரதங்களை மேற்கொள்ளல் என்பன போன்றனவாம். தென்புலத்தார் கருமங்களாவது சிராத்தம் [காலஞ் சென்ற மூதாதையரைக் குறித்துச் செய்யப்படும் சடங்கு], அமாவாஸ்யை, மாதப்பிறப்பு முதலிய நாட்களில் செய்யப்படும் தர்ப்பணம் முதலியனவாம். இவற்றைச் செய்தலால் காலமாரிபொழிந்து நாடு வளம்பெறு மென்பதும், தூயமனோநிலை தனக்கு ஏற்படுமென்பதும் நம்நாட்டினர் கண்கூடாகக் கண்டுவந்த முறை. ஆதலின் இவற்றினின்று வழுவாதே என்றார்.

'உடலன்றோ அறஞ்செய்தற்கு முதற்கருவி' என்று சிறப்பித்துக்கூறப் பெறும் இவ்வுடலினை ஈன்றெடுத்து வளர்த்து உருவாக்கிய அன்னையை தெய்வமாகக் கருதி அவளுடைய மனங்கோணாமல் ஆதரிக்கவேண்டும் அவ்வாறே, இவ்வுடலின் தோற்றத்திற்கு காரணனாகிய தந்தையையும் பேணவேண்டும். இதனையே சிறுவர்களுக்கு, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றும், 'தந்தை தாய்ப்பேண்' என்றும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பின்பு இப்பூதவுடலில் அறிவுடலை வளர்த்துக் கொடுத்த ஆசானையும் தெய்வமேபோன்று பேணவேண்டும். நமது இல்லம் நாடி வந்த விருந்தினரை [அதிதியை]யும் தெய்வத்தைப்போன்று வழிபடல் வேண்டும்.

இல்லம் நாடி வந்தோருக்கு உண்டியளிப்பது மனிதனின் பொதுக் கடமை என்பது ஒருபுறமிருக்க, தவவொழுக்கமும் துறவொழுக்கமுங் கொண்டு அனுக்ரகஞ்செய்யும் சக்திவாய்ந்த ஆன்றோர் பலர் பற்றின்றிப் பாரெங்கும் உலவிவருவர். நல்காலம் நல்கி வருவது நல்லொழுக்கத்தின் பயனேயாகலின், இல்லம் நாடிவந்தோரை, ஈசன் அருள்புரிய வந்தாரென்ற மனப்பான்மையுடன் வழிபடின் வாழ்வின் குறிக்கோள் விரைவில் கிட்டு மென்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

பின்னர், எவ்வாறு ஒழுக்க முறைகளைப் பின்பற்றுவது என்பதை, எவை இகழப்படாத கருமங்களோ அவை போற்றப்படல்வேண்டும்; மற்றவைகளல்ல என்பதால் கூறினார். அதாவது, அறநூல்களிலும், ஆன்றோர்களாலும் இகழப்படாத கருமங்களையே செய்யவேண்டும்; இகழப்படுவனவற்றைத் தவிர்க்கவேண்டும் என்பதாம். இவற்றை நன்கு மனதிலிருத்தச் செய்து நன்மதிப்புக்கு உரியவராகக்கொண்ட ஆசான் முதலியோரது ஒழுக்கங்களைப் பின்பற்றுகையில் எவ்வெவற்றை ஏற்பது என்பதைத் தொடர்ந்து கூறுகின்றார், எவை எங்களது நல்லொழுக்கங்களோ அவை உன்னால் வழிபடல் வேண்டும் என்று. மாந்தராகப் பிறந்த எவரும் குற்றம் அறவே இன்றியவராக இருக்கமுடியாது. ஆகலின் நல்லொழுக்கங்களை மட்டுமே ஏற்கவேண்டும். ஆன்றோர்களிடம் காணப்படக்கூடும் இரண்டொரு குற்றங்களை, கிரஹண காலத்திய சூரிய சந்திரர்களைப் போன்று கருதி, கிரஹணமெனும் குற்றங்கள் நீங்கி ஒளிரும் காலத்திய நேர்மையான ஒழுக்கங்களையே பின்பற்றவேண்டும். உதாரணமாக, பரசுராம



ரைக் கருதுகையில் தந்தை சொல்லுக்கு மறுமொழி கூறாது கீழ்ப்படியும் ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டுமேயன்றி, தாயைக்கொன்றதை மனதிற் கொள்ளக்கூடாது.

## அறிஞர்பால் ஒழுகு முறையும் ஈகை முறையும்:

சீரிய மறை அறிஞர் தமது முதிர்ந்த அனுபவ அறிவுடன் ஆய்ந்து முடிவு செய்யவேண்டிய விடயத்தைக் குறித்து சபை கூட்டிப் பேசிக்கொண்டிருக்கையில், பயிலுதலை முடித்துக்கொண்டு விட்டதால் தன்னை அறிஞனாக நினைத்துக்கொண்டு குறிக்கிட்டு எதையும் கூறக்கூடாது: அவர்கள் கூறிவருவதிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைச் சிந்தித்து வரவேண்டும். இதனையே எவ்வெவர் நம்மினும் சீரிய மறை அறிஞரோ அவர்கள் அவை வீற்றிருக்கையில் நீ மூச்சு விடக்கூடாது என்று கூறினார். பேசாமல் மௌனமாக இருந்து கவனித்துக் கேட்கவேண்டு மென்பதாம். மற்றொரு பொருள், அவர்கட்கு வீற்றிருக்க மனை முதலிய வசதிகள் கொடுத்து உபசரிக்கவேண்டும் என்பதாம்.

ஈகை [தானம்] என்பது மனத்தூய்மையை யடையச் செய்யும் ஸாதனங்களின் ஒன்றாகும். இப்பயனை முழுதும் பெற எவ்வாறு ஈகை வழங்குதல் வேண்டுமென்பதைக் கூறுகின்றார் இப்போது. முதலாவதாக, விருப்புடன் வழங்கல் வேண்டும். அதாவது அன்புடனும், ஈகையால் தனக்கும் நல முண்டென்ற நம்பிக்கையுடனும் கொடுக்கவேண்டும்; இதற்கு மாறான நோக்குடன், விருப்பின்றி வழங்கக்கூடாது. ஸமூகப் பழக்கத்தின் கொடுமையால் கொடுக்கவேண்டி வருகிறதே என்ற தயக்கத்துடன் கொடுக்கக்கூடாது. அதனால் ஈவோன், இரப்போன் என்ற இருவரது மனோநிலையும் துன்புறுகின்றதென்பதை யுணரவேண்டும். திருவுடன் வழங்கல் வேண்டுமென்பது, கஞ்சத்தன்மையை மேற்கொள்ளாமல், தனது செல்வ நிலைக்குத் தக்கவாறு பெருமனதுடன் கொடுக்க வேண்டுமென்பதைக் குறிக்கிறது. தான் வழங்கும் கொடை பெரிதேயாயினும், அதனினும் பெருங் கொடைகளை யனுசரித்து இது மிகச் சிறிதாயிற்றே, இன்னும் அதிகமாகக் கொடுக்க இயலவில்லையே என்ற நாணத்துடன் கொடுக்க வேண்டுமென்பதையே நாணத்துடன் வழங்கல்வேண்டு மென்பது உணர்த்துகிறது. இதுவே நெஞ்சத்தை இளகச்செய்து, தூய்மையை ஏற்கின்றது. எவ்வெவர்கட்கு எவ்வாறு கொடை வழங்குதல் வேண்டுமென்று விதிக்கப்பட்டுளதோ அவ்வாறு கொடுக்காவிடில் தீது வந்தடையுமென்ற அச்சத்துடன், முறைப்படி வழங்கவேண்டுமென்பதையும் வற்புறுத்தவே அச்சமுடன் வழங்கல் வேண்டும் என்று கூறினார். இந்த அச்சமும் தூய்மை நிலையை விரைவில் அடையச் செய்வதாகும். பகைமையை மனதில் வைத்துக்கொண்டு, வஞ்சகமாகத் தன் நலம் கருதிக் கொடுக்கும் ஈகை ஒருபோதும் நன்மை தாராதாகலின் நட்பு மனப்பான்மையுடன் கொடுக்கவேண்டுமென்று முடிவாக, நட்புடன் வழங்கல்வேண்டும் என்றார்.

இந்நோக்கில் இக்காலத்தில்தான் கொடுக்கும் நன்கொடைகள் மனத் தூய்மைக்கு எவ்வளவு தூரம் உதவுகிறதென்பதைச் சற்று சிந்தித்து நடைமுறையில் தம்மை மேம்படுத்திக்கொள்ள முயல்வார்களாக.

## அறிஞர் வழிபேணி ஐயங்களைதல்:

வாழ்க்கை நடைமுறையில் எத்துறையிலும் ஐயங்கள் எழுவது இயல்பு. இது நலம், இது தீது, இது எல்லோராலும் செய்யத்தக்கது, இது செய்யத்

தகாதது என்று எதையும் முடிவாகக்கூற இயலாது. இந்நிலையில், வாழ்க்கையின் மேம்பாடுகாண விரும்பும் ஒருவனுக்கு எதனை ஏற்பது என்ற ஐயமெழின், அந்நாட்டில் அவ்வழியிலுள்ள மறை அறிஞர் எவ்வாறு கூறுவரோ, எவ்வகையில் நடந்து கொள்வரோ அதனைப் பின்பற்றுவதே நன்மைதருமென்று கூறுகின்றார். இதுவே சிஷ்டாசாரமெனப்படும். அவ்வாறே, ஒருவனைக் குற்றவாளியென்றோ, துஷ்டனென்றோ பிறர் கூறுவதால் தானும் உடனே அவனை அவ்வாறு கொள்ளாமல், மறைஅறிஞர் அவன்பால் எவ்வகை நோக்குடன் எவ்வாறு நடந்து கொள்ளுகின்றனரோ அதனையறிந்து அதற்குத்தக தானும் அவனிடத்தில் நடந்து கொள்ளவேண்டும். காரணமின்றி ஒருவனைத்தூற்றி, அடாப்பழியேற்றிக்கூறுவது பொறாமைக்கயவர்களின் இயல்பு. அதனை நம்பி, அக்குற்றமுடையவர்களாக அவர்களை நாம் கருதுவதால், அவர்களின் தீது நம்மை வந்தடைவதுமன்றி வாழ்க்கைக் குறிக்கோளாகிய ஆன்மவுணர்வு நிலைக்கு அப்பால் இருப்போர் ஆகிவிடுவோம் என்பதை யுணரவேண்டும். ஐயந்தெளிய மறை அறிஞரின் வழி பின்பற்றுவதேன் எனின், அவர்கள், ஆழ்ந்த கருத்தினர், தீர ஆய்ந்தறியும் இயல்பினர்; நநீயுற்றோர் அனுபவம் நிறைந்திருப்பதால் உண்மையை உடனே அறியும் திறமையுள்ளவர்; நேர்மையில் உறுதிகொண்டோர் பிறரது போற்றல் தூற்றல்களைச் சிறிதும் பொருட்படாது, நேர்மை ஒன்றையே எதையும் தீர்மானிப்பதில் தமது [illegible]கோளாகக் கொண்டிருப்பவர்; கோடுமையில்லாதோர் இளகிய மனத்தினர்; ஒருவர் மீதும் வெறுப்பு, சினம் முதலிய கொடிய எண்ணங்கள் சிறிதும் இல்லாதோர்; அறவிருப்புடையோர் எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இன்றியமையாத அறநிலை நிலவவேண்டுமென்ற அவாவுடனே எதையும் செய்யும் இயல்பினர்; ஆகலின், மறைஅறிஞரின் வழிபின்பற்றினால் சிறிதும் தவறு செய்தற்கு இடமிராது என்றார்.

உபதேசமுடிவு கூறல்:

இதுவே உனது வாழ்க்கையில் நீ கைப்பிடித்து ஒழுகவேண்டிய முறையாகும்; நான் உனக்கு உபதேசிப்பது இதுவே; இதுதான் வேதத்தின் ஸாரமும், நன்கு அறியவேண்டுவதும்; இதுவே இறைவன் இருஷிகளின் வாயிலாக உலகவாழ்க்கையை மேற்கொண்டோரும் மற்றோரும் ஆன்மவுணர்வு நிலையை யடையத் தகுதி பெறுதற்கு இட்ட கட்டளை ஆகலி[ன்] இதன்படியான ஒழுக்கத்தை மேற்கொள்ளல் உனது கடமை. இதனினும் சீரிய முறைகாண இயலாது. இதுவே மேம்படுவதற்குத் தகுந்த ஒழுக்முறை யென்று ஆசான் தனது பொன்மொழிகளை சீடனுக்குக் கூறி முடித்தார்.] [11

## மன்னார்குடி மகாநாடு

தமிழ்நாடு 1950ஆம் அக்டோபர்ல் நடைபெறவிருந்த மகாநாடு நவம்பர்ம் கடைசி வாரத்தில் நடைபெறும். எல்லா ஆசிரியர்களும் கலந்துகொள்வதற்கு அவகாசம் அளிப்பதற்காகவே இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. மகாநாடு நடைபெறும் தேதி, இடம் முதலிய விஷயங்கள் அறிக்கைகள் மூலம் அறிவிக்கப்படும்.

[illegible]சுவாமி, தலைவர். N. S. வெங்கடேஸ்வரன், காரியதரிசி

Edited and Published by Sri A. K. S. Sarma, 87, Acharappan St., Madras
Printed by Sri A. R. Parthasarathy, at the Social Printers,
396, Mint St. Madras—1